# கர்த்தருடைய நாள்



இயேசு கிறிஸ்துவின் மறுவருகைப் பற்றிய ஆச்சரியமான உண்மைகள்!



**நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாக்குதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி** (தீத்து 2:13).

## மானிட சரித்திரத்தில் மாபெறும் விசேஷமான இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு வேறு எதையும் ஒப்பிட முடியாது.

நாம் அறிந்திருக்கிறபடி, இறுதியாக, அது இந்த உலகத்தின் முடிவினை கோடிட்டுக் காட்டுகிறது.

இயேசுவின் மறு வருகை நம்முடைய காலக்கட்டத்தின் இறுதி முடிவாக இருக்கிறது. எல்லாவற்றின் உச்சக்கட்ட முடிவாக அது இருக்கும். நிச்சயமான வெற்றி சிறக்கும் நாளின் அனுபவம், ஓங்கி வீசும் ஒலியின் இறுதி கட்டம், நாம் அறிந்த வண்ணம் அது எல்லாவற்றின் முடிவாக இருந்தாலும், இப்பொழுது நம்மால் முழுமையாக புரிந்து கொள்ள முடியவில்லை என்றாலும் அது ஏதோ ஒரு முற்றிலும் புதிய ஒன்றின் ஆரம்பமாயுமிருக்கும்.

இரண்டாம் வருகையில், எல்லாமே பெரும் இரைச்சலுடன் நின்று போகும் ஆனால் தேவனுடைய மக்கள் நித்தியத்தின் வாசலை கடக்கும் திறப்பிலே கடந்து செல்வார்கள் என்று வேதாகமம் முன்னுரைக்கிறது. இரண்டாம் வருகை நடைபெறும்போது மரித்த இரட்சிக்கப்பட்டவர்களின் உயிர்த்தெழுதலும் நடைபெறும், பின்பு உயிரோடிருக்கும் இரட்சிக்கப்பட்டோர் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவர் - மற்றும் உலகில் வாழும் துன்மார்க்கரின் மரணம் சம்பவிக்கும். இவ்வாறாக, இந்த நிகழ்வானது இன்னுமொரு நாட்காட்டியில் குறிக்கப்பட்டிருக்கும் சம்பவத்தைக் காட்டிலும் மிக அதிகமானது. இது இறுதியான ஆட்டத்தை மாற்றி அமைக்கும் நிகழ்வு!.

அதிசயவிதமாக, வேதாகமத்தில் 300 முறைக்கும் மேலாக இயேசுவின் வருகைப்பற்றி சொல்லியிருந்தாலும் அநேக சபைகள் இந்த பொருள்பற்றி அரிதாக பேசுகிறார்கள், மற்றும் அப்படியே பேசினாலும் சிதறியிருக்கிற அர்த்தமில்லாத இணைக்கப்படாத புதிரான பாகங்களின் சேகரிப்பாகத்தான் இருக்கிறது. மனுக்குலத்தின் மிக பெரும்பாலானோர், இவ்வளவு பெரிய சம்பவத்தின் வரலாற்றைப்பற்றி மிக சொற்பமாக அல்லது ஒருவருமே ஒன்றும் அறியாதவர்களாக இருக்கிறார்கள் என்பது துக்ககரமானது.

கிறிஸ்துவின் வருகை எவ்வளவு சமீபமாயிருக்கிறது என்பதை அறிய அநேக அடையாளங்களை அவர் கொடுத்திருந்தாலும் நிறையபேர் இந்த தெளிவான குறிப்பீடுகளை அறிய தவறுகிறார்கள். தங்களை கிறிஸ்தவர் என்று வெளிப்படையாக சொல்லிக்கொள்ளும் அநேகரும்கூட, இந்த இறுதிகட்ட வேளை ஒருபோதும் வராது என்பது போல காலச்சக்கரத்தில் உறங்கிக்கொண்டு தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனாலும், இயேசு தன்னுடைய மறு வருகையை உறுதியாக வாக்களித்திருக்கிறார். அவருடைய முதல் வருகையின் முன்னறிவிப்பு எப்படி துல்லியமாக நிறைவேறியதோ அப்படியே அவருடைய இரண்டாம் வருகையும் நம்முடைய நாட்களில் வேகமாக உணரப்படுகிறது. குழப்பமடைய இது நேரமல்ல, நாம் கேட்கவேண்டிய கேள்வி, "அவர் வருவாரா?" என்பதல்ல. மாறாக, "அவருடைய வருகையின் அடையாளங்கள் என்ன?" என்றுதான் கேட்க வேண்டும். "அது எப்படி சம்பவிக்கும்?" "நான் உண்மையில் தயாராயிருக்கிறேனா?"

இந்த கேள்விகளுக்கு பதிலளிப்பதே இந்த பத்திரிக்கையின் நோக்கம் - மற்றும் வேதவாக்கியங்களிலிருந்து கிறிஸ்துவின் இரண்டாம் வருகைப்பற்றிய உண்மைகளை எடுத்துரைப்பது மட்டுமல்லாமல் உங்களுடைய வாழ்க்கையில் நடைபெறப்போகும் இந்த மாபெரும் முக்கிய சம்பவத்துக்கு நீங்கள் எப்படி ஆயத்தமாகலாம் என்பதைக்காட்டுவது. உண்மையில் இரண்டாம் வருகையின் அனுபவத்துக்கு ஒவ்வொருவரும் ஒரு இருதயதுடிப்பு தூரத்தில்தான் இருக்கிறோம். ஏனென்றால் நாம் மரித்து மறுபடியும் நாம் உணர்வு கொள்ளும்போது சொல்லி முடியாத மகிமையுடனும், வல்லமையுடனும் வரும் சிருஷ்டிகரை முகமுகமாய் காணும் தருணத்தைப் பெறுவோம்.

அதனால் நமது தேவனை சந்திக்க ஆயத்தப்படுவோம்!

## இரண்டாம் வருகை

### வரையறை:

*இயேசு நிதர்சனமாக, தனிப்பட்டவிதத்தில், யாவரும் காணும்படி உலகத்திற்கு திரும்ப வரும்போதுதான் மனுக்குலத்தின் இறுதி நம்பிக்கையும் சுவிசேஷம் உச்சக்கட்டத்தை அடைவதும் நிகழ்கிறது. இது இரண்டாம் வருகை, கர்த்தருடைய நாள், மகிமையின் நாள், மற்றும் கிறிஸ்துவின் மறுவருகை என சுட்டிக்காட்டப்படுகிறது. தீர்க்கதரிசன நிறைவேற்றங்களும், உலகத்தின் நிகழ்வுகளும் இது சீக்கிரமே நிகழப்போகிறது என்பதைக் காட்டுகின்றன. அதன் சரியான நேரத்தை அறியாததினால் எப்பொழுதும் விழித்திருந்து ஆயத்தமாக இருக்கவேண்டுமென்று நமக்கு கட்டளை இடப்பட்டிருக்கிறது.*

**வேதாகமத்தில் "கர்த்தராகிய இயேசுவே, வாரும்" என்கின்ற (வெளிப்படுத்தின விசேஷம் 22:20) ஜெபத்துடன் முடிவுற்றாலும், இன்று சில வேதாகம ஆசிரியர்கள் மட்டுமே இரண்டாம் வருகைக்கு அதிக கவனம் செலுத்துகிறார்கள்.**








முகவுரை:
அழிவு வருவதை உரைக்கும் முன்னோடிகள் ____ பக்கம் 4

அத்தியாயம் 1: இரண்டாம் வருகையின் நிச்சயம் ____ பக்கம் 8
நீங்களோ அல்லது வேறு யாரோ எப்படி இயேசு மறுபடியும் வருகிறார் என்று நிச்சயமாய் அறிய முடியும்?

அத்தியாயம் 2:
இயேசுவின் வருகையின் அடையாளங்கள் ____ பக்கம் 12
யுத்தங்கள், யுத்தங்களின் செய்திகளிலிருந்து பஞ்சங்கள், வியாதிகள்வரை கேள்விப்படும்போது எல்லாவிதமான எச்சரிப்பின் அடையாளங்களையும் பார்க்கும் போது இரண்டாம் வருகை பற்றி நீங்கள் வியப்படைய வேண்டியதில்லை.

அத்தியாயம் 3: இரண்டாம் வருகையின் விதம் ____ பக்கம் 20
கிறிஸ்து எப்படி திரும்ப வருவார்? தவறான தகவல்களைத் தள்ளி வைத்துவிட்டு இயேசு எப்படி இவ்வுலகத்திற்கு திரும்ப வருவார் என்பதைப்பற்றி வேதாகமம் உண்மையில் சொல்லுவது என்ன என்பதைப் பாருங்கள்.

அத்தியாயம் 4:
இரகசிய எடுத்துக்கொள்ளப்படுதல் பற்றி என்ன? ____ பக்கம் 26
மிக அதிகமாக விற்கப்படும் புதினங்களிலிருந்து பெரும் செலவு செய்து எடுக்கப்படும் ஹாலிவுட் திரைப்படங்கள் வரை இரண்டாம் வருகையில் இந்த பூமியில் இருந்து மக்கள் உடனே மறைந்து விடுவார்கள் என சொல்லப்பட்டிருக்கிறீர்கள். வேதாகமம் என்ன சொல்லுகிறது?

அத்தியாயம் 5:
கிறிஸ்து திரும்ப வரும்போது என்ன நடைபெறுகிறது? ____ பக்கம் 32
இயேசு திரும்ப வரும்போது, உயிரோடு இருப்பவர்களுக்கும் கடந்த காலத்தில் மரித்தவர்களுக்கும் என்ன நடக்கும் - இரட்சிக்கப்பட்டோர், இரட்சிக்கப்படாதோர்? பதில் உங்களுக்கு ஆச்சரியமாயிருக்கும்!

அத்தியாயம் 6:
இயேசுவின் வருகைக்குப்பிறகு நடைபெறும் சம்பவங்கள் ____ பக்கம் 36
ஆயிரம்வருட அரசாட்சி பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள், ஆனால் இந்த 1,000 வருடங்களில் பரலோகத்திலும் பூமியிலும் உண்மையில் என்ன நடக்கிறது என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களா?

அத்தியாயம் 7:
இயேசுவின் வருகைக்காக ஆயத்தப்படுதல் ____ பக்கம் 42
இரண்டாம் வருகை எப்பொழுது, எப்படி நடைபெறும் என்பது பற்றி நீங்கள் இப்பொழுது அறிகிறீர்கள், ஏன் வருகிறார் என்பது பற்றி என்ன? மனுக்குலத்தின் வரலாற்றின் பெரும் சம்பவத்துக்கு இன்று நீங்கள் எப்படி ஆயத்தமாயிருக்க முடியும்?

உங்கள் கேள்விகள் பதிலளிக்கப்படுகின்றன ____ பக்கம் 46

இன்னும் அதிகமான ஆதாரங்கள் ____ பக்கம் 49


AMAZING FACTS India

**The Day of the Lord**

Amazing Facts About the Return of Jesus Christ!

**கர்த்தருடைய நாள்**

இயேசு கிறிஸ்துவின் மறு வருகை பற்றிய ஆச்சரியமான உண்மைகள்!

பதிவுரிமை ©2021, அமேசிங்க் ∴பாக்ட்ஸ் இன்டர்நேஷனல் எல்லா உரிமைகளும் பாதுகாக்கப்பட்டது.
இந்தியாவில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

**Bookstore.AFTV.in** என்கின்ற இணையதளத்திலிருந்து ஆச்சரியமான உண்மைகளையும் மற்றும் அதிகமான தகவல்களையும், வாழ்க்கையில் மாற்றம் தரும் கிறிஸ்தவ புத்தகங்களையும், பத்திரிகைகளையும் **DVD** களையும் பெறலாம்.

பரிந்துரைக்கப்பட்ட நன்கொடை 100 ரூபாய்.



# அழிவு வருவதை உரைக்கும் முன்னோடிகள்

**ஏறக்குறைய 2,000 ஆண்டுகளுக்கு முன்பாக, உலகத்தின் சக்தி வாய்ந்த சாம்ராஜ்யம் முற்றிலுமாக அழிக்கப்பட்டது. கி.பி.79 - ல் அழிவு பற்றி வெளிப்படுத்தப்பட்ட அந்த நாளிலே பழங்கால உலகில் நடைபெறவேண்டிய மோசமான பேரிடர்களில் ஒன்று பாம்ப்பீ என்கின்ற ரோம கடலோர பட்டணத்தில் நடந்தது. இருபத்து நான்கு மணி நேரத்துக்குள்ளாகவே கேவலமான உல்லாசப் பொழுதுபோக்கிடத்தின் பட்டணமும் அதின் மக்களும் பூமியில் இல்லாதபடிக்கு துடைத்தெறியப்பட்டன.**

மிகப்பெரிய எரிமலையின் நிழலில் வாழ்ந்திருந்த பாம்ப்பீயின் மக்கள் வரப்போகும் அழிவை உணர்த்தும் நிலநடுக்கத்தின் அதிர்வுகளை அறிந்திருக்க பழகியிருந்தார்கள். பதினேழு வருடங்களுக்கு முன்பதாக, ஒரு பூமியதிர்ச்சி பட்டணத்தின் அநேகரை நிலைக்குலைய வைத்து ஆயிரக்கணக்கானோர் விசாரத்துடன் அந்த இடத்தை விட்டு போய்விட்டனர். ஆனால் ஒரு காலக்கட்ட அமைதிக்குப்பின், அந்த அழகிய கடற்கரையோர பட்டணம் திரும்ப கட்டப்பட்டு ரோம பிரஜைகள் விடுமுறை ஸ்தலங்களாக மகிழ்வுற்றிருக்கும் ஆடம்பர ரோம இல்லங்களாக மீண்டும் நிரப்பப்பட்டது.

பிறகு அந்த இறுதி பேரழிவின் நாள் வந்தது. ஒரு வெளிச்சம் மிகுந்த அமைதியான காலை வேளையிலே, வேசுவீஸ் மலை திடீரென வேகமாக வெடித்து பயங்கரமான நெருப்புக்கோள மேகம் ஒன்று இலட்சக்கணக்கான எரிகின்ற எரிகற்களையும் உருகிய பாறைகளையும் கக்கியது, வியாபித்துப்பரவிய அனல் ஆயிரக்கணக்கானவர்களை நொடியில் எரித்துப்போட்டது. மற்றவர்கள் எரிவாயுவினால் மூடப்பட்டு சூடான சாம்பலால், அவர்களுடைய வேதனை நிறைந்த நிலையோடு இருபது அடிக்கு கீழே எரிமலை குழம்பினால் மூழ்கடிக்கப்பட்டனர்.

வேலையாட்கள் தற்செயலாக அழிந்துபோன பட்டணத்தின் எல்லைகளை தோண்டி பார்க்கும்வரை 1,500 வருடங்களுக்கு மேலாக அதன் இடிபாடுகள் தொடப்படாமலும் மறக்கப்பட்டும் இருந்தது. புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள், மெல்ல மெல்ல, அந்த பட்டணத்திற்குள் காணப்பட்ட பரவலான ஒழுக்கக்கேட்டை வெளிப்படுத்தும் துப்புகளை கண்டுபிடித்தனர். பரவலான களங்கமும், பேராசையும் இருந்ததற்கான ஆதாரங்கள் காணப்பட்டன. சுவர்களிலே காணப்பட்ட சுவரோவியங்கள் பாம்ப்பீ தவறான பழக்கங்களிலும் சிற்றின்ப நாட்டங்களிலும் அதிகமாக ஈடுபட்டிருந்த சோதோமோடு போட்டிபோடுவது போல இருந்தது. அந்த வேளையில் பலியானவர்கள் உறைந்து போயிருந்தனர், சிலர் இன்னமும் விலையேறப்பெற்ற ஆபரணங்கள் மற்றும் காசுகள் சிலைகளோடு ஒட்டிக்கொண்டிருந்தது. அவர்கள் எதை அதிகமாக விரும்பினர் என்பதை சொல்லாமல் சொல்கிறது.

பாம்ப்பீ நகர மக்கள் வரப்போகின்ற பேராபத்தைப்பற்றிய எச்சரிப்பின் அடையாளங்களைப் பெற்றிருந்தனர். ஆனால் அவர்கள் அவைகளை புறக்கணித்து மாண்டுபோயினர். இதே வண்ணமாக கிறிஸ்து வரும்போது நடைபெறும் வரப்போகும் அழிவுநாள் பற்றி வெளிப்படுத்தப்பட்ட அநேக அடையாளங்களை நாம் காண்கிறோம். உலகம் முழுவதிலும் திடிரென அழிவுவரும் என்பதை வேதாகமம் முன்னுரைக்கின்றது.

தங்கள் விரல்களில் தேவையில்லாமல் உலக ஆஸ்திகளை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு உலகளாவிய அழிவின்போது அநேகர் பலியாகும் அந்த வேளையில், அவருடைய வார்த்தைகளை விசுவாசித்து அந்த மாபெரும் வேளைக்காக ஆயத்தப்படும் மக்களுக்கு இயேசுவின் வருகை ஒரு மகிமை நிறைந்த நேரமாயிருக்கும். அந்த நாளிலே அவர்களுடைய கண்களை அவருக்கு நேராக சந்தோஷத்துடன் ஏறெடுப்பார்கள்.



## கர்த்தருடைய நாள்

2011- ல் ஜப்பான் நாட்டின் வடக்கிழக்கு கடற்கறை பகுதியில் ஒரு பெருத்த சுனாமி தாக்கவிருந்த நேரத்தில், அங்கு வசித்தவர்கள் உயர்வான இடத்துக்குப் போக கடைசிநிமிட எச்சரிப்பு கொடுக்கப்பட்டது. வரப்போகின்ற மாபெரும் அலை பற்றிய அறிவிப்புகளை செய்தியாக பளிச்சிட்டுக் காட்டினார்கள். வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்தவர்களை தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள காவல்துறை அதிகாரிகள் ஓடச்சொல்லி துரிதப்படுத்தினார்கள். இந்த எச்சரிப்பை அலட்சியப்படுத்தியவர்கள் முன் எப்பொழுதும் நேர்ந்திராத பேரழிவில் மாட்டிக்கொண்டார்கள்.

வேதாகமம், இந்த பூமி வரவிருக்கின்ற பெரும் அழிவை சந்திக்கப்போகும் நேரத்தைப்பற்றி எச்சரிப்பு கொடுக்கிறது. இந்த பேரழிவு ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும் வரப்போவது இல்லை. இந்த பூமியின் உருண்டை அஸ்திபாரங்கள் அசைக்கப்படும்படி இக்கிரகத்தின் ஒவ்வொரு மூலையும் பெருங்கேடு விளைவிக்கின்ற அதிர்ச்சி அலையால் தாக்கப்பட போகிறது. எந்த முன் எச்சரிப்பின் அமைப்பும் இந்த சம்பவத்தின் சரியான காலத்தை கணித்து சொல்ல முடியாது, கிட்டத்தட்ட எல்லாரையும் திகைப்பில் ஆழ்த்தும்படி திடீர் வலிமையுடன் வரும். அப்போஸ்தலர் பவுல் எழுதினார்:

> *"சகோதரரே, இவைகள் நடக்குங் காலங்களையும் சமயங்களையுங்குறித்து உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை. இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள். 'சமாதானமும் சவுக்கியமும்' உண்டென்று அவர்கள் சொல்லும்போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும்; அவர்கள் தப்பிப்போவதில்லை" (1 தெசலோனிக்கேயர் 5:1-3).*

எதிர்காலத்தில் வரப்போகின்ற இந்த கர்த்தருடைய நாள்பற்றி நாம் ஒன்றும் அறியாதபடிக்கு அந்தகாரத்தில் விடப்பட்டிருக்கிறோமா? இல்லவே இல்லை. உண்மையில், வேதாகமம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைபற்றியும் உலகத்தின் முடிவுபற்றியும் நிறையவே பேசுகிறது. வரப்போகிற மாபெரும் பயங்கரமான நாள் பற்றிய முன் எச்சரிப்புகளினால் வேதவசனங்கள் நிறைந்திருக்கின்றன. காலங்களின் அடையாளங்கள் மிக துல்லியமாக தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய முக்கிய அதிகாரங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வரப்போகும் அழிவின் அடையாளங்களை அலட்சியப்படுத்துகிறவர்களுக்கு கர்த்தருடைய நாள் இரவில் திருடன் வருகின்ற விதமாக இருக்கும். ஆனால், கிறிஸ்துவினுடைய வருகைப்பற்றி படித்தறிந்து தங்கள் வாழ்க்கைகளை ஆயத்தப்படுத்தும் மற்றவர்களுக்கு அது "ஆனந்த பாக்கிய" மாக இருக்கும். (தீத்து 2:13).

## விழித்திருந்து ஆயத்தப்படுங்கள்

உலகத்தின் கடைசி சம்பவங்கள் உங்களுக்கு தெளிவில்லாமல் இருக்கத் தேவையில்லை. விழித்திருந்து ஆயத்தமாயிருப்பவர்களுக்கு கர்த்தர் திருடனைப் போல வரமாட்டார்.

> *"சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே. நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்; நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே. ஆகையால், மற்றவர்கள் தூங்குகிறதுபோல நாம் தூங்காமல், விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக் கடவோம்" (1 தெசலோனிக்கேயர் 5:4-6).*

> *"அஸ்தமனமாகிறபோது, செவ்வானமிட்டிருக்கிறது, அதினால் வெளிவாங்கும் என்று சொல்லுகிறீர்கள். உதயமாகிறபோது, செவ்வானமும் மந்தாரமுமாயிருக்கிறது, அதினால் இன்றைக்குக் காற்றும் மழையும் உண்டாகும் என்று சொல்லுகிறீர்கள்.... வானத்தின் தோற்றத்தை நிதானிக்க உங்களுக்குத் தெரியுமே, காலங்களின் அடையாளங்களை நிதானிக்க உங்களால் கூடாதா?" (மத்தேயு 16:2,3).*

வரப்போகும் சோகம் நம்மை தாக்குவதற்காக நாம் ஆர்வத்துடன் காத்திருக்கும் வேளையில் கைகளைப் பிசைந்து கொண்டு தூக்கமில்லா இரவுகளை கழிக்கவேண்டும் என இந்த வாக்கியங்கள் ஆலோசனை சொல்லவில்லை. கிறிஸ்துவின் வருகைக்காக ஆயத்தப்படவேண்டுமென்பது நடைப்பெறப்போகும் அழிவினை அறிவிக்க உங்கள் வீட்டில் ஒரு எச்சரிப்பு செய்யும் முன் எச்சரிப்பு அமைப்பை பொருத்திக் கொள்ளவேண்டும் என்பது பற்றி அல்ல. அது, அவரின் வருகை எவ்வளவு சமீபத்தில் இருக்கிறது என்பதை வேதாகமத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் அடையாளங்களைக் குறித்து படிப்பதே ஆகும்.

அதைவிட முக்கியமானது, இந்த நெருக்கடியான வேளைக்கு ஆயத்தப்படுத்திக் கொள்ள உங்களுடைய இரட்சகரோடு அன்பான, கீழ்ப்படிதலுள்ள ஒரு உறவினை ஏற்படுத்திக் கொள்வதுதான் ஆயத்தமாகுதல் என்பது முதன்மையாக இருதயத்தைப் பொருத்த ஒன்று.

அநேகமாக ஜப்பானின் சுனாமி மற்றும் பாம்ப்பீ நகரத்தின் அழிவும் போலவேதான், நோவாவின் நாட்களில் ஆயத்தமில்லாதவர்களுக்கு திடிரென ஏற்பட்ட உலகளாவிய ஜலப்பிரளயம் நடந்தது. அந்த நாட்களில் நடந்தது பின் நாட்களில் நடப்பதற்கு ஒரு முன்னோடி என இயேசு விவரித்துச் சொன்னார்:

> *"அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர்தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள். நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும். எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண்கொண்டும் பெண்கொடுத்தும், ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள்; அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்" (மத்தேயு 24:36-39).*






## எது உண்மையில் முக்கியமானது?

கிறிஸ்துவின் வருகையின் நிச்சயம்பற்றியும், அடையாளங்கள் பற்றியும், எப்படி திரும்ப வருவார் என்பது பற்றியும் விவரித்துச் சொல்லி அந்த சம்பவத்துக்கு எப்படி ஆயத்தமாகலாம் என்பது பற்றியும் இந்த தலைப்பின் வேதாகம போதனைகளின் பொது பார்வையின் மூலம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் பொருள் பற்றியும் இந்தப் பத்திரிகை உங்களுக்கு அறிமுகப்படுத்தும்.

அவருடைய வருகை குறித்த பொதுவான தவறான கருத்துகளை இது எதிர் கொள்ளும். வஞ்சனைகள் இருக்கும் எனவும் அவருடைய வருகை பற்றி கள்ள தீர்க்கதரிசிகள் நம்மை குழப்ப முயல்வார்கள் எனவும் இயேசு எச்சரிப்பு கொடுத்தார். எல்லாவற்றிற்கும் மேலாக அந்த நாளுக்காக ஆயத்தப்பட வேண்டுமென அவசரமாக அவர் எச்சரிப்பு கொடுத்தார், அத்துடன் அவரை எப்படி சமாதானத்துடன் வரவேற்கலாம் என்றும் விளக்கமளித்தார்.

2011-ம் ஆண்டு மார்ச் 11-ம் தேதி மத்தியான வேளையில் ஆயுமி ஓசுகா என்னும் பெண்மனி தன்னுடைய மூன்று சிறு பிள்ளைகளுடன் அவர்கள் வீட்டில் விளையாடி கொண்டிருந்தபோது அவருடைய கணவர் வெளியிலிருந்து “உடனே அங்கிருந்து வெளியே போ!” என்று சத்தமிடுவதை அவள் கேட்டாள். அவள் வேகமாக தன்னுடைய மூன்று குழந்தைகளையும் தூக்கிக்கொண்டு அவளுடைய கணவரிடத்துக்கு ஓடினாள். எல்லாவற்றையும் தங்கள் பின்னால் விட்டுவிட்டு அவர்கள் காரில் தங்களை திணித்துக்கொண்டு பக்கத்தில் இருக்கும் ஒரு மலை உச்சிக்கு வேகமாக ஓட்டிச்சென்றனர், அதன் மூலம் அழிவுண்டாக்கும் சுனாமிக்கு அவர்கள் தப்பினர். அவள் வீட்டுக்கு திரும்பி வந்தபோது அவர்களுடைய அண்டைவீட்டார் அதே எச்சரிப்புகளுக்கு செவி கொடாமல் போனார்கள் என்பதைக் கண்டுபிடித்தாள். அவர்கள் தாமதித்து அதனால் அழிந்துபோனார்கள். உலகத்தின் பொருட்கள் எல்லாவற்றையும் அவளும் அவள் குடும்பமும் இழந்து போனாலும் அவள் சொன்னாள், “வாழ்க்கையில் எது முக்கியம் என இப்பொழுது உணர்ந்து பார்க்கிறேன்.”

இதனால்தான் சோதோமின் அழிவிற்கு தப்பிப்போக ஓடும் நேரத்தில் லோத்துவும் அவன் குடும்பத்தாரும் திரும்பிகூட பார்க்கக்கூடாது என தூதர்கள் கூறினர். லோத்தின் மனைவி அந்த எச்சரிப்பை தீவிரமாக எடுத்துக்கொள்ளவில்லை; அதனால் அவள் அழிந்துபோனாள். அதனால்தான் இயேசு தெளிவாக எச்சரித்தார், “லோத்துவின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்.” (லூக்கா 17:32).

இயேசுவின் சீக்கிர வருகையானது அழிவுக்குத் தப்பித்துக்கொள்வது பற்றி மட்டுமே அல்ல. எரிமலையினாலோ அல்லது ஜலப்பிரளயத்தினாலோ வரப்போகும் பேராபத்தை தவிர்ப்பதைக் காட்டிலும் அதிகமானது அது. கிறிஸ்துவின் வருகை என்பது, துன்மார்க்கத்தின் முடிவு, வருத்தத்தின் முடிவு, அநீதத்தின் முடிவு மற்றும் திகில் நிறைந்த சீர்குலைந்து போயிருக்கும் உலகத்தின் முடிவு. இரண்டாம் வருகை என்பது ஆயத்தமாயிருப்போருக்கு சந்தோஷத்துடன் கூடிய பெரும் ஒன்றிணைத்தலாக இருக்கும். எல்லாம் புதிதாக்கப்படும். துன்மார்க்கம் முழுமையாக அழிக்கப்படும்.

அந்த நாள் வருமுன்பதாக நீங்கள் உங்களையே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி, “என்னுடைய வாழ்க்கையில் எது உண்மையில் முக்கியமானது?”

## கர்த்தருடைய நாள்

### வரையறை:

*தேவன் நேரடியாக மனித நடவடிக்கைகளில் தலையிட்டு உண்மையுள்ள இஸ்ரவேலரை விடுவித்ததை குறித்து அடிக்கடி பேசப்பட்ட ஒரு பழைய ஏற்பாட்டு சொற்றொடர். தேவன் பூமியின் ராஜ்யங்களை தம் வசப்படுத்தி தம்முடைய ஜனங்களை கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் மீட்கும் மாபெரும் கடைசி நாளைக் குறிக்கிறது.*



உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள்மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்.

பூமியிலெங்கும் குடியிருக்கிற அனைவர்மேலும் அது ஒரு கண்ணியைப்போல வரும்.

ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷ குமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்.

லூக்கா 21:34-36



# இரண்டாம் வருகையின் நிச்சயம்

**கேப்டன் ஸ்காட் ஓ' கிராடியின் சண்டையிடும் ஜெட் விமானம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட போஸ்னியாவின்மேல் ஒரு ஏவுகனையால் தாக்கப்பட்டபிறகு பூமியை நோக்கி சுருண்டு விழ ஆரம்பித்தது. அவர் தன்னுடைய எ.ஃப்-16 (F-16) னுடைய நெம்புகோலை பிடித்து இழுத்து பாராச்சூட் வழியாக, ஒரு பயமுறுத்தும் வீர சாகசத்தின் ஆரம்பமாக எதிரியின் எல்லையில் குதித்தார். ஆறு நாட்களாக பூச்சிகளை சாப்பிட்டு மழைநீரைக் குடித்து அவர் உயிர்வாழ்ந்தார். பிடிக்கப்படுவதை தவிர்ப்பதற்காக புதர்கள் அடியில் மறைந்து கொண்டும் மற்றவர்கள் பார்க்க முடியாதபடிக்கு மண்ணினால் முகத்தை மூடிக்கொண்டும் இருந்தார். சில வேளைகளில் எதிரிவீரர்கள் அவர் மறைந்திருந்த இடத்துக்கு ஒரு அடிதூரத்தில் கடந்து சென்றனர்.**

ஓ'கிராடி, நான் உயிரோடிருப்பது அவர்களுக்குத் தெரியுமா? என வியந்தார். அவர்கள் அக்கறையாயிருக்கிறார்களா? அவர்கள் என்னைத்தேடி வருவார்களா? அவருடைய சோதனையை ஆரம்பித்த உடனேயே அமெரிக்க இராணுவம் மாபெரும், இலட்சக்கணக்கான டாலர் செலவில் அவரை தேடுவதற்கான முயற்சியில் இறங்கியது என்பது அவருக்குத் தெரியாது. ஒரு காலக்கட்டத்தில் அவருடைய நாடு அவர் ஒருவரைத் தேடமட்டுமே நாற்பது விமானங்களைப் பயன்படுத்தியது, இருந்தாலும் ஓ'கிராடி வியந்திருந்தார். எனக்காக அவர்கள் வருவார்களா?

இராணுவத்தின் நிறைய பிரிவுகளை பயன்படுத்தி ஒரு விரசாகச மீட்புப்பணி மூலமாக கடைசியில் ஓ'கிராடி மீட்கப்பட்டார். இதெல்லாம் எதிரிநாட்டில் சிக்கித் தவிக்கிற ஒரு வீரரை மீட்டெடுக்கத்தான்.



இதே போல தான் நாம் எதிரி எல்லையில் சிக்கித்தவித்துக் கொண்டிருக்கிறோம், சிலர் தேவன் நம்மை மறந்துவிட்டாரா என வியந்து கொண்டிருக்கிறார்கள்.

நிச்சயமாகவே இல்லை! கிறிஸ்து தமது மக்களை மறந்துவிடவில்லை. அவர் வாக்களித்திருக்கிறார், " வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒருமுனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்" (மத்தேயு 24:31).

இப்பொழுதும் தேவன் தம்முடைய பிள்ளைகளை மீட்டெடுக்க ஆயத்தங்களை செய்து கொண்டிருக்கிறார். அவர் சீக்கிரத்திலே மறுபடியும் வருகிறார்! ஆனால் நாம் எப்படி அவ்வளவு நிச்சயமாக சொல்ல முடியும்?



உலக சரித்திரத்தின் ஒரு பொதுவான, விரிவான மதிப்புரையில் வேதாகம புத்தகத்தில் இருக்கும் தானியேல் புத்தகம் இரண்டாம் அதிகாரத்தில் காணப்படும் தீர்க்கதரிசனம் முன்கூட்டியே ராஜ்யங்களின் எழுச்சி மற்றும் வீழ்ச்சி பற்றி வெளிப்படுத்துகிறது – எல்லாமே இரண்டாம் வருகையுடன் முற்றுப் பெறுகிறது. 2,600 ஆண்டுகளுக்கு முன்பாக இஸ்ரவேல் நாட்டை கைப்பற்றிய பழங்காலத்து பாபிலோனிய ராஜா விளங்கிக்கொள்ள முடியாத குழப்பமான ஒரு சொப்பணத்தைக் கண்டான். அவனுடைய சாஸ்திரிகளும் ஜோசியரும் அவனுடைய இரவுநேர சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்ல முடியாமல் போனபோது ஒரு எபிரெய கைதி தன்னிச்சையாக முன்னுக்கு வந்து, தேவனுடைய ஒத்தாசையுடன் ராஜாவின் சொப்பனத்துக்கு விளக்கம் சொன்னான், அதுவே உலக முடிவு வரைக்கும் இருந்த காலத்தின் ஆச்சரியமான ஒரு கண்ணோட்டமாக இருந்தது.

ராஜா நேபுகாத்நேச்சார், தானியேல் எனும் பெயர் கொண்ட யூத பணயக்கைதி, பல உலோகத்தினாலான மனிதன் பற்றி தான் கண்ட சொப்பனத்தை விளக்கிக் காட்டியதை மிகவும் ஆச்சரியத்தோடு கவனித்தான். சொப்பனம் பற்றி விளக்கம் கொடுக்க தேவனால் வாலிப தீர்க்கதரிசிக்கு நுண்ணறிவு வழங்கப்பட்டது:

*“ராஜாவே, நீர் ஒரு பெரிய சிலையைக் கண்டீர்; அந்தப் பெரிய சிலை மிகுந்த பிரகாசமுள்ளதாயிருந்தது; அது உமக்கு எதிரே நின்றது, அதின் ரூபம் பயங்கரமாயிருந்தது. அந்தச் சிலையின் தலை பசும்பொன்னும், அதின் மார்பும் அதின் புயங்களும் வெள்ளியும், அதின் வயிறும் அதின் தொடையும் வெண்கலமும், அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களி மண்ணுமாயிருந்தது.* (*தானியேல் 2:31-33*).

அதன் பிறகு, சிலையின் பொன்னாலான தலை கி.மு. 605 முதல் கி.மு. 539 வரை ஆட்சி செய்த பாபிலோனை சுட்டிக்காட்டியது என தானியேல் வெளிப்படுத்தினான். அடுத்து, பாபிலோனை மேற்கொண்டு கி.மு 539 முதல் கி.மு 331 வரை அரசாண்ட மேதிய பெர்சிய ராஜ்யத்தை வெள்ளியிலான மார்பும் புயங்களும் சுட்டிக்காட்டின என்பதை சரித்திரம் உறுதியாகக் கூறுகிறது. வெண்கலத்தாலான வயிறும் தொடைகளும் கிரீஸ் ராஜ்யத்தைக் குறித்தது. மகா அலெக்சாண்டர் பெர்சியர்களை வெற்றிகொண்டு கி.மு 331 முதல் கி.மு 168 வரையிலான கிரேக்க ஆளுகைக்கு வழிகோலப்பட்டது. அடுத்து, இரும்பினாலான கால்கள் இரும்பு போன்ற ரோம சாம்ராஜ்யத்தை அடையாளப்படுத்தியது. இது கிரேக்கத்தை கி.மு 168 – ல் வென்றெடுத்து உலகத்தை கி.பி 476 வரை கோலோச்சியது.

ரோம சாம்ராஜ்யம் சரிய ஆரம்பித்தபொழுது அது வேறொரு உலக வல்லமையால் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக, சிலையின் இரும்பும் களிமண்ணும் கலந்த பாதங்கள், இப்பொழுது நவீன கால ஐரோப்பா என்றழைக்கப்படும் அடுத்தடுத்து ஆக்கிரமித்த ஜெர்மானியக் குழுக்களை குறிக்கிறது. சார்ல்மான்னே, நெப்போலியன் மற்றும் அடோல்ப் ஹிட்லர் உள்ளடக்கிய அநேக ஆட்சியாளர்கள் முயன்று பார்த்தும் ஐரோப்பாவை ஒன்றிணைப்பதில் ஒருவரும் வெற்றிப்பெறவில்லை.

நேபுகாத்நேச்சாரின் சொப்பனம் எப்படி முடிந்தது?

*“நீர் பார்த்துக்கொண்டிருக்கும்போதே, கைகலால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டுவந்தது; அது அந்தச் சிலையை இரும்பும் களிமண்ணுமாகிய அதின் பாதங்களில் மோதி, அவைகளை நொறுக்கிப்போட்டது. அப்பொழுது அந்த இரும்பும் களிமண்ணும் வெண்கலமும் வெள்ளியும் பொன்னும் ஏகமாய் நொறுங்குண்டு, கோடைக்காலத்தில் போரடிக்கிற களத்திலிருந்து பறந்துபோகிற பதரைப்போலாயிற்று; அவைகளுக்கு ஒரு இடமும் கிடையாதபடி காற்று அவைகளை அடித்துக்கொண்டுபோயிற்று, சிலையை மோதின கல்லோவென்றால், ஒரு பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று”* (*தானியேல் 2:34,35*).

அவ்வளவு பெரிய வல்லமையோடு மோதி சிலையை உடைத்த “கைகளால் பெயர்க்கப்படாத” அந்தக் கல் யார்? அது “நித்திய கன்மலை”யாகிய இயேசு கிறிஸ்து (ஏசாயா 26:4 கடைசி வரி). தேவனுடைய குமாரன் இந்த பூமிக்கு வல்லமையோடு வரப்போகும் அந்த நேர்த்தியான கடைசி காலத்துக்கு நேராக சரித்திரம் நகர்கிறது. இந்த பெரும் அடையாளச் சித்திரமாகிய பாதங்களின் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை சரித்திர பாடப்புத்தகங்கள் உறுதியளிக்கின்றன. தேவன் தானியேல் மூலமாக முன்னறிவித்தது போலவே ராஜ்யங்கள் எழும்பியிருக்கின்றன, வீழ்ச்சியடைந்திருக்கின்றன.

நேபுகாத்நேச்சாரின் சொப்பனத்தின் கடைசி காட்சி தேவனுடைய ராஜ்யத்தின் வருகையே ஆகும். வேதாகம தீர்க்கதரிசனம் நம்பத்தகுந்தது என்று அது நிரூபிக்கிறது. அதனால் நாம் கடைசிக்காலத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நாம் நிச்சயமாக அறிந்து கொள்ளமுடியும். இயேசு சீக்கிரம் திரும்ப வருவார்!



பாபிலோனின் காலத்திலிருந்து சரித்திரத்தை வேதாகமம் துல்லியமாக முன் கூட்டியே பதிவிட்டிருக்கிறது- எந்த சரித்திர புத்தகத்தினாலும் தீர்க்கதரிசனம் உறுதிப்படுத்தப்படுகிறது. இயேசுவின் இரண்டாம் வருகைப்பற்றியும் சரியாகத்தான் இருக்கும் என நாம் நம்பலாம்!

தானியேல் 2 – ன் தீர்க்கத்தரிசன சிலை சரித்திரம் முழுவதும் அடையாளப்படுத்துகிற பூமியின் வெவ்வேறு ராஜ்யங்கள்

- பாபிலோன் கி.மு 605 - 539
- மேதியாபெர்சியா கி.மு 539 - 331
- கிரேக்கம் கி.பி 331 – 168
- ரோம் கி.மு 168 – கி.பி 476
- பிரிந்திருக்கும் ஐரோப்பா கி.பி 476 - இப்பொழுது வரை.



## “நான் மறுபடியும் வருவேன்”

ஏற்கனவே நிறைவேறின தீர்க்கதரிசனங்கள் இரண்டாம் வருகையின் நிச்சயத்தை உறுதிப்படுத்துவது மட்டுமல்லாமல், இயேசு தாமே தன்னுடைய வருகை குறித்து ஆணித்தரமான குறிப்புகளைக் கொடுத்திருக்கிறார். இவைகள் வெறும் குறிப்புகள் மட்டுமல்ல. அவருடைய சீஷர்களுக்கு பேசப்பட்ட நேரடியான வார்த்தைகள் எல்லா சந்தேகத்தையும் நீக்குகின்றன:

> *“உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்; என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்” (யோவான் 14:1-3).*

ஆச்சரியமான துல்லியத்துடன் இயேசு அவரது வருகையின் அடையாளங்களையும் முன்னறிவித்தார், அவரது வருகையின் சரியான விதம் மற்றும் உலகம் முடியுமுன்பதாக என்ன நடைபெறும் என்பதையும் முன்னறிவித்தார். சுவிசேஷங்களின் பெரும் பகுதிகள் இந்த பூமியின் கடைசி கால சம்பவங்கள் இரண்டாம் வருகையுடன் முற்றுப்பெறுகின்றன என்பதை எடுத்துக்காட்டுகின்றன. மத்தேயு 24, மாற்கு 13, மற்றும் லூக்கா 17,21 ஆகியவை காலங்களின் அடையாளங்களை வரிசைப்படுத்துகின்றன. விவேகமுள்ள, பொல்லாத ஊழியக்காரர்களின் உவமை, புத்தியுள்ள, புத்தியில்லாத கன்னிகைகள் உவமை, தாலந்துகளின் உவமை மற்றும் செம்மறியாடுகள் வெள்ளாடுகளின் உவமை போன்ற அநேக உவமைகளை ஜனங்கள் விழித்திருந்து அவருடைய வருகைக்கு ஆயத்தப்படும்படி இயேசு உற்சாகப்படுத்தினார். இயேசு பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது கூட தூதர்கள் காணப்பட்டு சீஷர்களுக்கு வாக்களித்தனர், “கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை, அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்” (அப்போஸ்தலர் 1:11).

### இரண்டாம் வருகையின் உவமைகள்

உண்மையுள்ள மற்றும் பொல்லாத ஊழியக்காரர்கள் மத்தேயு 24:45-51

புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத கன்னிகைகள் மத்தேயு 25:1-13

தாலந்துகள் மத்தேயு 25:14-30

செம்மறியாடுகளும், வெள்ளாடுகளும் மத்தேயு 25:31-46



## முதலாம் வருகை இரண்டாம் வருகைக்கு உத்தரவாதம் கொடுக்கிறது

2,000 வருடங்களுக்கு முன்பதாக இயேசு பூமியில் பெத்லகேமுக்கு முதல்முறை வந்ததற்கும் அவருடைய இரண்டாம் வருகைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. ஒரு இடையர் கூட்டத்தைக் கவர்வதற்காக மேசியா பரலோகத்தை விட்டுவிட்டு பூமிக்கு வரவில்லை. பாவத்தையும், மரணத்தையும் வெற்றி சிறப்பதே கிறிஸ்துவின் நோக்கமாயிருந்தது. “துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்” (கொலோசேயர் 2:15). இயேசு பிசாசின்மேல் தீர்க்கமான வெற்றியை காணவில்லையென்றால் இந்த கிரகத்திலிருந்து பிசாசின் ஆதிக்கத்தை ஒரேடியாக நசுக்குவதற்கும் எல்லாவற்றையும் புதிதாக்குவதற்கும் அவர் மறுபடியும் வருவார் என நாம் நினைப்பதற்கு வேறு என்ன காரணம் இருக்க முடியும்?

கர்த்தர் நமது உலகத்தை மறதியில் சுற்றவிடவில்லை. பூமியின் மேல் ஏதேனை திரும்பப்பெற நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான பெரும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர பரலோகம் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. எல்லா வருத்தங்களையும் முடிவுக்கு கொண்டுவந்து, உண்மையான நீதியை தருவதற்கும், ஆதாம், ஏவாள் விழுகைக்குப்பிறகு மனுக்குலத்தை நசுக்கின வலுசர்ப்பத்தை நசுக்குவதற்கும் இயேசு திரும்ப வருவார். “...அவர் தம்மை தாமே

பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார். கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காக காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்." (எபிரேயர் 9:26,28).

## மீண்டும் சொல்லப்படும் ஒரு வேதாகம கருப்பொருள்

வேதாகமம் ஏறக்குறைய 1,800 தீர்க்கத்தரிசனங்களைப் பெற்றிருப்பது உங்களுக்கு தெரியுமா? மற்றும் இயேசுவின் முதல் வருகையைப் பற்றிபேசும் ஒவ்வொரு பழைய ஏற்பாட்டு தீர்க்கத்தரிசனத்துக்கும், எட்டு தீர்க்கதரிசனங்கள் அவருடைய இரண்டாம் வருகையை முன்னறிவிக்கின்றன! கிறிஸ்துவின் வருகைபற்றிய குறிப்பீடுகள் வேதாகமத்தில் நூற்றுக்கணக்காண இடங்களில் வருகின்றன. வேதாகமத்தின் கடைசி வார்த்தைகள் கூட அவருடைய துரித வருகைப்பற்றி உறுதிப்படுத்துகின்றன. இயேசு சொன்னார், "மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்", அதற்கு அப்போஸ்தலனாகிய யோவான் கொடுத்த பதில், "ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்" (வெளிப்படுத்தின விசேஷம் 22:20).

அப்போஸ்தலனாகிய பேதுரு இரண்டாம் வருகை ஆதியிலிருந்தே முன்னறிவிக்கப்பட்டது என்று சொன்னார்:

> *"கர்த்தருடைய சன்னிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும், உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக்குணப்படுங்கள். உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்." (அப்போஸ்தலர் 3:19-21).*

ஆதாமுக்குப்பிறகு ஏழு தலைமுறைகள் மட்டும் வாழ்ந்த ஏனோக்கு கிறிஸ்துவின் வருகையை முன்னறிவித்தார்; "ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடும் கூடக் கர்த்தர் வருகிறார்" (யூதா 15). இயேசு பிறப்பதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பதாக தாவீது ராஜா தம்முடைய மக்களைக் கூட்டிச் சேர்க்க கர்த்தர் வருவார் என உரைத்தார்: " நம்முடைய தேவன் வருவார், மவுனமாயிரார்; அவருக்குமுன் அக்கினி பட்சிக்கும்; அவரைச் சுற்றிலும் மகா புசல் கொந்தளிப்பாயிருக்கும் " (சங்கீதம் 50.3).

அப்போஸ்தலனாகிய பவுல் தேவன் " ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்" (அப்போஸ்தலர் 17:31) என புறஜாதியாருக்குப் பிரசங்கித்தார். எபிரேயர் புத்தகத்தை எழுதியவர், "சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்." (எபிரேயர் 10:25) என விசுவாசிகளுக்குப் புத்தி சொல்லுகிறார்.

யாக்கோபின் புத்தகம் உறுதிப்படுத்துகிறது:

> *"சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான். நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே, சகோதரரே, நீங்கள் நியாயந்தீர்க்கப்படாதபடிக்கு ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள்; இதோ, நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார்." (5:7-9).*

மற்றும் யோவான் விசுவாசிகள் தைரியமாயிருக்க இப்படி ஒரு நிருபம் எழுதினார், "இப்படியிருக்க, பிள்ளைகளே, அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப்போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள்" (1யோவான் 2:28). பிற்பாடு அவர் கடைசிக்கால வெளிப்பாட்டை இந்த வார்த்தைகளால் சொல்ல ஆரம்பித்தார். "...இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமான ...இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக" (வெளிப்படுத்தின விசேஷம் 1:4,5). உண்மையில், இந்த முழு தீர்க்கதரிசன புத்தகமும் கருப்பொருளாகிய இரண்டாம் வருகையை சுட்டிக்காட்டுகிறது. "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது." (வெளிப்படுத்தின விசேஷம் 22:12).

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் கருப்பொருளுக்கு இந்த அளவு வேதாகமம் அர்ப்பணம் செய்வதை நாம் பார்க்கும்போது, நாம் இந்த பரிசுத்தப் பொருள் பற்றிப் படிக்க அதிகநேரம் செலவழிக்க வேண்டும்.



## இறுதி காலவியல்

### வரையறை:

*பூமியின் கடைசி கால நிகழ்வுகள் மற்றும் மனுக்குலத்தின் இறுதி முடிவு பற்றிய ஆய்வு. ஆங்கிலத்தில் எஸ்கட்டாலஜி எனப்படும் இந்தப்பதம் கிரேக்க வார்த்தையிலிருந்து "இறுதி" என பொருள்படும் எஸ்கட்டோல் மற்றும் "ஆய்வு" என பொருள்படும் - லாஜி என்கின்ற வார்த்தைகளின் சேர்க்கை.*

> "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு." (2 தீமோத்தேயு 2:15).



# இயேசுவின் வருகையின் அடையாளங்கள்

**அவர்கள் கவனிக்கவே இல்லை. அவர்களில் சிலர் அதை ஒரு நகைச்சுவை எனவும் நினைத்தார்கள். சியாங்க்ராய் பகுதியின் வட தாய்லாந்து மாகாணத்தின் ஒரு பள்ளிக்கூட விடுதியில், இளம் தொடக்கப்பள்ளி மாணவர்கள் ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலையில் தூங்கிக் கொண்டிருந்த வேளையில் ஒரு சாவுக்கேதுவான பயங்கரம் அவர்கள் மீது வந்தது. ஒரு பழுதான ஒளிரும் விளக்கு உடைந்து தீப்பிடித்தது என புலன் விசாரணையாளர்கள் நம்புகிறார்கள். தீப்பிழம்பு வேகமாக பரவியது, ஆனால் மாணவர்களில் சிலர் – ஐந்து வயது போன்ற இளம் சிறார்கள் - எழுப்பப்பட்டு அந்த அளவுக்கு வேகமாக ஆபத்தைப்பற்றிய எச்சரிப்பு கொடுக்க முடியாமல் போனது.**

த பாங்காக் போஸ்ட் என்கின்ற செய்தித்தாள் அறிவித்தது, “ இந்த சோகமான நிகழ்ச்சியிலிருந்து தப்பிய 11 வயது பெண் சுச்சாடா காங்க் - ஆர்சா…தன்னுடைய நண்பர்களை எழுப்பி தப்பியோடச் சொல்ல விரைந்து சென்றாள். ‘அவர்களில் அநேகர் என்னை நம்பவில்லை, திரும்ப தூங்க சென்றுவிட்டார்கள் ஆனால் மற்றவர்கள் தப்பிச்செல்ல போராடினார்கள்’ என்று சொன்னாள்.

குறைந்த பட்சம் பதினேழு இளம் மாணவர்கள் தீயில் மரித்தனர்.

நிச்சயமாகவே அது ஒரு சோக நிகழ்வுதான். ஆனால் கடைசி வினாடியில் கூட ஒரு எச்சரிப்பு ஒலித்தது, சிலர் கேட்கவில்லை அல்லது கேட்க முடியாமற்போயிற்று. அவர்கள் அந்த தூங்கும் அறையில் வாரக்கணக்கில் ஒருவேளை மாதக்கணக்கில் இருந்திருப்பார்கள். ஒவ்வொரு இரவும் அவர்கள் தூங்கச் சென்றார்கள் மற்றும் ஒருவேளை ஒருமுறைக்கும் அதிகமாக குறும்புக்கார பிள்ளைகள் அவர்களை எழுப்ப முயன்றிருப்பார்கள். அவர்களைச் சுற்றி இருந்த அறிகுறிகள் - பதற்றமான கெஞ்சல், ஒருவேளை இலேசான புகையின் வாசனை – எதுவுமே பதிவாகவில்லை.

உலகம் கடைசி நேரத்தை நெருங்கும் வேளையில் இப்படிப்பட்ட ஒரு அழிவு அதிவேகமாக பெரிதுப்படுத்தப்பட்டு மீண்டும் நடக்குமா? இலட்சக்கணக்கானோர் காலங்களின் அடையாளங்களை

**உலகம் கடைசி நேரத்தை நெருங்கும் வேளையில் இப்படிப்பட்ட ஒரு அழிவு அதிவேகமாக பெரிதுபடுத்தப்பட்டு மீண்டும் நடக்குமா?**



**மேலும், கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. (2 தீமோத்தேயு 3:1).**




புறக்கணிப்பார்கள் என்றும் அதே போன்ற சாவுக்கேதுவான விலையை கொடுப்பார்கள் என்றும் வேதாகமம் சொல்லுகிறது.

வேதாகம தீர்க்கதரிசனத்தைப்பற்றி நீங்கள் எந்த அளவு அறிந்திருந்தாலும் அல்லது ஒன்றுமே நீங்கள் அறியவில்லை என்றாலும், கிறிஸ்துவின் திரும்பவரும் தேதிகளை அநேகர் குறித்திருக்கின்றனர் என்பதைப்பற்றி நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். சிலர் அந்த முக்கியமான சம்பவத்திற்கான நாட்களை மீண்டும் மீண்டும் முன்னறிவித்தனர் – கடைசியாக சொல்லப்பட்ட அவைகளின் ஒவ்வொரு நாளும் தவறாக முடிந்தது. (நீங்கள் இதை வாசித்துக் கொண்டிருப்பீர்களானால் இயேசு இன்னமும் வரவில்லை என்பது பாதுகாப்பாக அனுமானிக்கப்படுகிறது.)

“இரகசிய எடுத்துக்கொள்ளல்” பற்றியும் உலகத்தின் முடிவுபற்றியும் விளம்பரம்படுத்த 2011 – ம் ஆண்டில் ஹெரால்டு காம்பிங்க் (Harold Camping) எனும் சுவிசேஷ வானொளி ஒலிப்பரப்பாளரின் சீஷர்களால் மதிப்பிடப்பட்ட 5 மில்லியன் டாலர் செலவிடப்பட்டது. எந்த சம்பவமும் நடைபெறவில்லை. காம்பிங்க் பின்னிரவு நேர தொலைக்காட்சி நகைச்சுவையாளராக கேலிப்பொருளாக மாறினார். அவரைப் பின் தொடருபவர்களும் அவருடைய வானொலி குழுவும் குறைந்து போயின, இரண்டு வருடங்களுக்குப்பிறகு காம்பிங்க் மரித்துப்போனார். (வரலாறு முழுவதும் தோல்வியடைந்த மற்ற முன்னறிவுப்புகளை பக்கம் 14 - ல் பார்க்கவும்).

மேலும், மற்ற தீர்க்கதரிசன தோல்விகளோடு பார்க்கப்படும்போது, இந்த தவறானது ஒரு பெரிய எண்ணிக்கையிலான மக்களை கிறிஸ்தவ விசுவாசத்தின் மேல் சந்தேகம் எழுப்பி சீக்கிரத்தில் நடைபெற இருக்கும் இரண்டாம் வருகையின் கொள்கையை பரிகாசம் பண்ண வைத்தது.




ஆனால் ஹெரால்டு காம்பிங்க் (Harold Camping) கூட மற்றும் தேதியை குறிப்பிட்ட மற்ற அநேகரும் ஒரு செயலை அறிந்திருந்தார்கள்: இயேசு உன்மையில் மறுபடியும் வருகிறார்! இயேசு தெளிவாக சொன்ன “அந்த நாளையும் அந்த நாளிகையையும்… ஒருவனும் அறியான்.” (மத்தேயு 24:36) இந்த வார்த்தைகளை அவர்கள் மறந்திருக்கலாம், ஆனால் அவருடைய வாக்குத்தத்தத்தை நினைவில் வைத்திருந்தார்கள். “நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்” (யோவான் 14:3)

இந்த பத்திரிகை தேதிகளைக் குறிக்காது. ஆனால் அவருடைய வருகையின் சரியான நேரத்தை ஒருவரும் அறியார் என்று சொன்ன அதே இயேசு, அவருடைய வருகையின் சமீபத்தை அறிந்து கொள்ளமுடியும் எனவும் அறிவித்தார்: “அத்திமரத்தையும் மற்றெல்லா மரங்களையும் பாருங்கள். அவைகள் துளிர்க்கிறதை நீங்கள் காணும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்றென்று அறிகிறீர்கள். அப்படியே இவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்போது, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்றென்று அறியுங்கள்.” (லூக்கா 21:29-31)

ஒரு 2010 சபையார் ஆராய்ச்சிமையத்தின் கணக்கெடுப்பு 50 சதவீத அமெரிக்க புரோட்டஸ்டன்ட் மக்கள் கிறிஸ்துவின் வருகை அடுத்த 40 வருடங்களுக்குள் நடைபெறும் என நம்புகின்றனர் என்பதை வெளிப்படுத்துகிறது. அந்த நாளையும் அந்த நாழிகையையும் ஒருவரும் அறியார் (மத்தேயு 24:36) என்று கிறிஸ்துவின் வருகையைப்பற்றி வேதாகமம் சொன்னாலும், நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக மக்கள் அப்படிப்பட்ட கணிப்புகளை சொல்ல சோதிக்கப்படுகிறார்கள்.

# வரலாறு முழுவதும் தோல்வியுற்ற கணிப்புகள்



**கி.மு. 2800** அசிரியன் களிமண் பலகையில் எழுதப்பட்டிருப்பது, "இந்த கடைசி நாட்களில் நமது பூமி சீர்குலைந்திருக்கிறது. உலகம் வேகமாக முடிவுக்கு வந்து கொண்டிருப்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன."



**கி.பி. 1000**
உலகம் ஜனவரி 1, 1000 அன்று அழிந்துவிடும் என போப் சில்வெஸ்டர் II கணித்துக் கூறினார்.



**1033**
கிறிஸ்துவின் மரணத்தின் 1000 வது ஆண்டில் அவருடைய வருகை இருக்குமென எங்கும் பரப்பப்பட்ட பொதுவான நம்பிக்கை இருந்தது.



**1284**
இஸ்லாம் மார்க்கம் துவங்கி 666 ஆண்டுகளுக்குப்பிறகு உலகம் அழியும் என போப் இன்னொசன்ட் III கணித்துச் சொன்னார்.



**1658**
இந்த உலகம் கிமு 5343 - ல் சிருஷ்டிக்கப்பட்டது மற்றும் 7,000 வருடங்கள் வரை இருக்கும் என கொலம்பஸ் உரிமை கொண்டாடுகிறார்.



**1844**
இயேசுவின் வருகை அக்டோபர் 22 காலக்கட்டத்தில் இருக்கும் என பாப்டிஸ்ட் பிரசங்கியார் வில்லியம் மில்லர் கணிக்கிறார்.



**1914**
கர்த்தரின் மாபெரும் நாள் அக்டோபரில் இருக்கும் என சார்லஸ் டேஸ் ரஸ்ஸல் (Charles Taze Russell) கணிக்கிறார்.



**1936**
எடுத்துக்கொள்ளப்படுதல் இந்த ஆண்டில் நிகழும் என ஹெர்பர்ட் டப்ள்யூ ஆர்ம்ஸ்ட்ராங்க் (Herbert W. Armstrong) கணிக்கிறார்.



**1962**
கிரகங்களின் சீரமைப்பு இந்த உலகத்திற்கு அழிவை கொண்டுவரும் என ஜீன் டிக்சன் (Jeane Dixon) கணிக்கிறார்.



**1967**
அணு தீயிலான பெரும் நாசம் இந்த ஆண்டில் நடைபெறும் என மரபு வழிபாட்டு தலைவர் ஜிம் ஜோன்ஸ் உரிமை கோருகிறார்.



**1981**
இந்த வருடத்தில் உலகம் முடிந்து விடும் என கல்வாரி சாப்பல் (Calvary Chapel)-ஐ சார்ந்த ச்சக் ஸ்மித் (Chuck Smith) கணிக்கிறார்.



**1982**
இந்த உலகம் அக்டோபர் அல்லது நவம்பர் மாதத்தில் முடிவுக்கு வரும் என பாட் ராபர்ட்சன் (Pat Robertson) கணிக்கிறார்.



**1994**
எடுத்துக்கொள்ளப்படல் செப்டம்பர் அல்லது அக்டோபரில் வரும் என ஹெரால்டு காம்பிங்க் உரிமை கோருகிறார்.



**1999**
நாஸ்டர்டாமஸ் (Nostradamus) மாகாணத்துக்கு "பயங்கரமான ராஜா" வருவார் என ஒரு கணிப்பு நிலவியது.



**2000** ஒய் டு கே (Y2K) கணிணியின் பிழையினால் பெரும் பேரழிவுகள் நடைபெற்று, நாம் அறிவது போல, அது உலக அழிவுக்கு வழிகோலும் என அநேகர் நம்புகின்றனர்.



**2007**
பூமியின் அழிவு, இம்முறை ஏப்ரல் 27-ம் தேதி நடைபெறும் என பாட் ராபர்ட்சன் மறுபடியும் கணித்துச்சொல்கிறார்.



**2011** எடுத்துக்கொள்ளப்படுதல் மே 21 அன்று நடைபெறும் மற்றும் உலகத்தின் முடிவு அக்டோபர் 21 அன்று நடைபெறும் என ஹெரால்டு காம்பிங்க் மறுபடியும் உரிமை கோருகிறார்.



**2012**
காலத்தின் முடிவு டிசம்பர் 21 அன்று நடைபெறும் என மாயன் நாட்காட்டி (Mayan Calender) கணித்து கூறுவதாக சிலர் உரிமை கோருகின்றனர்.



**2014/2015** நான்கு "இரத்த சந்திரன்கள்" கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைச் சுட்டிக்காட்டுகின்றன என்று ஜான்ஹாகி (John Hagee) என்பவரும் மார்க் பிலிட்ஸ் (Mark Blitz) என்பவரும் உரிமை கோருகின்றனர்.

துரதிஷ்டவசமாக, அவைகள் செயல்பட தவறியபோது இந்த தரிசனங்கள் வேதாகமத்தில் இருக்கும் விசுவாசத்தை அரித்துப்போட்டது.

# காலங்களின் அடையாளங்கள் என்ன?

இயேசு தன்னோடு கூட நெருங்கி இருந்தவர்களுக்கு அவர்களால் அவருடைய வருகை எவ்வளவு சமீபமாயிருக்கிறது என்று கூற முடியும் என்று சொன்னால், அவர் நன்கு பார்க்கக்கூடிய குறியீடுகளை கொடுத்தாரா – காலங்களின் அடையாளங்கள்? ஆம்! அவர் நிச்சயமாகவே கொடுத்தார்:

> *"ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் ...யுத்தங்களையும், யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; ....ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்."*
> *(மத்தேயு 24:4,6,7)*

ஒவ்வொரு பூமியதிர்ச்சியும், பஞ்சமும் அல்லது யுத்தமும் அவருடைய துரித வருகையின் குறிப்பிட்ட அடையாளம் ஆகாது. இயேசு இந்த பூமியில் நடந்த நாளிலிருந்தே கடந்த 2,000 ஆண்டுகளாக இந்த அழிவுகள் வழக்கமாகவே மீண்டும் மீண்டும் நடைபெறுவதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனாலும், இயேசுவின் வார்த்தைகளிலிருந்து அவர் வருகைக்கு சற்று முன்பதாக இந்த பேரழிவுகள் தீவிரத்துடன் அடிக்கடி சம்பவிப்பது வேகமாக அதிகரிப்பதை எதிர்பார்க்கலாம்.

இந்த அடையாளங்களில் சிலவற்றை விவரமாக பார்க்கலாம்....

# யுத்தங்களும் யுத்தங்களின் செய்திகளும்

தொலைக்காட்சியை இயக்கவைத்து விட்டு யுத்தங்களின் செய்திகளையும் உலகத்தில் எங்கோ ஓரிடத்தில் நடைபெறும் மோதல் செய்திகளையும் கேட்காமல் இருப்பது கடினம். ஒருவேளை சென்ற நூற்றாண்டு உலகத்தின் இரத்தக்கறை மிகுந்தவற்றில் ஒன்று எனக் கொள்ளும்போது, 100 மில்லியன் மக்களுக்கு மேலாக சொல்லப்பட்டிருக்கையில், இந்த புதிய ஆயிரமாவது ஆண்டின் ஆரம்பம் எந்த விதத்திலும் குறைந்தது அல்ல. உண்மையில், இந்த பகுதிகளில் கருத்து வேறுபாடு கொள்ளை நோய்போல தொடர்கிறது.

1. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் செப்டம்பர் 11, 2001-ல் நடைபெற்ற தீவிரவாத தாக்குதல் ஆப்கானிஸ்தான் மீது இராணுவ படையெடுப்புக்கு வழிவகுத்தது. 9/11 சம்பவத்தின் 18 மாதங்களுக்குப்பிறகு, துருப்புகள் ஈராக் மீது படையெடுத்தன. ஒவ்வொரு யுத்தமும் வருடக்கணக்கில் நீடித்தது - ஈராக்கில் எட்டு, ஆப்கானிஸ்தானில் பதிமூன்று – மற்றும் ஒவ்வொரு மோதலின் முடிவிலும் உடைபட்டுப்போன இடங்கள் தான் மிஞ்சின, ஆயிரமாயிரம் மரணங்களும், காயங்களும் நேரிட்டன என்று சொல்லத்தேவையில்லை.
2. 1950 கள் மற்றும் 1960 களில் நடைபெற்ற சுதந்திர இயக்கங்களினால் அப்பிரிக்காவின் துணை-சகாரா பகுதி ஓயாத யுத்தத்தைக் கண்டது. கடந்த முப்பது ஆண்டுகளில் ஒருசில நாடுகளைச் சொல்லப்போனால் சூடான், எத்தியோப்பியா, லைபீரியா, சோமாலியா மற்றும் சீய்ரா லீயான் போன்ற நாடுகளில் நடைபெற்ற இரத்தக்கறை படிந்த மோதல்கள் அதன் வடுவை விட்டுப்போயிருக்கின்றன. ருவாண்டாவில் ஹட்டு (Hutu) மற்றும் டுட்சி (Tutsi) மலைவாழ்பகுதி மக்களுக்கு இடையே நடைபெற்ற கொடூரமான யுத்தம் பத்தாயிரத்துக்கும் மேலானோரை கொன்று போட்டது. அநேக இடங்களில், துணை சகாரன் ஆப்பிரிக்கா எந்த நேரத்திலும் பற்றி எரியக்கூடிய ஒரு எரிபொருளாகவே காணப்படுகிறது.
3. எகிப்து, லிபியா மற்றும் மொராக்கோ இவைகளை உள்ளடக்கிய மத்திய கிழக்கு நாடுகள் வருடக்கணக்கில் யுத்தத்திலே குளிக்கவைக்கப்பட்டிருக்கின்றன. 2001-ன் "அராப் ஸ்ப்ரிங்" (Arab Spring) ஸ்தாபிக்கப்பட்ட எகிப்து, லிபியா மற்றும் டுனீசியா நாடுகளை கவிழ்த்துப் போட்டது மற்றும் சிரியாவிலும் ஏமனிலும் பெரும் உள்நாட்டுப் போர் நடை பெற வைத்தது. ஈராக் உள்நாட்டு கலகத்தால் கொந்தளிப்பில் இருக்கிறது. ஈரானுடைய அணு பேராசைகளால் அந்த பகுதி பெரும் அக்கறை கொண்டுள்ளது. இது அதனுடைய தலைவர்களை அழிப்பதற்கு கங்கணம் கட்டி கொண்டிருக்கும் நாடாகிய இஸ்ரவேலை மட்டுமல்ல, தேவைப்பட்டால் அதன்மீது படையெடுக்க தயாராயிருக்கும் அண்டை நாடாகிய சவூதி அரேபியாவையும் கவலையடைய வைத்திருக்கிறது.
4. தெற்கு ஆசியா: அணு சக்தி படைத்த நாடுகளாகிய இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்கும் இடையில் அவ்வப்போது மோதல்கள் வெடிக்கின்றனர். பாக்கிஸ்தானின் வடமேற்கு பகுதிகளில் தாலிபான் ஊடுருவகாரருடன் சண்டை தொடர்கிறது. தென் கொரியாவுக்கும் அணுபலம் வாய்ந்த வடகொரியாவுக்கும் இடையில் தொடர் மோதல்கள் நடைபெறுகின்றன.
5. மற்ற சச்சரவுக்குரிய வெப்பப்பகுதிகள் ஐரோப்பா மற்றும் எப்பொழுதுமே மோதல் இருந்து கொண்டிருக்கும் உக்ரெய்ன், இந்த நாட்டின் ஒரு பகுதி தான் ரஷ்ய பெடரேஷன் துருப்புகளால் விழுங்கப்பட்டது.



**1,000 -க்கும் மேலான தனித்தனி தீவிரவாத சம்பவங்கள் 2016-ம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் நடைபெற்றன.**

***"ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்" (மத்தேயு 24:7).***



**2016 வருட ஆரம்பத்தில் போன வருடத்தை விட 1,000 பேருக்கும் அதிகமானோர் கொல்லப்பட்ட 14-க்கும் மேலான யுத்தங்கள் உலகம் முழுவதும் நடைபெற்றன.**

யுத்தங்கள், மோதல்களின் அட்டவணை நிச்சயமாகவே ராஜ்யத்துக்கு "எதிராக ராஜ்யம் எழும்புகிறதை" வெளிக்காட்டுகிறது. "இஸ்லாமிய நாடு" என்றழைக்கப்படும் நாடுபோல நாடல்லாத நாடுகளிலிருந்து வேறொரு அச்சுறுத்தல் வருகிறது. எல்லா யுத்தங்களையும் ஒழிக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு ஒரு புனித யுத்தத்தை மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக நடத்துவதாக கூறி இந்த முகு தீவிரவாதிகளை ஊக்குவித்து ஐரோப்பாவையும், அமெரிக்கவையும் தாக்குவதற்கு தன்னை ஒப்புக்கொடுத்திருக்கிறது.

இப்பொழுது வேகமெடுத்திருக்கும் "யுத்தங்களும் யுத்தங்களின் செய்திகளும்" கற்பனையானது அல்ல – அது உண்மையே. 2016 உலக மனிதநேய சம்மேளத்தின் கூற்றுப்படி, ஒரு கணக்கிடப்பட்ட "1.5 பில்லியன் மக்கள் வன்முறை மோதல்களினால் வெறிச்சோடிய பகுதிகளில் வாழ்கின்றனர், அவர்களுக்கு ஏற்பட்ட சேதம் உலக பொருளாதாரத்தின்படி ஒரு வருடத்துக்கு 14.3 டிரில்லியன் அமெரிக்க டாலர் என மதிப்பிடப்பட்டுள்ளது." அதே அறிக்கை சுட்டிக்காட்டியது "யுத்தங்களினாலும், இயற்கை அழிவுகளினாலும், மற்ற நெருக்கடிகளினாலும் 30 மில்லியன் குழந்தைகளுக்கு மேலாக வீடற்றவர்களானார்கள்". இந்த எண்ணிக்கை இரண்டாம் உலக யுத்தத்துக்குப்பிறகு மிக உயர்ந்ததாகும்.



"எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும்." (2 திமோத்தேயு 3:2). பெற்றோரின் அதிகாரத்துக்கும் பெரியவர்களுக்கு செலுத்தப்படும் மரியாதைக்கும் காட்டப்படும் அலட்சியம் நாம் முடிவு காலத்தில் வாழ்கிறோம் என்பதைக் காட்டும் இன்னுமொரு அத்தாட்சி.

## பஞ்சங்கள்

யுத்தம் நடைபெறும்போது பொதுவாகவே பஞ்சம் தொடர்கிறது. உதாரணத்துக்கு, ஈராக்கிலிருந்தும் சிரியாவிலிருந்தும் வரும் லட்சக்கணக்கான அகதிகள், அகதிகள் முகாம்களிலோ அல்லது ஐரோப்பா மற்றும் இதர நாடுகளுக்கு நீண்டபயணமாக செல்லுபவர்களிலோ ஊட்டச்சத்து இல்லாதவர்கள் அவ்வப்பொழுது காணப்பட்டார்கள். ஐக்கிய நாடுகள் உலக உணவு திட்டம் சொல்லுகிறது "ஏறக்குறைய 795 மில்லியன் மக்கள் இந்த உலகத்தில் போதுமான உணவு இல்லாமல் இருக்கின்றார்கள்.... இது உலக மக்களின் ஒன்பதில் ஒரு பாகமாகும்." உணவு வழங்குவதில் ஏற்படும் ஒரு திடீர் தடையானது ஒரு மாபெரும் பஞ்சத்தில் முடியும்.

*"உங்கள் வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாய்ப் பிடிக்கப்பட்டு கூக்குரலிடுகிறது....பூமியிலே நீங்கள் சம்பிரமமாய் வாழ்ந்து, சுகபோகத்தில் உழன்றீர்கள், கொழுத்தவைகளை அடிக்கும் நாளில் நடக்கிறதுபோல உங்கள் இருதயங்களைப் போஷித்தீர்கள்....உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள், கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே." (யாக்கோபு 5:4,5,8).*

## வியாதியும் கொள்ளை நோய்களும்

"கடுமையான எச்சரிப்பு ஒன்றை என்னை கொடுக்க விடுங்கள். வெளியில் தெரிகின்ற மற்றும் வெளியில் தெரியாத தொற்று நோய்களிலிருந்து அதிகதிகமாக ஒரு நாடக பாணியில் மீண்டும் எழுச்சிகாட்டி பயமுறுத்துகின்ற ஒன்றை நாம் இப்பொழுது பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்த உலகம் இதை சமாளிக்க தயாராக இல்லை". இதனை உலக சுகாதார அமைப்பினை தலைமை தாங்குகிற ஒரு மருத்துவரான மருத்துவர் மார்கரட் சான் (Margaret Chan) என்பவர் அறிவித்தார்.

2016-ல் சிக்கா தொற்று நோயின் அதிவேக பரவல் குறித்து வெளிவந்த தலைப்புச் செய்திகள் இந்த அச்சுறுத்தலுக்கு வலுவூட்டுகின்றன. இந்த தொற்று பலவீனப்படுத்தி பிறவிக்குறைபாடுகளை உருவாக்க காரணமாயிருக்கும் மற்றும் இது ஒருவித கொசுவகையினால் பரப்பப்படுகிறது; கோடை கால ஒலிம்பிக் நேரத்தில் எங்கெங்கும் பெரும்பீதியை கிளப்பிவிட்டது.

ஏறக்குறைய 2014 முழுவதும் சர்வதேச தலைப்புச் செய்திகள் கிழக்கு ஆப்பிரிக்காவில் வெகுவாய் பரவிய எபோலா தொற்று நோய் பற்றியே இருந்தது. அது வேகமாக 11,000 க்கும் மேலானோரை கொன்று போட்டது. தீவிர நோய் பரவல் பகுதிகளுக்கு வெகு தொலைவில் இருந்தவர்களுக்கும் தொற்று கண்டறியப்பட்டு உலகமெங்கும் பெரும்பீதியின் அலைகள் உருவாயின.

1918 - ம் வருடத்தின் விஷக்காய்ச்சல் நெருக்கடி ஒரு வருடத்தில் 25 மில்லியன் மக்களை பலி வாங்கியது. 1980 - ல் ஆரம்பித்து இன்னமும் தொடரும் எய்டஸ் நோய் போல மற்ற வேகமாய் பரவும் நோய்கள் சோகமான பின்விளைவுகளை கொண்டு வந்தன.



**2014-ம் ஆண்டின் முடிவில் 842 மில்லியன் மக்கள் ஊட்டச்சத்து இல்லாததால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தனர்.**

## இயற்கை பேரழிவுகள்

மைக்கேல் ஸ்நைடர் (Michael Snyder) என்பவர் தன்னுடைய உன்னதமான "பொருளாதார சரிவு" என்கின்ற வளைப்பதிவில் 2016 – ல் நாற்பது எரிமலை வெடிப்புகளினாலும் ஒருமாத காலத்தில் 3,000க்கும் மேற்பட்ட பூமியதிர்ச்சிகளினாலும் பூமியின் மேலோடு "பெரும் ஸ்திரத்தன்மை"யற்றதாக மாறிக்கொண்டிருக்கிறது என குறித்து வைத்தார். அவர் எழுதினார், "அமெரிக்காவின் மொத்த மேற்கு கடற்கரைப் பகுதியும் நில நடுக்கம் சார்ந்த பகுதி என அழைக்கப்படும் நெருப்பு வளையத்தில் அமைந்துள்ளது மற்றும் கிட்டதட்ட ஒவ்வொறு மற்ற நெருப்பு வளையத்தின் பகுதியும் வாழ்க்கைக்கு ஆபத்தானதாக இருக்கிறது.

ஒரு பூகம்பம் அல்லது ஒரு பெருத்த எரிமலை வெடிப்பு ஏற்பட்டால் பேரழிவை நிமிடத்தில் கொடுக்கும். சான்/பிரான்சிஸ்கோ பே பகுதியில் வசித்தவர்கள் 1989 ஆம் ஆண்டு ஒரு அக்டோபர் மாத மாலை வேளையில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியினால் திடுக்கிட்டுப் போயினர், 67 பேரை அது கொன்று ஒரு பெரிய பாலத்தை உடைத்துப்போட்டு பில்லியன் டாலர்களுக்கு மேலான சேதத்தை உண்டாக்கியது.

ஆறு வருடங்களுக்குப் பிறகு ஜப்பானின் ஒசாக்கா-கோப் பகுதி 6.9 பரிமாணம் கொண்ட ஒரு பூமியதிர்ச்சியால் அதிரவைக்கப்பட்டு



**"பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டா-கும்" (மத்தேயு 24:7).**

வேதாகமம் எச்சரிக்கிறது, "ஜாதிகள் கோபித்தார்கள், அப்பொழுது உம்முடைய கோபம் மூண்டது; மரித்தோர் நியாயத்தீர்ப்படைகிறதற்கும்...... (தேவன்) பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுக்கிறதற்கும், காலம் வந்தது" (வெளிப்படுத்தின விசேஷம் 11:18). இந்த கிரகத்தை அலட்சியப்படுத்தி அதனை சூறையாடுபவர்கள் கடைசி நாட்களில் கணக்கொப்புவிக்க வேண்டியவர்களாக இருப்பார்கள்.

ஆயிரக்கணக்கானோர் மாண்டனர். மற்றும் 2011-ல் வடக்கு ஜப்பானில் ஏற்பட்ட ஃபுக்குஷிமா (Fukushima) பூகம்பம் அணு விபத்தினை ஏற்படுத்தி சாவுக்கேதுவான கதிர்வீச்சை பரப்பி அதனால் 1,000 மரணங்கள் சம்பவித்தன.

இந்த பூமியதிர்ச்சிகள் அடிக்கடி நிகழ்வது அதிகமாகிக்கொண்டிருக்கின்றன மற்றும் சிலர் அதனுடைய தீவிரமும் அதிகமாகிறதை கவனிக்கின்றனர் மற்றும் ஃபுக்குஷிமாவில் பார்க்கப்பட்டது போல பூமியதிர்ச்சியினால் ஏற்பட்ட சேதாரத்தை அதை அடுத்து வந்த சுணாமி அல்லது கண்டத்தட்டு இயக்கவியல் மாற்றத்தால் ஏற்பட்ட இணையான அழிவோடு ஒப்பிட்டு பார்க்கும்போது அது ஒன்றுமில்லை.

## தார்மீக சரிவு

அவருடைய வருகையின் நாளையோ அல்லது நாழிகையையோ ஒருவனும் அறியான் என்று இயேசு தன்னுடைய சீஷர்களுக்குச் சொன்னார், மேலும் சொன்னார், “நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷ குமாரன் வரும் காலத்திலும் நடக்கும்” (மத்தேயு 24:37).



நோவாவின் நாட்களில் எப்படியிருந்திருக்கும்? ஆதியாகமம் 6-ம் அதிகாரத்தில் வேதாகமம் அறிவிக்கிறது, “மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, பூமியானது தேவனுக்கு முன்பாகச் சீர்கெட்டதாயிருந்தது, பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது. தேவன் பூமியைப் பார்த்தார், இதோ அது சீர்கெட்டதாயிருந்தது, மாம்சமான யாவரும் பூமியின்மேல் தங்கள் வழியைக் கெடுத்துக்கொண்டிருந்தார்கள்” (ஆதியாகமம் 6:5,11,12).

இது இன்றைக்கு நடந்து கொண்டிருப்பதை வெகு தூரம் சென்று பார்க்கவேண்டிய அவசியமில்லை. ஒரு சில வருடங்களில், நினைத்துப் பார்க்க முடியாததெல்லாம் அநேக சமுதாயங்களில் நடைபெற்றிருக்கின்றன. உலகத்தைச் சுற்றி அரசாங்கங்கள் தேவனின் மூல வடிவமைப்புக்கு வெளியே திருமணங்களை சட்டப்பூர்வமாக்கியிருக்கின்றன. பாலியல் அநீதி வெளிப்படையாக நடத்தப்படுகிறது, அதற்கு சமுதாயத்தில் பெரும்பாலும் தேவையும் ஒப்புதலும் கோரப்படுகிறது.

விவாகரத்து படுவேகமாக நடக்கிறது மற்றும் பொரும்பாலான நாடுகளில் தாலிகட்டி வாழ்க்கை நடத்துவதைக்காட்டிலும் அநேக தம்பதிகள் திருமணம் ஆகாமலேயே ஒன்றாக வாழ்கின்றனர். பாரம்பரிய கலாச்சாரமாகிய தாய் தந்தை என்றில்லாமலே நிறைய குழந்தைகள் முன்பைக் காட்டிலும் அதிகமாக பிறக்கின்றனர்.

எவ்வளவாய் கடைசி அடையாளங்கள் அதிவேகமாக நிறைவேறிக்கொண்டிருக்கின்றன என்பதை அதிகமாக நாம் நினைத்துப்பார்க்கத் தேவையில்லை. தாம் உருவாக்கி, நேசித்து அவர்களை மீட்டெடுக்க தமது குமாரனையே அனுப்பிய தேவன் உலக அரங்கில் செயல்பட ஆயத்தமாயிருக்கிறார் என்பதை நாம் அறிய முடிகிறது.

ஆனால் நோவாவின் நாட்களைப்போல இம்முறை வெள்ளப் பெருக்கினால் இருக்காது – அவரை நம்பின பிள்ளைகளுக்கு புதிதான ஒன்றை ஸ்தாபிக்க அது கிறிஸ்துவின் வருகையாக இருக்கும். இனிமேலும் பஞ்சம், நோய் அல்லது அழிவு சமுதாயங்களில் இருக்காது. “இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை” (மீகா 4:3)

எப்படிப்பட்ட மகிமை நிறைந்த நாளாய் அது இருக்கும்!



**அவருடைய வருகைக்கு சற்று முன்பதாக கடைசி நாட்கள் இவைகளைக் காணும் எனவும் இயேசு சொன்னார்....**

*கள்ளக் கிறிஸ்துவும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் (மத்தேயு 24:5, 11)*

*கிறிஸ்துவின் பின்னடியார்கள் பகைக்கப்பட்டு கொலை செய்யப்படுவர் (வசனங்கள் 9,10)*

*அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம் (வசனம் 12)*

*சுவிசேஷம் பூலோகமெங்கும் பிரசங்கிக்கப்படும் (வசனம் 14)*

*மிகுந்த உபத்திரவம் (வசனம் 21)*

*சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக்கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் விழும் (வசனம் 29)*



**எவ்வளவாய் கடைசி அடையாளங்கள் அதிவேகமாக நிறைவேறிக்கொண்டிருக்கின்றன என்பதை அதிகமாக நாம் நினைத்துப்பார்க்கத் தேவையில்லை. தாம் உருவாக்கி, நேசித்து அவர்களை மீட்டெடுக்க தமது குமாரனையே அனுப்பிய தேவன் உலக அரங்கில் செயல்பட ஆயத்தமாயிருக்கிறார் என்பதை நாம் அறிய முடிகிறது.**

# இறுதி தீர்ப்பு நாள் அறிவியல்

**அறிவியல் கண்டுபிடிப்பு, தொழில்நுட்பசக்தி மற்றும் அறிவியல் புனைக்கதையின் படைப்பாற்றலின் தொடுதல் இவையெல்லாம் வாழ்க்கை நமது கிரகத்தில் சீக்கிரமே முடிவடையும் என சிலரை முன்னறிவிக்கவைக்கின்றன, நாம் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும் - அடித்தள இல்லை-வாதிகளையும் சேர்த்து உலகத்தின் நிறையபேர் நாம் கடைசி நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கலாம் என்பதை நம்புகின்றனர். இறுதி தீர்ப்பு நாள் பற்றிய சில பொதுவான கோட்பாடுகளில் சிலவற்றை கீழே காணலாம்:**

**அணு தீயினால் பெரும் நாசம் -** ஒரு சிறிய முரட்டு நாடு அல்லது குழு செரிவூட்டப்பட்ட அணுசக்தி பொருளை பெற்று உலகம் முழுவதுக்கும் பதற்ற நிலையை ஏற்படுத்தி பூமியின் எல்லா உயிர்களையும் முடிவுக்கு கொண்டு வரலாம் என்கின்ற கருத்தை முதன்மையாக முன் வைத்து அணுசக்தி விஞ்ஞானிகளின் அறிவிப்பு இறுதி தீர்ப்பு நாள் கடிகாரத்தை ஜனவரி 22, 2015 அன்று நடு இரவுக்கு மூன்று நிமிடங்கள் முன்பதாக குறித்தது.

**சீதோஷன நிலை மாற்றம் -** சில விஞ்ஞானிகள் மனிதனால் உருவாக்கப்பட்ட புவி வெப்பமயமாகுதல் எதிர்கால பூமியின் உயிர்களுக்கு பயமுறுத்தலாக இருக்கிறது என எச்சரிக்கின்றனர், மக்கள் வாழக்கூடிய நிலம் காணமற்போகும் அதனால் அழிவுக்கேதுவான ஆயுதமேந்திய சண்டைகள் வளங்களை கைப்பற்ற நடைபெறும்.

**பெரும் எரிமலைகள் -** மிகப்பரந்த வெடிப்புகள் தீப்பிழம்புகளை வெளிக்கக்கி பூமியின் சீதோஷன நிலையையே மாற்றிப்போட்டு கோடிக்கணக்கானோரைக் கொன்று போடும். மாபெரும் எரிமலை வெடிப்புகள் யெல்லோஸ்டோன் (Yellow stone) ஊரில் உண்டாகி பெரும்பாலான வட அமெரிக்காவை அழித்துப்போடும் என சில பூகோள நிபுணர்கள் சொல்கின்றனர்.

**மறைந்து கொண்டிருக்கும் வளங்கள் -** ஜனத்தொகையின் பெருக்கம் மற்றும் கட்டுப்பாடற்ற நுகர்வுதலினாலும், சில விஞ்ஞானிகள் இந்த பூமியில் 2,100 க்கு மேல் உணவு கிடையாமையும் மற்ற வளங்களின் குறைவும் மனித உயிர் வாழுதலுக்கு கேடாக உருவாகும் என நம்புகின்றனர்.

**பேரழிவை ஏற்படுத்தும் சிறுகோள்களின் பாதிப்பு –** சில விஞ்ஞானிகள் அடுத்த 850 வருடங்களில் விண்கோள் ஒன்று பூமியைத் தாக்குவதற்கான யதார்த்தமான வாய்ப்பு இருக்கிறது என்றும் அதனால் பூமியின் எல்லா உயிர்களும் அழிக்கப்படும் என்றும் சொல்லுகின்றனர். நட்சத்திர வீழ்ச்சி, கடந்து போகும் கரும்புள்ளிகள், காமா கதிர்வீச்சு மற்றும் விண்மீன்களின் மோதல்கள் இப்படிப்பட்ட மற்ற விண் சார்ந்த பிரச்சனைகளும் அடங்கும்.

**மிகப் பெரிய பூமியதிர்ச்சிகள் -** ஏப்ரல் 2015 நேப்பாள பூமியதிர்ச்சிக்குப் பிறகு, 8.1 அளவு நில நடுக்கம் 9,000 பேர்களை கொன்று போட்டது போல 32 முறைக்கும் மேலான சக்திவாய்ந்த மிகப்பெரிய பூமியதிர்ச்சிகள் ஏற்படும் என நிலநடுக்க நிபுணர்கள் கணிக்கின்றார்கள். அப்படிப்பட்ட பெரிய அதிர்ச்சிகள் அழிவை ஏற்படுத்தும் மகா பெரிய சுனாமிகளை உருவாக்கி ஒட்டுமொத்த கடற்கரையோர பட்டணங்களையும் கவிழ்த்துப்போடும்.

**பெரிய உறைதல்/நெறுப்புயல் -** சூரியன் மெல்ல வியாபித்து ஒரு சிகப்பு ராட்சனாக மாறும், அதனால் 7.6 பில்லியன் ஆண்டுகளில் பூமியன் வெளிப்புற பகுதி தள்ளப்பட்டு ஒரு மாபெரும் பனிக்கட்டியாக மாறும் - அல்லது அதனை ஒரு எரிகின்ற உலைக்குள் இழுத்துக்கொள்ளும் முன்பாக அது வெறுமனே சாவுக்கேதுவாக எரித்துப்போடும்.

**சர்வதேச நோய்த் தொற்று பரவல் -** அதிகமாக பரவக்கூடிய நோய்க்கிருமிகள் மற்றும் மரபணு சிதைத்தல் தவறாக பொது மக்கள்மேல் பிரயோகிக்கப்பட்டுவிட்டால் இது உலகளாவிய பெரும் பரவலாக முடியும் என சில விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.

**சூரியப் புயல்கள் -** சூரியனில் இருந்து வரும் அதிகமான காந்த சக்தி சூரிய சக்தியைத் தகர்த்தெரிந்து, எல்லா கணினிகளையும், மின்சார கட்டுப்பாட்டு சாதனங்களையும் மற்றும் செயற்கை கோள்களையும் அழித்துப்போட்டு உணவு பற்றாகுறையும் தண்ணீர் தட்டுப்பாடும் உண்டாக்கும் என நாசா கணிக்கிறது.

**வேற்று கிரகவாசிகளின் படையெடுப்பு -** இந்த பிரபஞ்சத்தில் நாம் தனியாக இருக்கிறோமா? நம்முடைய கிரகத்தில் உயிர்வாழ்இனங்கள் விண்வெளியில் இருக்கும் வெளிப்புற கிரகவாசிகள் காலத்திலிருந்தே இருக்கின்றன என்றும் அந்த மிகுதியான கிரகவாசிகள் தங்களுடைய வளங்களுக்காக பூமியின்மீது படையெடுக்கக்கூடும் என சில விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.






நரகம் எப்பொழுதும்
எரிந்து கொண்டிருக்கிறதா?
HellTruth.com பார்க்கவும்.


யாரும் உயிரோடு ...
பின் வைக்கப்படவில்லை.
RaptureTruth.com பார்க்கவும்.



# இரண்டாம் வருகையின் விதம்

**1990-ம் வருடம் வளைகுடா போரின்போது, அமெரிக்க கடற்படையின் ஒரு சிறு குழு ஒரு திசை திருப்பலை உருவாக்கி ஈராக் இராணுவத்தை நம்பவைத்து முழுமையாக முட்டாளாக்கியது. ஒரு டஜன் கடல் யுத்த வீரர்கள் குவைத் கடற்கரையை நிரப்பி பெரும் சேதாரத்தை உருவாக்கி, அமெரிக்க படையின் தாக்குதல் கடலிலிருந்து வந்தது என ஈராக்கிய இராணுவ அதிகாரிகளை நம்பவைத்தது.**



இதற்கு பதிலடி கொடுக்க ஈராக் பெரும்பாலான இராணுவத்தை இந்த தாக்குதலுக்கு எதிர்தாக்குதல் செய்ய அனுப்பியது – ஆனால் அமெரிக்க முதன்மை படைகள் சவூதி அரேபிய பாலைவனம் வழியாக வந்திருந்தன என்பதை பிறகு கண்டுபிடித்தனர். ஈராக்கியர்கள் ஏமாற்றப்பட்டனர்! ஒரு சில மணித்துளிகளில் போர் முடிவுற்றது, மற்றும் இதெல்லாம் இருபதுக்கும் குறைவான வீரர்களால் ஆரம்பிக்கப்பட்டது.

ஒவ்வொரு இராணுவ அதிகாரியும் யுத்தத்தில் வெற்றிபெற வேண்டும் என்றால், இராணுவம் சில ஆச்சரியமூட்டும் இரகசியத்தை பாராமரிக்க வேண்டுமென அறிவர். சரித்திரம் முழுவதும் புத்திசாலித்தனமான திசை திருப்பும் யுக்திகள் நிறைய யுத்தங்களை வெற்றிபெற உதவியிருக்கின்றன. ஒரு இராணுவம் திசை திருப்பப்படும்போது, அது வேறு வழியில் கவனத்தை வைத்திருக்கும்போது, எதிரி படை பின்புறமாக இருந்து வந்து அதனை மேற்கொள்ளும்.



பூமியின்மேல் மகிமையான ஒருவராக வெளிப்பட்டு சாத்தான் தன்னை கிறிஸ்து போல காட்டிக்கொள்வான். அவன் கோடிக்கணக்கானவர்களை ஏமாற்றி இழந்து போன உலகின் தொழுகையை பெற்றுக்கொள்ளுவான்.

பிசாசும் இப்படிப்பட்ட ஒன்றை செய்வதற்கு தான் திட்டமிட்டிருக்கிறான் என்று அறிய நாம் ஆச்சரியப்படக்கூடாது. ஏமாற்றுக்காரன் எப்பொழுதும் தேவனைப்போல இருக்க விரும்புகிறான், பரலோகத்துக்கு எதிராக அவனுடைய கடைசி கேலிக்குரிய செயல் இயேசுவைப் போல வேஷமிடுதலாகும். பூமியின்மேல் மகிமையான ஒருவராக வெளிப்பட்டு சாத்தான் தன்னை கிறிஸ்து போல காட்டிக்கொள்வான். அவன் கோடிக்கணக்கானவர்களை ஏமாற்றி இழந்துபோன உலகின் தொழுகையை பெற்றுக்கொள்ளுவான்.

ஏமாற்றப்படுவதை நீங்கள் எப்படி தவிர்க்கமுடியும்?



கிறிஸ்துவின் வருகை நிச்சயம் என்பதை வேதாகமத்திலிருந்து ஆதாரங்களோடு பார்த்தோம், மற்றும் அவருடைய வருகைக்கு முன்பதாக காணப்படும் அடையாளங்களின் பட்டியலைப் பார்த்தோம், இதில் பெரும்பாலானவைகள் ஏற்கனவே நிறைவேறியிருக்கின்றன. ஆனால் உண்மையான சம்பவம் எப்படி நடைபெறபோகிறது?

**அது நடைபெறும் போது நாம் அறிவோமா?**

**அதை நம்மால் பார்க்கவும், கேட்கவும் முடியுமா?**

**அப்படியானால், அது எதைப்போல பார்க்கப்படும் மற்றும் கேட்கப்படும்?**

**வேறு ஏதாகிலும் வேதாகம குறிப்புகள் இருக்கின்றனவா?**

வேதாகமம் தெளிவான பதில்களைக் கொடுக்கிறது, இந்த இறுதி சம்பவத்தின் விவரங்களை நாம் பரிச்சயப்படுத்திக் கொள்வது மிக முக்கியமானது. இயேசு எச்சரித்தது போல, “ஒருவனும் உங்களை வஞ்சியாத படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்” (மத்தேயு 24:4, 5).

அதே உரையாடலில் சீஷர்களிடம் இயேசு தொடர்ந்து எச்சரித்தார், “ஏனெனில், கள்ளக்கிறிஸ்துகளும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கதத்தக்கதாக பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்....ஆகையால்: அதோ, வனாந்தரத்தில் இருக்கிறார் என்று சொல்வார்களானால், புறப்படாதிருங்கள், இதோ, அறைவீட்டிற்குள் இருக்கிறார் என்று சொல்வார்களானால் நம்பாதேயுங்கள்” (மத்தேயு 24:26).

நூற்றாண்டு கணக்கில் நிறையபேர் கிறிஸ்துவை உருவகப்படுத்திக் காட்ட முயற்சி செய்திருக்கின்றனர், இந்த நாள் வரைக்கும் அவர்கள் அதைத் தொடர்ந்து செய்கிறார்கள். இப்படி கிறிஸ்துவின் நிஜ வருகை சமீபமாகும்பொழுது இதை விட அதிகமான இப்படிப்பட்ட வஞ்சனையின் வேலைகளை நாம் பார்ப்பது தவிர்க்கமுடியாததாயிருக்கும்.


2 கொரிந்தியர் 11:14-ல் அப்போஸ்தலனாகிய பவுல் இந்த ஆபத்தான வஞ்சனைகளைப்பற்றி எச்சரிக்கிறார்: “சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே.” துரதிஷ்டவசமாக, சாத்தானின் திகைப்பூட்டும் வஞ்சனைகள் மக்களை வெகுவாக கவர்ந்திழுத்து அநேக மக்கள் தவறாக வழிநடத்தப்படுவார்கள். ஆனால் அது அப்படியிருக்கவேண்டிய அவசியமில்லை.

போலியான பணத்தைக் கண்டுப்பிடிக்க, அரசாங்க பிரதிநிதிகள் உண்மையான நாணயத்தை எப்படி இனம் காண்பது என பலவகைகளில் பயிற்சி பெறுகின்றனர். தவறான பணத்தளை சுலபமாக கண்டுபிடிக்கின்றனர். அதேபோல, நாமும் இயேசுவின் இரண்டாம் வருகையின் சரியான விதத்தை படித்தறிந்து கொள்ளவேண்டும் - திட்டவட்டமாக கொடுக்கப்பட்டிருக்கும் தேவனுடைய வார்த்தையிலிருந்து – போலியான சம்பவத்தையும் உண்மையான சம்பவத்தையும் சுலபமாக இனம் காணமுடியும். சாத்தானுடைய வஞ்சனைகள் மிகவும் திருப்திகரமாக இருந்தாலும், நாம் உண்மைக்கும் பொய்யுக்குமுள்ள வித்தியாசத்தை கண்டுபிடிக்க உதவ கிறிஸ்து தம்முடைய வருகையின் விவரங்களை கொடுத்திருக்கிறார்.

எந்த வெளிப்படுதலும் வேதாகம வார்த்தைகளோடு ஒத்துப்போகவில்லையென்றால் அது போலியானது என்பதை அறிந்து நிராகரிக்கப்பட வேண்டும். உண்மையாயிருக்கும் பட்சத்தில், எல்லா விவரங்களும் வேதாகமத்தைச் சார்ந்து இருக்கவேண்டும்.

யாராகிலும் அல்லது எதுவாகிலும் தேவனுடைய வார்த்தைக்கு மாறாக இருக்குமென்றால் அது வஞ்சனையை ஊக்குவிப்பதாகும் என ஏசாயா 8:20 நம்மை ஞாபகப்படுத்துகிறது. “வேதத்தையும், சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும், இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை”. வேதவார்த்தைகள் சரியாக கிறிஸ்துவின் வருகைப்பற்றி என்ன சொல்லுகிறது என்பதை நாம் அறிந்துகொள்ளுவது மிக முக்கியமானது. இரட்சிப்புக்கும் நித்திய இழப்புக்கும் இடையில் இருக்கும் வித்தியாசத்தை இது காட்டும்.

அப்படியானால், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைப்பற்றி வேதாகமம் நமக்கு என்ன சொல்கிறது?





## 1. நேரடியாக, ஆன்மீகமாய் அல்ல

சிலர் போதிப்பது போல, இரண்டாம் வருகையானது ஒருவர் மனந்திரும்பிய பிறகு ஆவிக்குரிய விதத்தில் அவருடைய உள்ளத்தில் வருவது அல்ல, ஒருவருடைய மரணத்தின்போது அது நடைபெறுவது அல்ல, அது உருவகப்படுத்தப்படுவதுமல்ல, உதாரணத்துக்கு உலகம் நல்ல நிலைமைக்கு ஏற்றார்போல பகிரங்கமாக இருக்கும். இந்த கோட்பாடுகள் நேரடியாக வேதத்துக்கு முரண்படுகின்றன.

அவருடைய உயிர்த்தெழுதலுக்குப்பிறகு இயேசு முதன்முதலாக சீஷர்களுக்கு காணப்பட்டபோது, அவர்கள் பயந்து ஒரு ஆவியைக் காண்கிறதாக நினைத்தார்கள். இயேசு தான் சரீரபிரகாரமாய் இருப்பதை அவர்களுக்கு காண்பித்தார். "அவர் அவர்களை நோக்கி: நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள், உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகிறதென்ன? நான்தான் என்று அறியும்படி, என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள், என்னைத் தொட்டுப்பாருங்கள்; நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறதுபோல ஒரு ஆவிக்கு இராதே" (லூக்கா 24:38,39). மறுபடியும் உறுதிபடுத்துவதற்கு அவர்களுக்கு முன்பாக கொஞ்சம் உணவும் சாப்பிட்டு காண்பித்தார்.

"அவர் அவர்களை நோக்கி: நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்; உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகிறதென்ன? நான்தான் என்று அறியும்படி, என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள், என்னைத் தொட்டுப்பாருங்கள்; நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறதுபோல ஒரு ஆவிக்கு இராதே" (லூக்கா 24:38, 39).

இயேசு தனித்துவம் மிக்கவராக மாம்சத்திலும் எலும்பிலுமாக திரும்ப வருவார். இரண்டாம் வருகை அவர் வாக்குத்தத்தம் பண்ணப்படியே ஒரு நேரடியான, உலகளாவிய, காணக்கூடிய கிறிஸ்துவின் சொந்த தோற்றமாக இருக்கும். அவருடைய வருகைப் பற்றிய மற்ற விவரங்களை நீங்கள் படிக்கும் பொழுது, நேரடி இரண்டாம் வருகையின் தன்மைபற்றி இன்னமும் அதிகமான ஆதாரங்கள் வெளிப்படும்.



## 2. காணக்கூடியது

அப்போஸ்தலர் புத்தகத்தின் முதல் அதிகாரத்தில் இயேசு பரமேறி சென்றபோது சீஷர்கள் அண்ணாந்து பார்த்தார்கள். இப்படித்தான் நடந்தது:

> *"அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது. அவர் போகிற போது அவர்கள் வானத்தை அண்ணாந்துபார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்று: கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்" (வசனங்கள் 9 – 11).*

சீஷர்களை உற்சாகப்படுத்துவதற்காகவே, அவர்கள் தங்களுடைய போதகர் பார்வையிலிருந்து மறையும் தருவாயில் அதனை பார்த்துக்கொண்டிருந்த அந்த வேளையில் இரண்டு பரலோக தூதுவர்கள் அவர் எப்படி போனாரோ அப்படியே இந்த கிரகத்துக்கு இயேசு திரும்ப வருவார் என சொல்லிக்கொடுத்தனர்.


கிறிஸ்து மேகங்களிலே எழுந்தருளிச் சென்றார், அதேபோல அவர் மேகங்களுடனே திரும்ப வருவார். அவர் சென்றபோது அவர் காணக்கூடியவராக இருந்தார், அவர் திரும்ப வரும்போதும் காணக்கூடியவராகவே இருப்பார். அவர் சென்றபோது நிஜ உடலைப் பெற்றிருந்தார், அவர் மறுபடியும் வரும்போதும் நிஜ உடலுடன் வருவார்.

சீஷர்களின் ஒரு சிறு கூட்டம் மட்டுமே இயேசு மேலெழுந்து போனதை பார்த்தது. இயேசுவின் இரண்டாம் வருகை இன்னமும் எவ்வளவுக்கு அதிகமாக காணப்படும்? இந்தக் கேள்விக்கு பதிலளிக்க, அவருடைய வருகைபற்றி அவர் விளக்கம் கொடுத்து இயேசு சொன்ன ஒன்றை நாம் பார்ப்போம்.

> *“அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்” (மத்தேயு 24:30).*

அவருடைய பரமேறுதலைக் காட்டிலும், கிறிஸ்துவின் வருகை பரிமாணத்தில் மிக அதிகமாக இருக்கும் என நாம் நிச்சயமாகவே தெரிந்துக் கொள்ளமுடியும். இயேசு, தன்னுடைய எல்லா மாட்சிமையோடும் விவரிக்கப்படமுடியாத அற்புதத்தோடு மேகங்களினோடே வருவார்!

வெளிப்படுத்தின விசேஷம் 1:7 இந்த செய்தியை விரிவாக கூறுகிறது: “இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும்” இது புரிந்து கொள்வதற்கு மிக எளிதாயிருக்கிறது.



**பெப்ரவரி 15, 2013 அன்று, ரஷ்யாவின் செலயபின்ஸ்க் (CHELYABINSK) விண்கல் வானத்தின் மத்தியில் மணிக்கு 42,500 மைல் வேகத்தில் வெடித்துச் சிதறி சூரியனைவிட முப்பது மடங்கு பிரகாசத்துடன் வெடித்து ஜொலித்தது. 14,000 டன் கல்லிலிருந்து வந்த மின்வெட்டொளி ஒரு நூற்றாண்டில் பூமியின் வான் வெளியில் ஏற்பட்ட பிரகாசத்தைவிட அதிகமாயிருந்து கவனித்த அநேகர் சூரிய எரிச்சலினால் பாதிக்கப்பட்டனர். இயேசுவின் இரண்டாம் வருகையும் இப்படியே திடீரென்றும் இதைவிட பிரகாசமாயும் இருக்கும் என வேதாகமம் சொல்லுகிறது.**

அந்த நேரத்தில் இரட்சிக்கப்பட்டவர்களோ அல்லது இழந்து போனவர்களோ, உயிரோடிருக்கும் ஒவ்வொருவரும் இயேசுவின் வருகையைக் காண்பர். தேவனுடைய பிள்ளைகளின் இரகசிய எடுத்துக்கொள்ளப்படுதல் என்பது பற்றி வேதாகமத்தில் விவரிக்கப்படவில்லை. (பக்கம் 26-ல் “இரகசிய எடுத்துக்கொள்ளப்படுதல்” பற்றி மேலும் படிக்கவும்).

இதற்கும் மேலாக, தன்னுடைய வருகை வானத்தின் ஒரு முனையிலிருந்து இன்னொரு முனைக்கு ஒளிர்விடும் மின்னலுக்கு ஒப்பிட்டு இயேசு கூறினார். “மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்” (மத்தேயு 24:27). மற்றும் நிச்சயமாகவே மின்னலை விட நுட்பமானது ஏதுமில்லை, அப்படி இருக்கிறதா?





## 3. தூதர்களின் சேனை

இயேசு திரும்ப வரும்போது அவர் தனியாக இருக்கமாட்டார். தேவ தூதர்கள் அவரோடு இருப்பார்கள் என வேதாகமம் கூறுகிறது. “அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார்.” (மத்தேயு 25:31) சில தூதர்கள் அல்ல, சகல தூதர்களும் எனப்படுவதை கவனியுங்கள். தானியேல் 7:10 பரலோகத்தில் இருக்கும் தூதர்களின் விவரத்தை கொடுக்கிறது: “ஆயிரமாயிரம்பேர் அவரைச் சேவித்தார்கள்; கோடாகோடிபேர் அவருக்கு முன்பாக நின்றார்கள்.” அது நிச்சயமாகவே ஏராளமான தூதர்கள்!

இயேசுவின் கல்லறையில் ரோம சேவகர்கள் ஒரு தூதனை கண்டபோது என்ன நடந்தது என உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா?

> *“கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கிவந்து, வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான். அவனுடைய ரூபம் மின்னல்போலவும், அவனுடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போல வெண்மையாகவும் இருந்தது. காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள்போலானார்கள்” (மத்தேயு 28:2-4).*

ஒரு தூதனின் பிரகாசம் மட்டுமே காவலாளர்கள் தரையில் விழுந்து போக காரணமாயிருந்தது!

தூதர்கள் தங்களுடைய மகிமையையும் பிரகாசத்தையும் மறைக்க முடிகிறது, ஆனால் இயேசு வரும்போது அப்படி எதையும் மறைக்கமாட்டார்கள். பரலோகத்தின் எல்லா தூதர்களின் - ஒருவேளை அவர்களில் இலட்சக்கணக்கானோர்! – பெரும் திறமையோடு வானங்களை பிரகாசிப்பிக்கப்பண்ணி, ஒருவரையும் தவறவிடாதபடிக்கு இயேசுவின் இரண்டாம் வருகை மிகப்பிரகாசமாயிருக்கும். (லூக்கா 9:26 யும் பார்க்கவும்)

கிறிஸ்துவின் இரண்டாம் வருகை ஒரு குறிப்பிட்ட மக்கள் மட்டும் காணக்கூடியதாக இருக்காது. இயேசு திரும்ப வரும்போது இந்த உலகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனும், மனுஷியும், குழந்தையும் காண்பார்கள். அவருடைய வருகையின் பரந்து விரிந்த பிரகாசம் ஒரு அடிவானத்திலிருந்து மறுஅடிவானம் வரைக்கும் வியாப்பித்திருக்கும், வெளி மண்டலம் முழுவதும் மின்னலைப்போல பெரும் மகிமையினால் நிறைந்திருக்கும். அது எங்கேயோ நடக்கக்கூடிய சம்பவமாயிராது, உலகம் முழுவதிலும் காணக்கூடியதாக இருக்கும்.

## 4. ஆகாயத்தில்

இரண்டாம் வருகை பூமிக்கு மேலாகத்தான் நடைபெறும், பூமியின் மீது அல்ல என்பது கவனிக்கப்படத்தக்கது. இயேசு வரும்போது அவருடைய பாதங்கள் தரையை தொடாது என வேதாகமம் தெளிவாக சொல்கிறது. “பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு” (1 தெசலோனிக்கேயர் 4:17). இதனால்தான் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு வரமாட்டார் என இயேசு கூறினார்:

> *“அதோ, வனாந்தரத்தில் இருக்கிறார் என்று சொல்வார்களானால், புறப்படாதிருங்கள்; இதோ, அறைவீட்டிற்குள் இருக்கிறார் என்று சொல்வார்களானால் நம்பாதிருங்கள். மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்” (மத்தேயு 24:26, 27).*

தேவனுடைய பிள்ளைகள் கர்த்தரை ஆகாயத்தில் சந்திப்பார்கள். இயேசு அவருடைய இரண்டாம் வருகையின்போது பூமியைத் தொடாததினால், அநேகர் போதிப்பதுபோல அவர் பூமியில் வெளிப்படமாட்டார் என்பதை நாம் அறிந்துக்கொள்ளலாம். யாராகிலும் கிறிஸ்து அங்கே நடந்து கொண்டிருக்கிறார் என்றோ அல்லது தொலைக்காட்சியில் காணப்படுகிறார் என்றோ சொன்னால் அது நிச்சயமாகவே இயேசு அல்ல!



## 5. கேட்கக் கூடியது

இயேசுவின் வருகையில் காணக்கூடிய தன்மையை நாம் புரிந்துக்கொள்ளும் அதே வேளையில், இதனை பூர்த்திசெய்யும் விதத்தில் வேறு விவரங்களையும் வேதாகமம் கொடுக்கிறது. உதாரணத்துக்கு, நாம் இந்த சம்பவத்தை பார்ப்பது மட்டுமல்ல நாம் அதனை கேட்கவும் செய்வோம் என சொல்கிறது! “கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்” (1 தெசலோனிக்கேயர் 4:16).

உலகத்தின் முடிவு பற்றி பேசும் எரேமியா தீர்க்கதரிசி இதனை சேர்க்கிறார், “காத்தர் உயரத்திலிருந்து கெர்ச்சித்து, தமது பரிசுத்த வாசஸ்தலத்திலிருந்து தம்முடைய சத்தத்தைக் காட்டி, தம்முடைய தாபரத்துக்கு விரோதமாய்க் கெர்ச்சிக்கவே கெர்ச்சித்து....ஆர்ப்பரிப்பார்” (எரேமியா 25:30). மேலும் சங்கீதம் 50:3 சொல்கிறது, “நம்முடைய தேவன் வருவார், மவுனமாயிரார்;...அவரைச் சுற்றிலும் மகா புசல் கொந்தளிப்பாயிருக்கும்.” இயேசுவின் இரண்டாம் வருகை விளக்கமுடியாத அளவு சத்தமாயிருக்கும். இதைக்குறித்து ஒரு இரகசியமும் இல்லை!

ஒரு வேளை இதில் ஏதும் குழப்பம் இருக்குமென்றால், அப்போஸ்தலனாகிய பேதுரு பெரும் சத்தத்தை சுட்டிக்காட்டுகிறார், “கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும், அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம்” (2 பேதுரு 3:10). கிறிஸ்துவின் இரண்டாம் வருகை உரத்த சத்தமாயிருக்கும்! இந்த சம்பவத்தின்போது உரத்த சத்தமும், எக்காளம் மற்றும் எல்லாவிதமான சத்தங்களும் சேர்ந்திருக்கும். எவரும் இதனை எப்படியும் தவறவிட முடியாது. கிறிஸ்துவின் வருகை இறந்தவர்களையும் எழுப்புமளவுக்கு சத்தமாயிருக்கும்! (அத்தியாயம் 5-ல் இன்னும் அதிகமாக பார்க்கலாம்).

> **1 தெசலோனிக்கேயர் 4:16 – ல் இயேசுவின் வருகை கேட்கக் கூடியதைப் பற்றி மூன்று முறை வலியுறுத்தப்படுகிறது: ஆரவாரம், பிரதான தூதனுடைய சத்தம் மற்றும் தேவ எக்காளம்.**





## 6. கொந்தளிப்பு

கிறிஸ்துவின் வருகை, கொடிய, உலகளாவிய பூமியதிர்ச்சியாக இந்த கிரகத்தை அழிப்பது போல பூமியின் ஆதாரங்களையும் ஆட்டம் காண வைக்கும்.

> *"மலைகள் தீவுகள் யாவும் தங்கள் இடங்களைவிட்டு அகன்றுபோயின" (வெளிப்படுத்தின விசேஷம் 6:14).*

> *"தேசம் நொறுங்கவே நொறுங்கும், தேசம் முறியவே முறியும், தேசம் அசையவே அசையும். வெறித்தவனைப்போல தேசம் தள்ளாடி, ஒரு குடிலைப்போலப் பெயர்த்துப்போடப்படும்; அதின் பாதகம் அதின்மேல் பாரமாயிருக்கையால், அது விழுந்துபோம், இனி எழுந்திராது" (ஏசாயா 24:19, 20).*

> *"பூமி மிகவும் அதிர்ந்தது, பூமியின்மேல் மனுஷர்கள் உண்டான நாள்முதற்கொண்டு அப்படிப்பட்ட பெரிய அதிர்ச்சியுண்டானதில்லை. தீவுகள் யாவும் அகன்றுபோயின, பர்வதங்கள் காணப்படாமற்போயின" (வெளிப்படுத்தின விசேஷம் 16:18,20).*

ஆஹா! மலைகளை தரைமட்டமாக்கி, கிரகத்தின் ஒவ்வொரு எரிமலையையும் வெடிக்கச் செய்து அதனால் உலகளாவிய சுனாமியை உருவாக்க ஒரு சக்திவாய்ந்த பூமியதிர்ச்சி போதுமானதாயிருக்கும். உங்களால் நினைத்துப் பார்க்க முடிகிறதா? முழு மலைத்தொடர்கள் காணமற்போகின்றன, தீவுகள் அகன்று போகின்றன, நிலப்பகுதிகள் மகத்தான அலைகளால் அழிக்கப்பட்டுப் போகின்றன.

இன்னமும் 2 பேதுரு 3:12 விளக்குகிறது, "அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம்," கிறிஸ்து வந்த பிறகு இந்த உலகம் உயிர்வாழ்வதற்கு ஏற்றதாயிராதபடியால் ஒரு வாழும் மனிதரும் இந்த பூமியில் இந்த சம்பவத்தை தவறவிட முடியாது!


இல்லை - இயேசு வரும்போது எதுவுமே இரகசியமாகவோ அல்லது அமைதியாகவோ இருக்கப்போவதில்லை; நம்முடைய ஒவ்வொரு புலன்களும் ஆதாரத்தினால் தாக்கப்படும்!

## 7. தனிப்பட்டவர்க்குரியது

இயேசுவின் வருகை தனிப்பட்ட ஒருவருக்கு என்று இல்லையென்றால் மேற் சொல்லப்பட்ட விவரங்கள் ஒரு பொருட்டல்ல. சத்தியம் என்னவென்றால் இயேசு உங்களுக்காக வருகிறார்.

> *"இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாக கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" (2 தீமோத்தேயு 4:8).*

நீங்கள் கர்த்தரை நேசித்தால், முழு இருதயத்தோடு அவருடைய வருகைக்காக காத்திருப்பீர்கள். கடைசியில், உங்களை விடுவிக்கவே அவர் வருகிறார் - மற்றும் ஒவ்வொருவரையும் - இந்த இருண்ட சிதைந்து போன உலகத்தின் வலி, வன்முறை, ஏழ்மை, வியாதி, அழிவு மற்றும் மரணம் ஆகியவற்றிலிருந்து விடுவிக்க வருகிறார். எல்லாவற்றிற்கும் மேலாக, நமது மீட்பரின் முகத்தை நாம் பார்த்து அவரோடே நித்திய நித்தியமாக வாழ்வோம். சந்தேகத்துக்கு இடமில்லாமல் நம்முடைய எல்லா பெரும் வியப்புக்கூறிய நம்பிக்கைக்கும், கனவுகளுக்கும் அது இறுதி முடிவாக இருக்கும்!



# இறுதிகால வெளிப்பாடு

### வரையறை

*அப்பாக்கலிப்ஸ் என்கின்ற ஆங்கில வார்த்தையின் பழங்கால கிரேக்க பதம் வெளிப்படுத்தின் விசேஷத்தின் ஆரம்பத்தில் கூறப்பட்டிருப்பது போல "அவிழ்த்தல்" அல்லது "வெளிப்படுத்துதல்" என பொருள்படும். இது பொதுவாக கடைசிகால நிகழ்ச்சிகளை சுட்டிகாட்டப் பயன்படுகிறது. பழைய ஏற்பாட்டு புத்தகமாகிய தானியேலும் இறுதிகால வெளிப்பாட்டின் புத்தகம் என விவரிக்கப்படுகிறது.*



# இரகசிய எடுத்துக்கொள்ளப்படுதல் பற்றி என்ன?



**1,500 ஆண்டுகளின் துவக்கத்தில், மேற்கத்திய அரைக்கோள பிராந்தியத்தில் ஆஸ்டக் சாம்ராஜ்யம் மிகுந்த வல்லமை பெற்ற, அதிநவீன நாகரீகங்களில் ஒன்றாக காணப்பட்டது. அப்படியிருந்தும், ஒரு வருட காலத்திற்குள் இரண்டு மில்லியன் மக்கள் தொகை கொண்ட இந்த நாடு வெறும் 630 ஆண்களால் வெற்றிக் கொள்ளப்பட்டு அடிமைப்படுத்தப்பட்டது. இது எப்படி நடந்தது?**



வெளிர்நிற தோல் உடைய, தாடிவைத்திருந்த புராண கடவுள் - ராஜாவாகிய குவாட்செல்கோட்ல் (Quetzalcoatl) பற்றி ஆஸ்டக் வாசிகள் ஒரு தீர்க்கதரிசனம் கொண்டிருந்தனர். கடலிலிருந்து ஒருநாள் அவர் வந்து சேர்வார் என முன்னுரைத்தது, அப்படி வருபவர் கிழக்கிலிருந்து மேகங்களினூடே வருவார் என்றது.

1519 – ல், ஹெர்னன் கோர்ட்ஸ் என்பவரின் தலைமையில் வெற்றியாளர்களை ஏற்றிக்கொண்டு ஸ்பானிய போர்கப்பல்கள் வந்து சேர்ந்தன. ஆஸ்டக் வாசிகள் இந்த கப்பல்களைப் பார்த்த போது, அவைகள் பேரலைகளின் மத்தியில் இருக்கின்ற மேகங்கள் என்று நினைத்தனர். கரையோரத்தில் வாழ்ந்து கொண்டிருந்த மக்களிடம் இருந்து ஆஸ்டக் வாசிகளின் புராணக்கதையை தெரிந்து கொண்ட கோர்ட்ஸ் தனக்கு சாதகமாக அதனை பயன்படுத்திக் கொண்டார். அவர்களுடைய கடவுளின் உடையைப்போல ஆடை அணிந்து அவர்தான் அவர்களுடைய மூட நம்பிக்கையான ராஜா இரண்டாம் மாண்டசுமா என்பது போல குழம்ப வைத்தார்.

ராஜா வெளிர்நிற தோல் உடைய விருந்தாளியை மரியாதையுடன் வரவேற்க தயாராயிருந்த நேரத்தில், கோர்ட்ஸ் தன்னுடைய இராணவத்துடன் ஆஸ்டக் தலைநகரத்துக்குள் நுழைந்தார். கோர்ட்ஸ் அவர்கள் எதிர்பார்த்திருந்த கடவுள் அல்ல என்பதை உணர ஆரம்பித்த போது காலம் கடந்துவிட்டது. வெற்றியாளர்கள் மக்களை கொள்ளையிடவும், அடிமைப்படுத்தவும், கொல்லவும் ஆரம்பித்தனர். முழு நாடும் ஏமாற்றப்பட்டு அழிக்கப்பட்டுவிட்டது, இதற்கு காரணம் அவர்களுடைய கடவுளின் வருகையின் தீர்க்கதரிசனங்கள் தெளிவற்றதாயிருந்ததால் எவரும் கள்ளத்தனமாக செயலாற்ற முடிந்தது.

இதுபோலவே, “பின்னால் விடப்பட்டோர்” என்கின்ற புத்தகம் மற்றும் திரைப்பட தொடர்காட்சியின் வாயிலாக அனைத்துலகமும் பெரும்பாலும் ஏற்றுக்கொண்ட ஒரு பிரபலமான “இரகசிய எடுத்துக்கொள்ளப்படுதல்” என்கின்ற போதனையாகிய ஒரு பலமான மாயத்தோற்றத்தை கிறிஸ்தவ உலகில் சாத்தான் அறிமுகப்படுத்திருக்கிறான். இந்த தவறான கோட்பாடு அநேக தேவ மக்களை கவர்ந்திழுத்து ஒரு போலியான பாதுகாப்பு உணர்வுடன் அவர்களை பிசாசின் கடைசி பிரதான ஏமாற்றத்துக்கு தயாராயிருக்க பிண்ணப்பட்டிருக்கிறது.

ஆனால் அது உங்களுக்கு நேரிட தேவையில்லை.



போன அத்தியாயத்தில் நாம் பார்த்ததுபோல, இயேசு திரும்ப வரும்போது அவருடைய பாதங்கள் பூமியைத்தொடாது என வேதாகமம் தெளிவாக்குகிறது. நீதிமான்கள் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோய் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என அது சொல்லுகிறது. (1 தெசலோனிக்கேயர் 4:17). மறுபடியும் இதனால்தான் இயேசு விசேஷித்து எச்சரிக்கிறார். “அதோ, வனாந்தரத்தில் இருக்கிறார் என்று சொல்வார்களானால், புறப்படாதிருங்கள்; இதோ, அறைவீட்டிற்குள் இருக்கிறார் என்று சொல்வார்களானால் நம்பாதிருங்கள். மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்” (மத்தேயு 24:26, 27).

உண்மையான இரண்டாம் வருகையின் உலகளாவிய பேரழிவின் சம்பவத்தை சாத்தானால் செய்து காட்டமுடியாது. எப்படியும், இரகசிய எடுத்துக்கொள்ளப்படுதல் போன்ற தவறான கோட்பாடுகளைக் கொண்டு அவன் உலகத்தை கெடுத்துப்போடுவான் என்றால் அவன் பிரயாசப்படவேண்டிய அவசியமே இல்லை. உலகம் முழுவதிலும் ஆங்காங்கே தன்னைக் காட்டிக்கொள்வான், பெரிய அற்புதங்களைச் செய்வான், இப்படியே மொத்த கிரகத்தின் எல்லா பகுதியையும் ஏமாற்றுவான்.

## எடுத்துக்கொள்ளப்படுதல்? ஆம்! இரகசியம்? இல்லை!

எடுத்துக்கொள்ளப்படுதல் என்பது, வெறுமனே, “வல்லமையினால் எடுத்துக்கொள்ளப்படுவது” ஆகும். இயேசு வரும்போது, உயிரோடிருக்கும் நீதிமான்கள் கர்த்தரை ஆகாயத்தில் சந்திக்க “எடுத்துக்கொள்ளப்படுவர்” என்பது உண்மைத்தான். (1தெசலோனிக்கேயர் 4:17). ஆனால் நிறையபேர் எடுத்துக்கொள்ளப்படுதல் அமைதியாக நடைபெறும் எனும் நம்பிக்கைக்கு வந்திருக்கிறார்கள் - உலகமெங்கும் இருக்கும் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் திடீரென மறைந்து போவார்கள், ஏழுவருட காலத்துக்கு பூமியின்மேல் உபத்திரவம் நீடிக்கும் என நம்புகின்றனர். இந்த காலகட்டத்தில், அவர்கள் சொல்வது, உண்மையான முடிவு வருவதற்கு முன்பாக அநேகர் இரட்சிப்பு பெற இரண்டாம் தருணம் பெறுவார்கள்.

இரகசிய எடுத்துக்கொள்ளப்படுதலின் காட்சி ஆறுதலாய் தோன்றினாலும் அதற்கு வேதாகம ஆதரவு கிடையாது. இயேசு மறுபடியும் வரும்போது, ஒவ்வொரு புலன்களும் ஆதாரத்தால் நிரப்பப்படும், என்று வேதாகமம் போதிக்கிறது. (பக்கம் 22 – 25 பார்க்கவும்)



வேதாகமத்தில் உண்மையான கிறிஸ்துவின் வருகையின் விதம் பற்றி இவ்வளவு ஆதாரங்கள் இருக்கும்போது, எடுத்துக்கொள்ளப்படுதல் இரகசியமான ஒரு சம்பவம் என்னும் கருத்தை மக்கள் எப்படி பெற்றார்கள்?

பெரும்பாலான வஞ்சனைகளில் இருப்பது போல, எடுத்துக்கொள்ளப்படுதல் கோட்பாடு சொல்லப்படும் சூழலைத் தாண்டி எடுக்கப்பட்ட ஒரு சில வசனங்களை மையமாக வைத்துச் சொல்லப்படுகிறது. இரகசிய எடுத்துக்கொள்ளப்படுதல் என்று சொல்லப்படுவதை உறுதிப்படுத்த வேதத்தின் இரண்டு முதன்மையான கருத்துகள் உபயோகப்படுத்தப்படுகின்றன.

இயேசு “இரவில் திருடன் போல” வருவார் என்பது முதன்மையான கருத்து. எடுத்துக்கொள்ளப்படுதல் கோட்பாடு கிறிஸ்து நீதிமான்களை திருடிக்கொண்டு போக இரகசியமாக வந்து அவர்களை அமைதியாக பரலோகத்துக்கு எடுத்து செல்வார் என கருதுகிறது. உண்மையில் கிறிஸ்துவின் வருகை “ஒரு திருடனை”ப் போல இருக்கும் என நிறைய இடங்களில் விவரிக்கப்படுகிறது. இங்கே ஒரு உதாரணம், “கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும், அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுப்போம், பூதங்கள் வெந்து உருகிப்போம்.” (2 பேதுரு 3:10)

பொறுங்கள்…. இது இரகசிய சம்பவம்போல தோன்றவில்லை, அப்படி தோன்றுகிறதா?

அவருடைய வருகையை “ஒரு திருடனுக்கு” ஒப்பிட்டு சொன்னது அது அமைதலாயிருக்கும் என்பதை பொருள்படவில்லை, மாறாக அது “திடீரென” இருக்கும் - துன்மார்க்கருக்கு அது எதிர்பாராததாய் இருக்கும். அவர் சொன்னார், “திருடன் இன்னநேரத்தில் வருவான் என்று வீட்டெஜமானுக்குத் தெரிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டான் என்று அறிந்திருக்கிறீர்கள். அந்தப்படியே நீங்கள் நினையாத நேரத்தில் மனுஷகுமாரன் வருவார், ஆகையால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள்” (லூக்கா 12:39, 40).

இதேபோல, அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்காவில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு சொன்னார், “சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே” (1 தெசலோனிக்கேயர் 5:4). தேவன் தம்முடைய பின்னடியார்களை ஆச்சரியப்பட வைக்க விரும்பவில்லை, ஆனால் கவனமாயிருந்து ஆயத்தப்பட சொன்னார்.



உலகம் சந்தித்த மிகப்பெரிய ஓசைகளில் ஒன்று, 1883-ல் தென்மேற்கு இந்தோனேசியாவின் கிரக்காட்டோவாவில் நடைபெற்ற எரிமலை வெடிப்பிலிருந்து வந்த ஓசைதான். இந்த வெடிச்சத்தம் 100 டினன்டி பெரியடன்களுக்கு ஈடாக இருந்து ஆஸ்திரேலியாவிலிருந்து 2,000 மைல்களுக்கு அப்பால் கேட்கப்பட்டது. உலகத்தில் நிலப்பரப்பின் பத்தில் ஒருபங்கு அளவு மனிதர்கள் இதை கேட்டிருப்பர் என மதிப்பிடப்பட்டது. இயேசுவின் இரண்டாம் வருகையின் சத்தம் உலகில் எப்பொழுதும் கேட்கப்பட்ட எந்த ஓசையையும்விட அதிகமாக இருக்கும்.



இரகசிய எடுத்துக்கொள்ளப்படுதல் என்பதை ஆதரிக்கும் இரண்டாவது கருத்து லூக்கா சுவிசேஷ புத்தகக்கத்தில் காணப்படுகிறது.

> *"அந்த இராத்திரியில் ஒரே படுக்கையில் படுத்திருக்கிற இரண்டுபேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான். திரிகை திரிக்கிற இரண்டு ஸ்திரீகளில் ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள், மற்றவள் கைவிடப்படுவாள். வயலிலிருக்கிற இரண்டுபேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான் (லூக்கா 17:34-36).*

இரகசிய எடுத்துக்கொள்ளப்படுதல் கொள்கையின் ஆதரவாளர்கள், இந்த வசனங்கள் இயேசு வரும்போது பரிசுத்தவான்கள் திடீரென மறைந்து போவார்கள் என்பதைக் காட்டுவ-தாக சொல்கிறார்கள். ஆனால் இன்னமும் உன்னிப்பாக இந்த ஆதாரங்களை நாம் பார்த்து அந்த வசனங்கள் என்ன போதிக்கின்றன என்பதைப் பார்ப்போம்.

லூக்கா 17:34-36 –ல் இயேசு ஒரு சிறு செய்தியை விளக்கிக்காட்ட அவருடைய பிடி-த்தமான அடையாளங்களை உபயோகப்படுத்துகிறார். கடைசி காலத்தில், இந்த பூமியில் இரண்டு பிரிவு மக்கள் இருப்பார்கள் - இழந்து போனவர்கள் மற்றும் இரட்சிக்கப்பட்டோர்....

"ஒரே படுக்கையில் (தூங்கும்) இரண்டுபேர்"
ஒரு படுக்கை தூக்கத்தை பொதுவாகக் குறிக்கிறது, இயேசு தூக்கத்தை மரணத்துக்கு ஒரு அடையாளமாக உபயோகிக்கிறார். ஒருமுறை தன்னுடைய சீஷர்களுக்கு சொன்னார், "நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான், நான் அவனை எழுப்பப்போகிறேன்" (யோவான் 11:11). "அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி, லாசரு மரித்துப்போனான் என்று வெளிப்படையாய்ச் சொல்லி" (வசனம் 14). கடைசி நாளின் உயிர்த்தெழுதலின் போது இரண்டு விதமான மக்கள் கல்லறையில் தூங்கிக்கொண்டிருப்பார்கள்: இழந்துபோனோர் மற்றும் இரட்சிக்கப்பட்டோர்.



"திரிகை திரிக்கிற இரண்டு ஸ்திரீகள்"
வேதாமத்தின் தீர்க்கதரிசனத்தில், ஒரு ஸ்திரீயானவள் சபைக்கு அடையாளமாக இருக்கிறாள். (எரேமியா 6:2). திரிகை திரிப்பது தேவனுடைய வார்த்தையோடு வேலை செய்வதை குறிக்கிறது. கிறிஸ்து வரும்போது, இரண்டு விதமான சபைகள் இருக்கும்: பொய்யானது மற்றும் உண்மையானது. இரண்டுமே வெளிப்புறத்தில் ஒன்றையே செய்து கொண்டிருக்கும், ஆனால் ஒன்று மட்டுமே மீட்கப்படும்.



"வயலில் இருக்கும் இரண்டுபேர்"
வயல் உலகத்தைக் குறிக்கிறது (மத்தேயு 13:38). இயேசு மறுபடியும் வரும்போது இரண்டுவித சுவிசேஷகர்கள் உலகில் வேலை செய்து கொண்டிருப்பார்கள் - பொய்யானவர்கள் மற்றும் உண்மையானவர்கள். இதனால்தான் அவர் சொன்னார், "அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! காத்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை, அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்" (மத்தேயு 7:22,23).



## ஒருவரும் ....உயிரோடு பின்னால் விடப்படுவதில்லை.

கிறிஸ்து திரும்ப வந்தபிறகு மக்கள் பல்லாண்டுகளாக பூமியில் வாழ்ந்து கொண்டிருப்பர் என்பது இரகசிய எடுத்துக்கொள்ளப்படுதல் கோட்பாட்டின் இன்னொரு தவறான கருத்தாகும். எப்படியும் கிறிஸ்து வரும்போது ஒரு மனிதனும் இந்த கிரகத்தில் உயிரோடு விட்டு வைக்கப்படுவதில்லை என்று வேதாகமம் தெளிவாக போதிக்கிறது.

இந்த காலத்தை விவரிக்கையில், எரேமியா புத்தகம் தெளிவாக்குகிறது, "அக்காலத்திலே பூமியின் ஒரு முனை துவக்கிப் பூமியின் மறுமுனைமட்டும் கர்த்தரால் கொலையுண்டவர்கள் கிடப்பார்கள்; அவர்கள் புலம்பப்படாமலும் சேர்க்கப்படாமலும் அடக்கம்பண்ணப்படாமலும் பூமியின்மேல் எருவாவார்கள்" (25:33).

இரண்டாம் வருகைக்குப்பிறகு பூமி பற்றி இயேசுவால் கொடுக்கப்பட்ட தெளிவான விளக்கங்களில் ஒன்று:

> *"நோவாவின் நாட்களில் நடந்ததுபோல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும். நோவா பேழைக்குள் பிரவேசித்த நாள்வரைக்கும் ஜனங்கள் புசித்துக் குடித்தார்கள், பெண்கொண்டு கொடுத்தார்கள்; ஜலப்பிரளயம் வந்து எல்லாரையும் அழித்துப்போட்டது. லோத்தினுடைய நாட்களில் நடந்ததுபோலவும் நடக்கும், ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள், கொண்டார்கள், விற்றார்கள், நட்டார்கள், கட்டினார்கள். லோத்து சோதோமை விட்டுப் புறப்பட்ட நாளிலே வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் வருஷித்து, எல்லாரையும் அழித்துப்போட்டது. மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும்" (லூக்கா 17:26-30).*

நோவாவின் நாட்களில் வந்த ஜலப்பிரளயத்துக்குப்பிறகும் சோதோம் நகரம் அக்கினியினால் அழிக்கப்பட்டப்பிறகும் அதேநாளில் துன்மார்க்கர் அனைவரும் அழிக்கப்பட்டார்கள் என்பதை கவனியுங்கள். துன்மார்க்கரை அழிக்கப்பட்ட இந்த ஆரம்பகால

நியாயத்தீர்ப்பு இயேசுவின் இரண்டாம் வருகையின்போது நடைபெறப் போவதற்கான ஒரு எடுத்துக்காட்டு என இயேசு அழுத்தமாகக் கூறினார். இயேசு வந்த பிறகு இந்த பூமியில் மனிதரோ மிருகமோ தொடர்ந்து உயிர்வாழமாட்டார்கள் என வேதாகமம் தெளிவாக சொல்லுகிறது.

## கிறிஸ்துவுடன் உபத்திரவத்தின் வழியாக

உபத்திரவகாலம் ஆரம்பிக்கும் சற்று முன்பதாக எல்லா நீதிமான்களும் எடுத்துக்கொள்ளப்படுவர் மற்றும் துன்மார்க்கர் ஏழு கடினமான வருடங்களை கடந்து செல்ல விட்டுவிடப்படுவர் என்கின்ற குறிப்பு கவர்ச்சியாக இருக்கலாம். ஒரு வேளை இதனால்தான் இந்த கோட்பாடு பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் வேதாகமம் தவறே இல்லாதபடி வேறு விதமாக போதிக்கிறது.

“ஏழுவருட கால உபத்திரவம்” என்கின்ற பதம் வேத வசனங்களில் காணப்படவில்லை. எப்படியும், அவர் வருமுன்பதாக உலகத்தில் பெரும் உபத்திரவகாலம் வருமென இயேசு சொன்னார் மற்றும் இதற்கு முன்பதாக சரித்திரத்தில் நடைபெற்ற எந்த ஒரு உபத்திரவத்தைக்காட்டிலும் அதிகமாக இருக்கும். ஒலிவமலையில் அவருடைய தீர்க்கதரிசன உரையாடலில் இயேசு சொன்னார்,

> *“உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும். அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை; தெரிந்து கொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்” (மத்தேயு 24:21,22).*

தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் பெரும் உபத்திரவத்தின் நாட்களில் இந்த உலகத்தில் இல்லாதிருப்பார்களானால் அந்த நாட்கள் குறைக்கப்பட வேண்டிய அவசியமில்லை! வேதாகமம் முழுவதிலும் கர்த்தர் தமது பிள்ளைகளை உபத்திரவத்தினோடே பாதுகாப்பதை காணமுடியும், உபத்திரவத்திலிருந்து அல்ல:

- *நோவா ஜலப்பிரளயத்தைத்தவிர்த்து காப்பாற்றப்படவில்லை, ஆனால் அதன் வழியாக காப்பாற்றப்பட்டார்.*
- *தானியேல் சிங்க கெபியைத்தவிர்த்து காப்பாற்றப்படவில்லை, ஆனால் அதன் வழியாக காப்பாற்றப்பட்டார்.*
- *சாத்ராக், மேஷாக், அபேத்நேகோ எரிகின்ற சூளையைத்தவிர்த்து காப்பாற்றப்படவில்லை, ஆனால் அதன் வழியாக காப்பாற்றப்பட்டனர்.*
- *இஸ்ரவேல் புத்திரர் வாதைகளுக்கு முன்பதாக காப்பாற்றப்படவில்லை, ஆனால் வாதைக்குப்பிறகு காப்பாற்றப்பட்டனர். தேவன் அவர்களை வாதையினோடே காப்பாற்றி தம்முடைய அன்பை வெளிப்படுத்தினார். அதுபோலவே, ஏழு வாதைகள் இந்த உலகத்தில் ஊற்றப்படும்போது நீதிமான்களும் இருப்பர். (வெளிப்படுத்தின விசேஷம் 16), ஆனால் தேவன் அவர்களை காப்பார்.*

தேவன், நம்முடைய வாழ்க்கை எப்போதும் சுலபமாய் இருக்குமென வாக்களிக்கவில்லை. கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்காக ஜெபித்தார், “நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்” (யோவான் 17:15). அப்படியே, அப்போஸ்தலனாகிய பவுல் அறிவித்தார், “அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்” (2 திமோத்தேயு 3:12). பவுலும் கூட ஒரு சீஷர் குழுவுக்கு சொன்னார், “நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டும்” (அப்போஸ்தலர் 14:22).



இரண்டு வீடு கட்டினவர்களின் உவமையில், இயேசு, மணல்மேல் வீடு கட்டின புத்தியில்லாதவனுக்கு வந்த அதே புயல்போல கற்பாறையின்மீது வீடு கட்டின புத்தியுள்ள மனிதனுக்கும் புயல் அடித்தது என்று இயேசு சொல்லிக்கொடுத்தார். (மத்தேயு 7:24-27) புயல் எல்லாருக்கும் வருகிறது.

நற்செய்தியானது தேவனின் பிள்ளைகள் வரப்போகும் உபத்திரவத்தை தாங்குவார்கள் என்பதே மிகப்பெரிய கிரேட் பேசின் (Great Basin) மலையில் காணப்படும் பிரிசில்கோன் பைன் (bristlecone pine) மரத்தைப்போல அவர்கள் அதே பிழைத்திருக்கும் திறமையுடன் தாங்குவார்கள். தனிமையான மலை உச்சிகளில் காணப்படும் பழங்கால எப்பொழுதும் பசுமையுடன் காணப்படும் இந்த மரம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அடிக்கும் உறையவைக்கும் காற்று, கொட்டும் மழை, சுட்டெரிக்கும் சூரியன் மற்றும் வன்முறை மிக்க வலிமையான புயல்கள் எல்லாவற்றையும் தாங்கி 4,000 வருட பழமை பெற்றதாயிருக்கிறது.

அவைகள் எப்படி இப்படிப்பட்ட கடினமான, பாதகமான சூழ்நிலைகளில் நிலைத்திருக்கின்றன? அவைகள் தங்கள் வேர்களை ஆழத்தில் ஊன்றவைத்து, கடினமான பாறைகளில் சுற்றியெடுத்து உறுதியாக நிற்கின்றன.

அதேபோல, இரட்சிக்கப்பட்டோர் விசுவாசம் என்கின்ற தங்கள் வேர்களை தேவனுடைய வார்த்தையின் மீது ஆழமாக பதித்து, வல்லமையுள்ள கற்பாறையாகிய கிறிஸ்துவின்மேல் உறுதியாயிருக்க வேண்டும். உபத்திரவத்திலிருந்து தப்பித்துக்கொள்ள தேவன் எப்பொழுதும் வழிவகை செய்யவில்லையென்றாலும், அதனோடே கடந்து செல்ல வல்லமையையும் பலத்தையும் கொடுப்பதாக அவர் வாக்களித்திருக்கிறார். “என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு” (பிலிப்பியர் 4:13).



## எடுத்துக்கொள்ளப்படுதலின் பல்வேறு நோக்கங்கள்

✗ உபத்திரவ காலத்துக்கு முன்பாக எடுத்துக்கொள்ளப்படுதல்: ஏழு வருட உபத்திரவ காலத்துக்கு முன்பாக தேவனுடைய இரகசிய எடுத்துக்கொள்ளப்படுதல் நடைபெறும், மேலும் கிறிஸ்துவின் வருகை இந்த காலத்தின் முடிவில் நடைபெறும்

✗ உபத்திரவ காலத்துக்கு நடுவில் எடுத்துக்கொள்ளப்படுதல்: தானியேல் 7:25 – ல் சொல்லப்பட்டிருக்கும் காலத்தை நேரடியாக ஏற்று ஏழு உபத்திரவகால வருடங்களில் பாதி ஆகிய மூன்றரை ஆண்டு முடிவில் தேவ பிள்ளைகளின் இரகசிய எடுத்துக்கொள்ளப்படுதல் நடைபெறும். அந்திக்கிறிஸ்து நேரடியாக எருசலேம் ஆலயத்தில் “பாழாக்கும் அருவருப்பை” நடத்துவான்.

✓ உபத்திரவ காலத்துக்கு பிறகு எடுத்துக்கொள்ளப்படுதல்: மாபெரும் உபத்திரவ காலத்தின் முடிவில் எல்லா விசுவாசிகளும் (உயிரோடிருப்போர், மரித்தோர்) ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். உயிர் வாழும் கிறிஸ்தவர்கள் கடைசி கால உபத்திரவங்களினோடே வழி நடத்தப்படுவர்.

## இரகசிய எடுத்துக்கொள்ளப்படுதலின் ஆரம்பம்.

பரிசுத்தவான்கள் எடுத்துக்கொள்ளப்படும் வரை அந்திக்கிறிஸ்து வெளிப்பட மாட்டார் என்பது இரகசிய எடுத்துக்கொள்ளப்படுதல் எனும் கோட்பாட்டின் பெரும்பாலும் ஒளிரும் சீரற்ற நம்பிக்கையாயிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் இந்த விஷயத்தை மிகத் தெளிவாக 2 தெசலோனிக்கேயர் 2:1-4 – ல் முடித்து வைத்தார்…..

> *“நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடத்திலே சேர்க்கப்படுவதையுங்குறித்து, நாங்கள் உங்களை வேண்டிக்கொள்ளுகிறது என்னவென்றால், ஒரு ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது, எங்களிடத்திலிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள். எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்: ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது. அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயாத்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்.”*

இந்த வார்த்தைகளெல்லாம் தெளிவாயிருக்கிறது: “விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய” கிறிஸ்துவின் வருகை நடைபெறாது. இயேசு வருமுன்பதாக பாவமனுஷனாகிய அந்திக்கிறிஸ்து வெளிப்படவேண்டும்.

பவுல், அவருடைய நிருபத்துக்குப்பிறகு 2,000 வருடங்கள் கழித்து வெளிப்படப்போகிற சக்திவாய்ந்த ஒரு நபரைப்பற்றி சுட்டிக்காட்டவில்லை. உண்மையில் அவர் சொன்னது, “அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது” (வசனம் 7). பவுல் அந்திக்கிறிஸ்துவின் ஆவி ஏற்கனவே வளர்ந்து கொண்டு வருவதை எதிர்கொண்டார். அப்போஸ்தலனாகிய யோவானும் அதையே சொன்னார் (1 யோவான் 4:3). ஆறாம் நூற்றாண்டில் கேட்டின் மகன் முதிர்ச்சியுற்றது. ஆனாலும் வஞ்சனையின் உச்சக்கட்ட வேலை கிறிஸ்து வருவதற்கு சற்று முன்பாக நடைபெறும். “அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார்” (2 தெசலோனிக்கேயர் 2:8). அந்திக்கிறிஸ்து இரண்டாம் வருகைக்குப் பிறகு வரப்போவதில்லை ஆனால் அதற்கு முன்பாக வருவான் என்பதற்கு எந்த கேள்வியும் இல்லை.

அப்படியானால் எங்கிருந்து தீர்க்கதரிசனத்தில் அந்திக்கிறிஸ்து பற்றிய இந்த "எதிர்கால" விளக்கம் வந்தது? எடுத்துக்கொள்ளப்படுதல் கொள்கை பற்றி இது என்ன சொல்கிறது? சீர்திருத்த காலக்கட்டத்தில் பெரும்பாலான சீர்திருத்தவாதிகள் ரோம பாப்பு மார்க்கத்தை அந்திக்கிறிஸ்து என இனம் கண்டனர். உண்மையில், போப்பு மார்க்கத்தால் இது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. தான் அந்திக்கிறிஸ்துவின் சக்தி என்கின்ற மக்களின் கண்ணோட்டத்தை மாற்றியமைக்க ரோமாபுரி ஒரு புதிய விளக்கத்துடன் எதிர்வினையாற்றியது:

> *"அந்திக்கிறிஸ்து என்பது தீர்க்கதரிசனத்தின்படி போப்பு அமைப்பைக் குறிக்கிறது என்கின்ற மனிதர்களின் பார்வையை மாற்ற வேண்டுமென நூற்றாண்டின் கடைசி காலக்கட்டத்தில் சபையின் இரண்டு படித்தறிந்த முனிவர்கள் முன்வந்தனர். ஜெசுவிட் அல்காசார் (Jesuit Alcazar) என்பவர் ஆண்டவரின் வெளிப்பாடு எல்லாம் முடிந்துவிட்டது என்கின்ற விளக்கத்தை பிரபலப்படுத்த தன்னை தயார்படுத்தினார்....*
> *அந்திக்கிறிஸ்துவின் தீர்க்கதரிசனம் போப்புகள் ரோமாபுரியை ஆள வருவதற்கு முன்பே நிறைவேறிவிட்டது என்றும் அதனால் இப்பொழுது போப்பு மார்க்கத்துக்கு இது பொருந்தாது என்றும் சொன்னார்."*

> *"அதற்கு மாறாக, ஜெசுவிட் ரைபெரியா, (Jesuit Ribera) இந்த தீர்க்கதரிசனங்கள் எதிர்கால அமைப்பின் பாப்பு வல்லமையைக் குறிக்கும் என்று இதனை தள்ளிவைக்க முயற்சி செய்தார், அது சொல்வது, இந்த தீர்க்கதரிசனங்கள் இன்னமும் வெளிப்படாத எதிர்கால தெய்வீக நபரைக் குறிக்கிறது மற்றும் இந்த வல்லமை மூன்றரை ஆண்டுகளுக்குத் தொடரும் என கூறினார்.... (போப்பு மார்க்கம் சார்ந்த) ஜெசுவிட் ரைபெரியா, கி.பி.1580 வாக்கில் எதிர்கால அமைப்பின் நவீன கால ஸ்தாபகராக கருதப்படலாம்."*

> *"எதிர்கால அமைப்பினைப் பெற்று அதனை சிபாரிசு செய்யும் புரோட்டஸ்டன்ட் என அழைக்கப்படுபவர்கள்.... பாப்பு மார்க்கத்தை அந்திக்கிறிஸ்து என கண்டுபிடித்து சொல்ல உதவி செய்வது வருத்தத்துக்குறிய ஒன்றாகும்" (ஜோசப் டான்னர், தானியேல் மற்றும் வெளிப்படுத்தின விசேஷம்).*

கிறிஸ்துவின் வருகை உபத்திரவ காலத்தின் நடுவில் இருக்கம் என்பதின் இருமுனை தோற்றம் சமமான கேள்விக்குரிய சரித்திரத்தை உடையது. 1830 காலக்கட்டத்தில் இந்த பார்வை வந்தது. எட்வர்ட் இர்விங்க் (Edward Irving) என்பவர் போதகராக இருந்த ஒரு ஸ்காட்லாந்து சபையில் மார்கரேட் மெக்டோனால்ட் என்பவர் ஈர்க்கப்பட்ட செய்தி ஒன்றை கொடுத்தார்கள். கிறிஸ்துவின் இரண்டாம் வருகை காணக்கூடியதாகவும், வெளியரங்கமாகவும் மற்றும் மகிமையுள்ளதாகவும் இருக்கும் என பேசினார். ஆனால் அந்த பேச்சு தொடர்கையில் இன்னொரு கிறிஸ்துவின் வருகை இருக்கிறதென்றும் அப்பொழுது உண்மையில் ஆயத்தமாயிருப்போர் இரகசியமாக எடுத்துக்கொள்ளப்படுவர் என்றும் கூறினார்.

இங்கிலாந்தில் போதகரும் எழுத்தாளருமான ஜான் நெல்சன் டார்பி (John Nelson Darby) என்பவரே இந்த புதிய கொள்கையை பெருமளவு அறிமுகப்படுத்த காரணமானவர். 1850-களில் இரகசிய எடுத்துக்கொள்ளப்படுதல் கோட்பாடு அமெரிக்காவில் பரவ தொடங்கி, சைரஸ் ஸ்கோபீல்டு (Cyrus Scofield) என்பவர் தனது புகழ்பெற்ற 1909 – ல் வெளிப்பட்ட ஸ்கோபீல்டு ரெபெரன்ஸ் பைபில் (Scofield Reference Bible) என்ற புத்தகத்தில் இந்த கொள்கையை உட்புகுத்தியபோது அது பெரும் உத்வேகத்தைப் பெற்றது. அந்த நேரத்திலிருந்து இது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த நம்பிக்கை ஆரம்பகால கிறிஸ்தவர்களாலும் சீர்திருத்தவாதிகளாலும் ஏற்றுக்கொள்ளப்படாதது என்பதை அறியாமலேயே மக்கள் பெரும்பாலும் இதனை ஏற்றுக்கொண்டார்கள்.

டோரோன்டோ நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த போதகர் ஆஸ்வால்டு ஸ்மித் (Oswald Smith) என்பவர் தன்னுடைய "உபத்திரவம் அல்லது எடுத்துக்கொள்ளப்படுதல்" என்கின்ற புத்தகத்தில் விவரிப்பது; ஒரு காலத்தில் இந்த கொள்கையை அவர் நம்பினார், ஆனால் அவர் தாமே வேதாகமத்தை ஆராய ஆரம்பித்த பிறகு, இந்த கொள்கையை நிருபிக்க ஒரு வசனம் கூட வேதாகமத்தில் இல்லை என்பதை கண்டுபிடித்தார். அவர் அறிக்கையிட்டார்:

> *"கிரேக்க வார்த்தை "பரூவுசியா" (Parousia) என்பதற்கு எப்பொழுதுமே எடுத்துக்கொள்ளப்படுதலைத்தான் குறிக்கும் என்று நான் போதிக்கப்பட்டிருந்தேன் மற்றும் மற்ற வார்த்தைகள் மகிமையில் கிறிஸ்துவின் வருகைக்கு பயன்படுத்தப்படுகின்றன....ஆனால் இது உண்மையல்ல என்பதை நான் கண்டுபிடித்தேன்.... புதிய ஏற்பாட்டின் எல்லா எழுத்தாளர்களையும் படித்து பார்க்கலாம், "கர்த்தரின் வருகை "இரண்டு பகுதிகளாக" இருப்பதற்கான ஒரு ஆதாரத்தையும் காணமுடியாது.... அப்படிப்பட்ட கோட்பாடு மனிதனால் மட்டுமே கண்டுபிடிக்கமுடியும். ஆராய்ந்து பாருங்கள். வேதாகமத்தில் ஒரு வசனம்கூட அதைக் குறித்துச் சொல்லவில்லை."*

**சீர்திருத்த காலக்கட்டத்தில் பெரும்பாலான சீர்திருத்தவாதிகள் ரோம பாப்பு மார்க்கத்தை அந்திக்கிறிஸ்து என இனம்கண்டனர். உண்மையில், போப்பு மார்க்கத்தால் இது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. தான் அந்திக்கிறிஸ்துவின் சக்தி என்கின்ற மக்களின் கண்ணோட்டத்தை மாற்றியமைக்க ரோமாபுரி ஒரு புதிய விளக்கத்துடன் எதிர்வினையாற்றியது.**



## மாபெரும் உபத்திரவம்

**வரையறை:**

*தானியேல் (தானியேல் 12:1), இயேசு (மத்தேயு 24:21) மற்றும் அப்போஸ்தலனாகிய யோவான் (வெளிப்படுத்தின விசேஷம் 7:14) பேசியது போல கடைசி காலத்தில் தேவனுடைய பிள்ளைகளுக்கு நேரிடும் மாபெரும் உபத்திரவகாலம். கர்த்தர் தமக்கு உண்மையாயிருப்பவர்களை இந்த சோதனை காலத்தில் வழி நடத்துவார் என்று நாம் உறுதியளிக்கப்பட்டிருக்கிறோம். இயேசு வருவதற்கு சற்று முன்பதாக இது நடைபெறுகிறது.*



# கிறிஸ்து திரும்ப வரும்போது என்ன நடைபெறுகிறது?

**மார்ச் 11, 2011 அன்று மாலை 2.46 - க்கு சாதனை முறிவான பூமியதிர்ச்சி ஒன்று ஜப்பானின் வடகிழக்கு கடற்கரையோரத்துக்கு தள்ளி இருக்கும் ஒரு மண்டலத்தை 310 மைல் தூர அளவுக்கு சிதைத்துப் போட்டது. கடலுக்கடியில் கடற்கரை ஓரத்திலிருந்து நாற்பத்து மூன்று மைல் தூரத்தில் நீளமான ஊடுருவல் உருவாகி ஒரு பயங்கரமான சுனாமியை தூண்டிவிட்டு அது சில இடங்களில் 133 அடி உயரத்துக்கு எழும்பி பட்டணங்களையும் கிராமங்களையும் துடைத்துப்போட்டு கார்களையும், கட்டடங்களையும் பொம்மைகள் போல அடித்துக்கொண்டு போனது.**



இந்த 9.0 அளவு கொண்ட பூமியதிர்ச்சி ஜப்பானை தாக்கியவைகளில் பெரும் சக்திவாய்ந்த ஒன்று மட்டுமல்லாமல் நவீன காலத்தில் பூமியதிர்ச்சியை பதிவிட ஆரம்பித்த காலத்திலிருந்து நடைபெற்ற பெரும் சக்திவாய்ந்த பூமியதிர்ச்சி இது தான். மொத்த தீவையும் எட்டு அடிக்கு கிழக்கு நோக்கி தள்ளி விட்டது மட்டுமல்லாமல் பூமியின் அச்சு பத்து அங்குலம் அதிகமாக பூமியை நகரப் பண்ணியது. மரணமடைந்தோரின் அளவு 15,891 ஐ தொட்டது, 6,152 பேர் காயமுற்றனர் மற்றும் 2,584 பேர் காணமற்போயினர்.

ஒரு மனிதன் சுனாமி நெருங்குவதை கவனித்துவிட்டு தன்னுடைய உடைமைகளை எடுத்துவர வீட்டுக்குள் ஓடினான். அவனுடைய வீடு ஒரு பெரிய இராட்சத அலையால் தாக்கப்பட்டது, வீட்டு கூரையில் அவன் தொங்கிக் கொண்டிருக்க முயன்று கடலுக்குள் அடித்துச்செல்லப்பட்டான். அதிர்ஷ்டவசமாக, சில நாட்கள் கழித்து அவன் கண்டெடுக்கப்பட்டான். ஒரு பெண்மணி தப்பி உயரமான இடத்துக்குச் செல்ல முடியாதப்படி தளர்ந்திருந்த தமது வயதான பெற்றோரை காப்பாற்ற வீட்டுக்கு விரைந்தாள். அப்படிப்பட்ட முடிவிலிருந்து தப்பிக்க அவள் மரச்சாமான் மீது சிரமப்பட்டு ஏறி நிற்க அவள் பெற்றோர் வெள்ளத்தில் இழக்கப்பட்டனர்.

இந்த மாபெரும் பூமியதிர்ச்சி வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பதாக தான், ஒரு 7.2 அளவு கொண்ட நிலநடுக்கம் அந்த பகுதியை தாக்கியது. அதனால் சேதாரம் அண்டாகி, வெறும் 23 அங்குல உயர சுனாமி கரையோர பகுதியை 30 நிமிடங்களுக்குப்பிறகு தாக்கியது. இதனால் ஏற்பட்ட அதிர்ச்சி மோசமானது வந்து முடிந்துவிட்டது என நினைக்க வைத்து அவர்களை முட்டாளாக்கியது, பின்னால் வரப்போகும் பெரிய ஆபத்தின் முதல் அதிர்ச்சி தான் இது என்பதை ஒருவரும் உணரவில்லை.

இரண்டாம் வருகைக்கு முன்பதாக கள்ளக்கிறிஸ்துகளும், கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்புவர் என்பதை இது வரையில் நாம் படித்திருக்கிறோம். இரண்டாம் வருகை இரகசியமான, ஒருசிலர் மட்டுமே அனுபவிக்கப்போகிற சம்பவம் அல்ல என்பதை நாம் இப்பொழுது அறிந்திருக்கிறோம்.

ஆனால் இயேசு வரும்போது சரியாக என்னதான் சம்பவிக்கும்? ஏற்கனவே நாம் பார்த்தப்படி, தேவ வார்த்தைகள் உலகையே ஆட்டிப்படைக்கப்போகிற ஒரு பேரழிவின் சம்பவத்தை முன்னுரைக்கின்றன. இயேசு திரும்ப வரும் அந்த நாளில்....

- *பூமியதிர்ச்சிகள் கிரகத்தை அதிரவைக்கும். (வெளிப்படுத்தின விசேஷம் 16:18, 20)*
- *இந்த உலகம் பேரழிவுகளைச் சந்திக்கும் (எரேமியா 4:26)*
- *இலட்சக்கணக்கான தேவ தூதர்கள் வானத்தில் தோன்றுவார்கள் (மத்தேயு 25:31)*
- *பிரபஞ்சத்தின் ராஜா கிட்டிச்சேர்வதை ஒவ்வொரு கண்ணும் காணும். (வெளிப்படுத்தின விசேஷம் 1:7)*



ஆனால் இந்த கடைசி நிமிடங்களில் வாழும் மக்களுக்கு என்ன நடைபெறுகிறது?

இயேசுவின் இரண்டாம் வருகை மனுகுலத்தில் இரண்டு பிரிவுகளை உருவாக்கும், ஒரு பிரிவினர் அவருடைய இரட்சிப்பின் திட்டத்தை ஏற்றுக்கொண்டவர்கள், அடுத்த பிரிவினர் அதனை ஏற்றுக்கொள்ளாதவர்கள். கிறிஸ்து வரும்போது, மீட்கப்பட்டோரைக் கூட்டிச் சேர்க்க அவர் வருகிறார். "வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்" (மத்தேயு 24:31).

ஒரு நாட்டின் தலைவர் வேறு புதிய நாட்டிற்கு செல்லும்போது உயர் பதவியாளரை வரவேற்க எல்லாரும் செல்வதில்லை. ஆனால் இராஜாதி ராஜாவாக கிறிஸ்து வரும்போது, வாழ்ந்திருந்த ஒவ்வொரு விசுவாசியும், என்ன வயதாயிருந்தாலும், ஆணானாலும் பெண்ணானாலும், எந்த குலமானாலும், என்ன கல்வி தகுதியானாலும் அல்லது எந்த பொருளாதார நிலையில் இருந்தாலும் எல்லாருமே அந்த கொண்டாட்டத்தில் கலந்து கொள்வார்கள். எந்த ஆச்சரியமான சம்பவங்கள் இந்த பிரபஞ்ச கூடுகையை சாத்தியமாக்குகின்றன? இப்பொழுது அவைகளை நாம் பார்ப்போம்....



## மரித்த நீதிமான்களின் உயிர்த்தெழுதல்

கிறிஸ்துவின் வருகையை அறிவிக்க ஒரு எக்காளம் ஊதப்படும். அந்த சமயத்தில்தானே கிறிஸ்துவுக்குள் மரித்த எல்லா நீதிமான்களும் தங்களுடைய கல்லறைகளிலிருந்து புதிய சரீரங்களுடன் உயிர்த்தெழுப்பப்படுவார்கள். "கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்" (1 தெசலோனிக்கேயர் 4:16).

நமக்குப் பிரியமானவர்கள் நோயினாலும் நொறுக்கப்பட்ட உடலுடனும் மரித்திருந்தாலும், அவர்கள் பெலத்துடன் பாவத்தினால் கறைபடாத அழகிய ரூபத்தில் எழுப்பப்படுவார்கள். அது நடக்கும் என்று வேதாகமம் சொல்லுகிறது. "எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ள வேண்டும்" (1 கொரிந்தியர் 15:52, 53).

வெகு காலமாய் மரணத்தினால் பிரிக்கப்பட்டிருந்த நண்பர்களும் குடும்பமும் மறுபடியுமாக ஒன்று சேருவார்கள். தங்கள் குழந்தைகளை வியாதியினாலோ அல்லது விபத்தினாலோ இழக்கக்கொடுத்தவர் அவர்களை தழுவிக்கொள்வார்கள், சந்தோஷமாக, "மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?" (1 கொரிந்தியர் 15:55) என்று சொல்லுவார்கள். ஆதாமும் ஏவாளும் சிருஷ்டிக்கப்பட்டபோது இருந்தது போல அவருடைய மக்கள் கல்லறைகளிலிருந்து வெளிப்பட்டு தேவனுடைய சாயலை பிரதிபலிக்கும்போது கிறிஸ்துவின் மீட்பின் வேலை முழுமை பெறுகிறது.

நமக்குப் பிரியமானவர்கள் நோயினாலும் நொறுக்கப்பட்ட உடலுடனும் மரித்திருந்தாலும், அவர்கள் பெலத்துடன் பாவத்தினால் கறைபடியாத அழகிய ரூபத்தில் எழுப்பப்படுவார்கள்.



## உயிரோடிருக்கும் விசுவாசிகள் மறுரூபமாக்கப்படுதல்

மரித்த இரட்சிக்கப்பட்டோர் எழுப்பப்படுகிற அதே வேளையில் உயிரோடிருக்கும் இரட்சிக்கப்பட்டோரும் ஒரு முழு மறுரூபமாக்கப்படுதலை தங்கள் சரீரங்களில் அனுபவிப்பர். அவர்களும்கூட அழியாமையை தரித்துக்கொண்டு மாற்றம் பெறுவார்கள். “இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்தியரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்” (1 கொரிந்தியர் 15:51). வயது மற்றும் ஆற்றலிழப்பு இவைகளின் வடுக்கள் அவர்களுடைய சரீரங்களிலிருந்து முழுமையாக நீக்கப்படும்.

ஒரு குழுவினர் அடுத்த குழுவினரை முந்திக் கொள்வதில்லை. உயிரோடு எழுப்பப்பட்ட மரித்த நீதிமான்கள் உயிரோடிருக்கும் நீதிமான்களை முந்திக்கொண்டு பரலோகத்துக்குப்போவதில்லை. பவுல் விவரிக்கிறார், “பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்” (1 தெசலோனிக்கேயர் 4:17).

இயேசு வரும்போது, எல்லா விசுவாசிகளும் அவருடைய வருகையைப்பார்க்க ஆஜராயிருப்பார்கள். இரட்சிக்கப்பட்டோர் அனைவரும் எதிர்கொண்டு போய் ஆகாயத்தில் அவரை சந்திப்பர். உயிரோடிருந்தாலும் சரி அல்லது மரித்திருந்தாலும் சரி எல்லா விசுவாசிகளும் ஒன்று சேர்ந்து தங்கள் சிருஷ்டிகரும் மீட்பருமானவரை ஒரே சமயத்தில் வரவேற்பார்கள்.

## அவிசுவாசிகளின் மரணம்

பெரும் திறமை வாய்ந்த கிறிஸ்துவின் வருகை அவருடைய வருகைக்காக வெகுவாக காத்துக் கொண்டிருந்தவர்களுக்கு சந்தோஷத்தை கொண்டு வரும் அதே வேளையில் அவருடைய இரட்சிப்பை மறுத்தவர்களுடைய இருதயங்களில் பயங்கரம் ஒட்டிக்கொள்ளும். இயேசு காணப்படும்போது இரட்சிக்கப்பட்டோர் உற்சாகத்தால் நிரப்பப்படுவர், இழந்து போனோர் பயத்தினால் மூழ்கடிக்கப்படுவர்.

திகிலினால் மேற்கொள்ளப்பட்டு, இரட்சிப்பை இழந்தவர்கள் இயேசுவிடமிருந்து மறைந்துக் கொள்ளப்பார்ப்பார்கள். மலைகளையும் குன்றுகளையும் பார்த்து சத்தமிடுவார்கள், “நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்; அவருடைய கோபாக்கினையின் மகாநாள் வந்துவிட்டது, யார் நிலைநிற்கக்கூடும்” (வெளிப்படுத்தின விசேஷம் 6:16, 17).

இயேசுவின் தோற்றத்தின் பிரகாசம் மீட்கப்பட்டோருக்கு வரவேற்கக்கூடிய காட்சியாயிருக்கும், ஆனால் துன்மார்க்கருக்கு பயப்படக்கூடிய காட்சியாயிருக்கும். கிறிஸ்துவையும் அவருடைய அன்பின் இரட்சிப்பின் சைகைகளையும் மறுத்தவர்கள் யாவரும் மரித்து போவார்கள். “அவளுக்கு வரும் வாதைகளாகிய சாவும் துக்கமும் பஞ்சமும் ஒரே நாளிலே வரும், அவள் அக்கினியினாலே சுட்டெரிக்கப்படுவாள்; அவளுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் தேவனாகிய கர்த்தர் வல்லமையுள்ளவர்” (வெளிப்படுத்தின விசேஷம் 18:8).

ஜனங்களை பாவத்துக்குட்படுத்திய இந்த பூலோகத்தின் அதிபதியாகிய “அக்கிரமக்காரன்” கூட அழிக்கப்படுவான், “அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார்” (2 தெசலோனிக்கேயர் 2:8). எனினும் இந்த மரணம் கடைசி மரணமல்ல - இரண்டாம் மரணம் (வெளிப்படுத்தின விசேஷம் 2:11) – ஆனால் இது முதல் மரணம் எனப்படுகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 20:6 யை பார்க்கவும்)

நெடுங்கால அடக்குமுறையின் வருத்தத்துக்குப் பிற்பாடு, தேவனுடைய மக்கள் இறுதியாக சாத்தானுடைய தீமையின் பிடியிலிருந்து விடுவிக்கப்படுவார்கள். நம் நாட்டின் கல்லறைகளில் பொறிக்கப்பட்டிருந்த அவனுடைய வல்லமையின் சுவடு இறுதியில் அழிக்கப்படுகிறது.





# மரித்தோரின் உயிர்த்தெழுதல்

**வரையறை:**

*மரணத்துக்குப்பிறகு தனித்தன்மையையும் சேர்த்து ஜீவன் மற்றும் சரீரத்தை மறுசீரமைத்தல், இரண்டாம் வருகையில் நடைபெற இருக்கும் நித்திய ஜீவனின் விடியலின் நம்பிக்கைக்கு கிறிஸ்தவர்கள் எதிர்நோக்கியிருக்கிறார்கள். துன்மார்க்கரின் - இரண்டாம் உயிர்த்தெழுதல் - ஆயிரவருஷகால முடிவில் கடைசி நியாயத்தீர்ப்பின் போது நடைபெறும். (வெளிப்படுத்தின விசேஷம் 20:5, 12, 13 பார்க்கவும்)*

# இயேசுவின் வருகைக்குப்பிறகு நடைபெறும் சம்பவங்கள்



**உலகத்தின் மிகப்பெரிய நிலையான திரை ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னியில் நிலைப்பெற்றிருக்கிறது. அதனுடைய அளவு 117 அடிக்கு 97 அடி, அதனுடைய மொத்த பரப்பளவு 11,349 சதுர அடி. இந்த திரையரங்கு செப்டம்பர் 1996 – ல் திறக்கப்பட்டது, அதனுடைய அமரும் திறன் 540 பேர்.**



நவீன உலகத்தின் ஆச்சரியமான கட்டடக்கலைகளின் ஒன்றான ஹூவர் அணை (Hoover Dam) மீது, அறுபது படக்காட்சி இயந்திரங்கள் ஒன்று சேர்ந்து லட்சக்கணக்கான ஒளிச்செறிவை கடுமையாக வீசி ஒரு படத்தை விண்மின் அளவுக்கு 4,20,000 சதுர அடி வெளிப்பரப்பில் காட்டியதால் மே 5, 2015-ல் இந்த திரை முற்றிலுமாக “தோற்றுப்போனது”.

அது நிச்சயமாகவே மிகப்பெரிய படக்காட்சிதான், ஆனால் ஒருநாள், தேவன் மனித குலத்தின் சரித்திரத்தை அதைவிட பெரிய திரையில் காண்பித்து, வாழ்ந்திருந்த ஒவ்வொருவரின் இறுதியான முடிவினை வெளிப்படுத்திக்காட்டுவார். “ஆயிரம் வருடத்திற்குப்பிறகு நாம் எல்லாரும் இந்த மிகப் பரந்த காட்சியை பார்க்கவிருப்பதால் இதனுடைய இருக்கைகளுக்கு நாம் முன்பதிவு செய்வது தேவையற்றது. ஆனால் இந்த “ஆயிரம் வருடம்” என்பது என்ன?

ஆங்கிலத்தில் இது “மில்லேனியம்” என்று அழைக்கப்படும் இந்த வார்த்தை வேதாகமத்தில் எங்கும் காணப்படவில்லை. இது லத்தீன் பாஷையின் வார்த்தைகளான “மில்லி” மற்றும் “ஏனியம்” என்கின்ற வார்த்தைகளை ஒன்று சேர்த்து “ஒரு ஆயிரம்வருடங்கள்” என பொருள்படுகிறது. இந்தப்பதம் வெளிப்படுத்தின விசேஷம் 20 –ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருப்பது போல ஆயிரம் வருட காலத்தைக் குறிக்க அநேக கிறிஸ்தவர்களால் பயன்படுத்தப்படுகிறது, இந்த அதிகாரத்தில் 1 முதல் 7 வசனங்கள் வரை “ஆயிரம்வருடம்” என ஆறு முறை குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இன்று கிறிஸ்தவ உலகில், ஆரம்பம், காலஅளவு மற்றும் முடிவு பற்றிய ஆயிரவருட அரசாட்சியை சார்ந்த சம்பவங்கள் பற்றி வித்தியாசமான கருத்துக்கள் இருக்கின்றன. இந்த காரணத்துக்காகவே, இந்த முக்கியமான காலக்கட்டத்தைப் பற்றி வேதாகமம் என்ன சொல்லுகிறது என்பதை துல்லியமாக ஆராய்ந்து பார்ப்போம்....

> “மில்லேனியம்” என்கின்ற வார்த்தை ஆங்கில வேதாகமத்தில் காணப்படவில்லை என்பதை அறிந்திருக்கிறீர்களா? இது லத்தீன் பாஷையின் வார்த்தைகளான “மில்லி” மற்றும் “ஏனியம்” என்கின்ற வார்த்தைகளை ஒன்று சேர்த்து “ஒரு ஆயிரம் வருடங்கள்” என பொருள்படுகிறது.






## ஆயிரம் வருஷகால ஆரம்ப சம்பவங்கள்

இயேசு வரும்போது, மரித்த நீதிமான்கள் உயிர்ப்பிக்கப்படுகிறார்கள், அதோடுகூட, உயிரோடிருக்கும் நீதிமான்கள் மேகங்கள்மேல் இயேசுவை எதிர்கொண்டு பரலோகத்துக்கு எடுத்துச் செல்லப்படுகிறார்கள் என நீங்கள் ஏற்கனவே படித்திருக்கிறீர்கள். (1 தெசலோனிக்கேயர் 4:15-17 பார்க்கவும்) இரட்சிக்கப்படாதோர் அவருடைய வருகையின் பிரகாசத்தினால் அழிக்கப்படுகின்றனர் என்பதையும் மற்றும் ஏற்கனவே மரித்த இரட்சிக்கப்படாதோர் அப்படியே இருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

என்ன மீதமிருக்கிறதென்றால், வெறுமையான பூமி, "அக்காலத்திலே பூமியின் ஒருமுனை துவக்கிப் பூமியின் மறுமுனைமட்டும் கர்த்தரால் கொலையுண்டவர்கள் கிடப்பார்கள்; அவர்கள் புலம்பப்படாமலும் சேர்க்கப்படாமலும் அடக்கம் பண்ணப்படாமலும் பூமியின்மேல் எருவாவார்கள்" (எரேமியா 25:33. 4:23-26 – யையும் பார்க்கவும்). வெளிப்படையாக, இந்த ஆயிர வருஷ காலத்தில் மனிதர்கள் பூமியில் உயிர்வாழுவதற்கு சாத்தியமில்லை.



பிற்பாடு என்ன சம்பவிக்கிறது என்பதை வேதாகமம் எப்படி விவரிக்கிறது என்பதை கவனியுங்கள்:

> *"ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக்கொண்டு வானத்திலிருந்திறங்கிவரக்கண்டேன். பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான். அதற்குப் பின்பு அது கொஞ்சக்காலம் விடுதலையாகவேண்டும்" (வெளிப்படுத்தின விசேஷம் 20:1-3).*

இரட்சிக்கப்பட்டோர் பரலோகத்தில் இருக்கும் அதே வேளையில் இரட்சிக்கப்படாதோர் பூமியில் இறந்து கிடப்பர், பிசாசு 1,000 வருடங்களுக்கு இந்த கிரகத்தில் கட்டப்பட்டிருப்பான். நீங்கள் இருக்கவேண்டுமென விரும்பும் இடமாக அது இருக்காது! இந்த உலகம் "ஒழுங்கின்மை"யானது என விவரிக்கப்படுகிறது, இதனுடைய கிரேக்க வார்த்தை "அபுசாஸ்" (abussos) என்பது, இதன் அர்த்தம். "இருண்ட, பாழாய்போன, வெறுமையான பகுதி மற்றும் குழப்பமான நிலை." பழைய ஏற்பாட்டில் எரேமியா 4 மற்றும் ஆதியாகமம் 1:2 -ல் பூமி சிருஷ்டிக்கப்படுமுன்பாக இருந்த நிலையாகிய "ஒழுங்கின்மையும் வெறுமையும்" என்கின்ற பதங்களுக்கு இணையாக இருக்கிறது. இயேசுவின் இரண்டாம் வருகை இந்த உலகத்தை குறுகச்செய்து சிருஷ்டிப்புக்கு முன்பாக இருந்த ஒழுங்கற்ற நிலைக்கு கொண்டு வந்துவிடுகிறது.

சாத்தான் நிஜமான சங்கிலியினால் கட்டப்பட்டு நிஜமான பாதாளத்துக்கு தள்ளப்படுகிறான்? இல்லை. விழுந்து போன தூதர்கள் வெளிப்புறமான சங்கிலியினால் கட்டப்படவில்லை. சாத்தான் இந்த பூமியையே எல்லையாக வைக்கப்பட்டிருப்பதின் காரணம், "அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும் வரைக்கும் அது ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு" என்பதே. அவனுடைய தீமையான வேலையை தடுத்துவைப்பதற்கு ஒரேவழி அவனிடமிருந்து ஜனங்களை நீக்கி யாருமே இல்லாத இடத்தில் அவனை நிலைநிறுத்தி வைப்பதே ஆகும். வெறுமையான உலகம் என்கின்ற சூழ்நிலையே பிசாசை கட்டி வைக்கிறது.

## ஆயிரம் வருஷ காலத்தின்போது நடைபெறும் சம்பவங்கள்

சாத்தான் சிறைபிடிக்கப்பட்டவனாக பூமியில் இருக்கும்போது, தேவனுடைய ஜனங்கள் அவரோடேகூட பரலோகத்தில் அரசாட்சி செய்வார்கள். பேதுரு சீஷன், "ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர்?" (யோவான் 13:36) என கேட்டபோது இயேசு இதைத்தான் கூறினார். இயேசு பதிலளித்தார், "நான் போகிற இடத்துக்கு இப்பொழுது நீ என் பின்னே வரக்கூடாது, பிற்பாடு என் பின்னே வருவாய்." கிறிஸ்துவின் பின்னடியார்கள் எந்த இடத்துக்குப் போவார்கள்?

> *"உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்; என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" (யோவான் 14:1-3).*


அப்போஸ்தலனாகிய யோவானும் இரட்சிக்கப்பட்டோர் எங்கே இருப்பார்கள் என விவரித்தார். "அவர்கள் உயிர்த்து கிறிஸ்துவுடனே கூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்."
(வெளிப்படுத்தின விசேஷம் 20:4) இந்த பரிசுத்தவான்கள் புதிய எருசலேம் ஆகிய பரலோகத்தில் "கிறிஸ்துவுடனே" இருப்பார்கள் மற்றும் ஆயிரம் வருஷ காலத்தின் முடிவில் அது பூமிக்கு இறங்கி வரும் (வெளிப்படுத்தின விசேஷம் 3:12, 21:2 பார்க்கவும்).

யோவான் மேலும் விளக்கினார், "நான் சிங்காசனங்களைக் கண்டேன்; அவைகளின்மேல் உட்கார்ந்தார்கள்; நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது" (வெளிப்படுத்தின விசேஷம் 20:4). பரிசுத்தவான்கள் இரட்சிக்கப்பட்டோர் யார், இழந்து போனவர் யார், என்று தீர்மானிக்கப் போவதில்லை. இந்த வேலை தேவனால் ஏற்கனவே முடிக்கப்பட்டுவிட்டது. மாறாக, தேவனுடைய நீதிபற்றியும், கிருபை பற்றியும் எந்தவித சந்தேகமும் எழாதபடிக்கு தீமையான தூதர்களின் மற்றும் இழந்து போன மனிதர்களின் ஒவ்வோரு வழக்குகளையும் மீட்கப்பட்டோர் சரிபார்க்கும் நியாயத்தீர்ப்பின் வேலையை இந்த ஆயிரம் வருஷ காலம் உள்ளடக்குகிறது.

1,000 வருடமளவும், பரிசுத்தவான்கள் துன்மார்க்கமான தூதர்களையும் மனிதர்களையும் "நியாயத்தீர்ப்பு" செய்வார்கள். பவுல் பரலோகத்தில் புத்தகங்களின் இந்த ஆய்வினை விவரிக்கிறார்: "பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? உலகம் உங்களால் நியாயந்தீர்க்கப்படுவதாயிருக்க, அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா? தேவ தூதர்களையும் நியாயந்தீர்ப்போமென்று அறியீர்களா? அப்படியிருக்க, இந்த ஜீவனுக்கேற்றவைகளை நீங்கள் தீர்த்துக்கொள்ளாக்கூடாதிருக்கிறது எப்படி?" (1 கொரிந்தியர் 6:2,3).

பரலோகம் சென்ற பிறகு உங்களுக்கு அன்பான நீங்கள் எதிர்பார்த்த நபரை அங்கு காணமுடியவில்லையென்று கற்பனை செய்து பாருங்கள். இயல்பாகவே ஏன் என்கின்ற கேள்வி எழும். தேவன், எழுப்பப்படும் ஒவ்வொரு கேள்விக்கும் பதிலளிக்கும் தருணத்தை ஏற்படுத்துகிறார். எல்லா சந்தேகங்களும் ஒட்டு மொத்தமாகத் தீர்க்கப்படும்.






## ஆயிரம் வருஷகால முடிவில் நடைபெறும் சம்பவங்கள்

ஆயிரம் வருடகால முடிவில் என்ன சம்பவிக்கிறது? வேதாகமம் சொல்லுகிறது, "அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகி,....ஜாதிகளை மோசம் போக்கும்படி.." (வெளிப்படுத்தின் விசேஷம் 20:7,8).

பிசாசானவன் இன்னமும் ஒருமுறை ஜனங்களை மோசம் போக்குவதற்கான காரணம், மரணமடைந்த துன்மார்க்கர் எழுப்பப்படுகிறார்கள். இது 5-ம் வசனத்தில் விளக்கப்படுகிறது. அது சொல்வது, "மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை." மரித்த நீதிமான்கள் இயேசு வரும்போது உயிர்ப்பிக்கப்படுகிறார்கள், அதனால் "மரணமடைந்த மற்றவர்கள்" எழுப்பப்பாடதவர்களைச் சுட்டிக்காட்டுகிறது – அது இழந்து போனோர். இயேசு இதனை "ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்கள்" என குறிக்கிறார். (யோவான் 5:29).

கிறிஸ்துவும் அவருடைய ஜனங்களும் இப்பொழுது பூமிக்குத் திரும்புவார்கள், அங்கே கடைசியில் அவர் சாத்தானோடு இருக்கும் மாபெரும் பிரபஞ்ச போராட்டத்தை முடித்து வைத்து ஆயிரவருட முடிவின் நியாயத்தீர்ப்பினை தொடங்குவார். ஆனால் தன்னுடைய இறுதி வஞ்சனையின் செயலை நடப்பிக்க "சாத்தான் கொஞ்ச காலம் விடுதலையாக வேண்டும்" (வெளிப்படுத்தின விசேஷம் 20:3). அவன் துன்மார்க்கரை ஒன்று சேர்த்து "பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும் பிரியமான நகரத்தை வளைத்து" கொள்ளுவான் (வசனம் 9). இயேசுவின் இரட்சிப்பின் மூலமாக புதிய எருசலேமை அடைவதற்கு பதிலாக அவர்கள் அந்த நகரத்தை சுற்றி வளைத்து கட்டாயமாக பிடிக்க தீர்மானம் எடுக்கிறார்கள்.

இந்த வேளையில் தேவன் தன்னுடைய நியாயத்தீர்ப்பின் பெரிய "வெள்ளைச் சிங்காசனத்தை" முன் வைக்கிறார். வாழ்ந்திருந்த அனைத்து மனுகுலமும் கர்த்தருக்கு முன்பாக நிற்கிறார்கள்.

> *"பின்பு, நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன்; அவருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்று போயின; அவைகளுக்கு இடங்காணப்படவில்லை. மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்"*
> *(வெளிப்படுத்தின விசேஷம் 20:11,12).*



## தேவனுடைய எல்லா ஜனமும் அவர்களுடைய நேசமுள்ள சிருஷ்டிகரின் பிரசன்னத்தில் சந்தோஷத்தினாலும் மகிழ்ச்சியினாலும் எப்பொழுதும் நிறைந்திருப்பர்.

மீட்கப்பட்டோர் நகரத்துக்குள் பத்திரமாயிருக்கிறார்கள் ஆனால் மீட்கப்படாதோர் வெளியில் இருக்கிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுலும் இந்த நேரத்தைப்பற்றி சொன்னார், "நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயசனத்திற்கு முன்பாக நிற்போமே" (ரோமர் 14:10). அவரை நிராகரிக்கின்றவர்கள் இந்த வேளையில் அழுகையுடன் இருப்பார்கள் என இயேசு விவரிக்கிறார் மற்றும் அங்கே "பற்கடிப்பும்" உண்டாயிருக்கும் எனச் சொன்னார் (லூக்கா 13:28). தேவனுடைய சிங்காசனம் முன்பாக நிற்க ஏன் துன்மார்க்கர் எழுப்பப்படுகின்றனர்? மீட்கப்பட்டோர், ஆயிரவருட காலத்தில் தேவனின் நீதியை உறுதிபடுத்திக் கொண்டது போல, துன்மார்க்கர் - சாத்தானும் அவனுடைய தூதர்களையும் சேர்த்து – கர்த்தருடைய நியாயமான முடிவுகளை ஏற்றுக்கொள்வார்கள். பவுலுடைய முன்னறிவிப்பு நிறைவேற்றம் பெறுகிறது:

> *"ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" (பிலிப்பியர் 2:9-11).*

புத்தகங்கள் திறக்கப்படும்போது, தேவனுடைய கிருபையை மறுத்த ஒவ்வொரு பாவிக்கும் தேவன், அவன் செய்த பாவங்களை மனதில் நினைப்பூட்ட வைக்கிறார். பிறகு, ஒவ்வொரு மனிதனும் மனுஷியும் மாபெரும் மொத்த இரட்சிப்பின் திட்டத்தின் மறுபார்வையை காணம்படி வெளிப்படுத்தப்படுகிறது. தேவன் மனுகுலத்தை மரணத்திலிருந்து இரட்சிக்க எடுத்துக்கொண்ட ஒவ்வொரு பிரயாசத்தையும் எல்லாரும் பார்ப்பார்கள். ஆதாமுடைய சோதனை மற்றும் விழுகை முதல் கிறிஸ்துவின் சிலுவைவரை மற்றும் தேவனுடைய மக்கள் துன்பப்படுத்தப்பட்ட சரித்திரம் முழுவதிலும், ஒவ்வொரு மனிதனும் தேவனுடைய கிருபையை ஏற்றுக்கொண்டோ அல்லது நிராகரித்தோ தான் செயல்பட்ட விதம் பற்றி அறிவான்.

இறுதியில், அனைவரும் ஒரே குரலில் ஏற்றுக்கொள்வர்: "தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள், பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்" (வெளிப்படுத்தின விசேஷம் 15:3). அன்பும் நீதியுமான சிருஷ்டிகரின் குணாதிசயங்கள் வாழ்ந்திருந்த ஒவ்வொருவராலும் உறுதிப்படுத்தப்படும். தேவனுக்கு எதிரான சாத்தானின் குற்றச்சாட்டுகள் - அவர் அநீதியானவர் மற்றும் இரக்கமில்லாதவர் - எல்லாம் சாம்பலைப்போல விழுந்துவிடும்.

இப்பொழுது, இன்னொரு கடைசி பிரயத்தனம் நகரத்தை தாக்க எடுக்கப்படுகிறது, தேவன் தம்முடைய ஜனங்களுக்காக எழும்புகிறார். "வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப்போட்டது" (வெளிப்படுத்தின் விசேஷம் 20:9). "ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாக காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்" (வசனம் 15). துன்மார்க்கர் நித்தியமாக எரிந்துகொண்டிருக்கமாட்டார்கள், ஏனென்றால், "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23). இந்த நரகத்தின் அக்கினி "ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்கும்" என இயேசு உறுதிப்படுத்தினார் (மத்தேயு 10:28). "நித்திய அக்கினி" என்பது அவிக்கமுடியாத அக்கினி, அது துன்மார்க்கரை முழுமையாக எரித்து நிரந்தரமான முடிவுகளை தரும் மற்றும் பூமியின் எல்லா பாவத்தையும் சுத்திகரிக்கும். (நரக அக்கினி பற்றி அதிகமாக தெரிந்துக்கொள்ள பக்கம் 19 யை பார்க்கவும்) வேதாகமம் சொல்லுகிறது,

> *"இதோ, சூளையைப்போல எரிகிற நாள் வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ்செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற்போகும்" (மல்கியா 4:1).*

எல்லாம் அழிக்கப்பட்டப்பின்பு, பாவத்தின் மாசு பூமியிலிருந்து நீக்கப்பட்டப் பின்பு, இந்த கிரகத்தை ஆதியில் இருந்தது போல இருக்க தேவன் மறு சீரமைப்பு செய்வார். "பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின" (வெளிப்படுத்தின் விசேஷம் 21:1). "சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்" (வசனம் 5).

நன்மைக்கும் தீமைக்கும் நடந்த மாபெரும் யுத்தம் கடைசியில் முடிவுக்கு வருகிறது! இனி பாவமில்லை. இந்த இடத்திலிருந்து தேவனுடைய எல்லா ஜனமும் அவர்களுடைய நேசமுள்ள சிருஷ்டிகரின் பிரசன்னத்தில் சந்தோஷத்தினாலும் மகிழ்ச்சியினாலும் எப்பொழுதும் நிறைந்திருப்பர்; அவர் அவர்களுடைய கண்களில் இருந்து வரும் கண்ணீரைத்துடைப்பார்.



**அனைவரும் ஒரே குரலில் ஏற்றுக்கொள்வர், "தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்" (வெளிப்படுத்தின விசேஷம் 15:3).**

ஆயிரம் வருஷங்கள்

# ஆயிரம் வருஷ காலத்தின் நோக்கங்கள்

**ஆயிரம் வருஷ காலமின்மை -** இயேசு இந்த பூமியின்மீது நேரடியான, ஆயிரம் வருஷ கால நீளத்துக்கு, சரீர பிரகாரமான அரசாட்சி செய்வார் என்கின்ற கோட்பாடுக்கு எதிரிடையானது. இதனுடைய நேரடி பொருள் "ஆயிரம் வருஷ காலம் என்பதே இல்லை."

**இறை ஆட்சி முறையின் ஆயிரம் வருஷ காலத்துக்கு முன்பு -** இயேசு ஏழு வருட உபத்திரவகாலத்துக்கு முன்பாக வருவார் மற்றும் இரகசிய எடுத்துக்கொள்ளப்படுதல் மூலம் கிறிஸ்தவர்களை பரலோகத்துக்கு எடுத்துச் செல்வார் என்கின்ற நம்பிக்கை. கிறிஸ்து உபத்திரவகாலத்துக்குப் பிறகு சரீர பிரகாரமாக வருவார்.

**வரலாற்று ஆயிரம் வருஷ காலத்துக்கு முன்பு -** இயேசு சரீர பிரகாரமாக ஆயிரம் வருஷ காலத்துக்கு முன்பாக திரும்பி வருவார் என்கின்ற நம்பிக்கை. இறை ஆட்சி முறையின் ஆயிரம் வருஷ காலத்துக்கு முன்பு என்னும் நம்பிக்கைக்கு எதிர்மறையாக வரலாற்று ஆயிரம் வருஷ காலத்துக்கு முன்பு எனும் நம்பிக்கை உபத்திரவத்திற்குபிறகு தம்முடைய மக்களுக்காக இயேசு ஆயிரம் வருஷ காலத்துக்கு முன்பதாக வருவார் என கூறுகிறது.

**ஆயிரம் வருஷ காலம் -** பூமியில் "பொற்காலம்" வரும், அதில் கிறிஸ்து கடைசி நியாயத்தீர்ப்புக்கு முன்பதாக ஆயிரம் வருஷங்களுக்கு அரசாட்சி செய்வார் எனும் நம்பிக்கை.

**ஆயிரம் வருஷ காலத்துக்கு முன் -** ஆயிரம் வருஷ காலத்துக்கு முன்பதாக கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இருக்கும் எனும் நம்பிக்கை.

**ஆயிரம் வருஷ காலத்துக்கு பின் -** கிறிஸ்துவின் இரண்டாம் வருகை ஆயிரம் வருஷ காலத்துக்கு பின்பாக நடைபெறும் எனும் நம்பிக்கை.



# கடைசி நியாயத்தீர்ப்பு

**வரையறை:**

*மாபெரும் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு என்றும் அறியப்படுகிறது, இது கடைசி கட்ட நியாயத்தீர்ப்பு, அதில் தான் எல்லா மனுக்குலமே தேவனின் சிங்காசனம் முன்பு நின்று அவருடைய அன்பையும் கிருபையையும் ஏற்றுக்கொள்ளும். அது இரட்சிக்கப்படாதோரின் உயிர்த்தெழுதலை ஆயிரம் வருஷ முடிவில் தொடர்கிறது மற்றும் எல்லா பாவம், தீமை இவைகளின் அழிவுக்கு முன்னால் நடைபெறுகிறது.*

## ஆயிரம் வருஷ காலம் ஆரம்பிக்கிறது




## ஆயிரம் வருஷ காலத்தின் போது




## ஆயிரம் வருஷ கால முடிவு





# இயேசுவின் வருகைக்காக ஆயத்தப்படுதல்



**இந்த கடினமான காலத்தில் வாழும் மக்கள் நாகரீகம் சந்திக்கிற பெருகிவரும் துன்பங்களை கவனிக்கும்போது அவர்களுடைய வாழ்க்கையின் ஏதோ ஒரு கட்டத்தில் பிரதான அழிவை வளர்ந்துவரும் பயம் எதிர்நோக்கி இருப்பதால், ஒரு புதிய ஒட்டுமொத்த கலாச்சாரம் அவர்களுக்குள் வெளிப்படுகிறது.**

உயிர் வாழ்வது பற்றி பேசுபவர்கள், புதியவற்றிற்கு தயார் படுத்துதல் பற்றி சொல்பவர்கள், பின்வாங்குபவர்கள் என்கிற வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறார்கள். இயற்கை பேரழிவுகள், சமுதாய சீரழிவு, தீவிரவாத தாக்குதல்கள் அல்லது அணுஆயுத யுத்தத்தையும் சேர்த்து இவைகளைப்பற்றி அக்கறை கொண்டு, அவர்கள் உயிர்வாழ்வதற்கு ஆயத்தப்பட போகிறவர்கள். உயிர் வாழ்வது பற்றி பேசுபவர்கள் வெவ்வேறு வகைகளில் ஆயத்தபட வேண்டும் என்கிற கருத்துகளை சொல்லுகிறார்கள். வெள்ளம், சூறாவளி மற்றும் பூமியதிர்ச்சி போன்ற பொதுவான சூழ்நிலைகளுக்காக நிறையபேர் மின்கல விளக்குக்கான மின்கலங்கள், தண்ணீர் போன்றவற்றை தயார் நிலையில் வைத்திருக்கிறார்கள். எனினும் மற்றவர்கள் பூமிக்கடியில் பல வருடங்கள் தாங்கக்கூடிய ஒளிப்பீடங்களை கட்டி வைத்திருக்கிறார்கள். சமுதாய சீரழிவு வரும்போதும் உணவு பற்றாகுறை வரும்போதும் காப்பாற்றி கொள்ள சுயபாதுகாப்பு அறிந்திருக்க சிலர் வலியுறுத்துகின்றனர், மற்றவர்கள் அணுஆயுத பேரழிவுக்கும், உலகளாவிய தொற்று நோய்களுக்கும் தயார்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

இந்த காலாச்சாரம் அதற்கு சொந்தமான புரியாத மொழியையும் வைத்திருக்கிறது. பிஓபி (BOB) என்கின்ற ஒரு பை இருக்கின்றது. இது அவசரத்துக்கு ஓடும்போது தேவையான பொருட்களை பெற்றிருக்கிறது. இடிசி (EDC) என்பது ஒவ்வொரு நாளும் எடுத்துச்செல்லும் பை, இதனை எப்பொழுதும் உங்களுடன் எடுத்தச்சென்று திடீரென அழிவு நேரிட்டால் அதில் உள்ள பொருட்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம் மற்றும் நீங்கள் “நல்லதே நடக்கும் என நினைப்பவர்” என முத்திரையிடப்படலாம் - பெருமளவு பேரழிவின்







சாத்தியக்கூறுகளை மறுப்பவர் என்பவராக.

ஆனால் "நேஷ்னல் ஜியாக்ரா.ஃபி தொலைக்காட்சி" ஒளிப்பரப்பில் காட்டப்படும் இறுதி தீர்ப்பு நாளுக்கு ஆயத்தப்படுவோர் போல நாம் அறிந்திருக்கும் உலகத்தின் முடிவுக்கு நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ளவேண்டுமா?

நான் பார்த்ததுபோல, ஒருநாள் சீக்கிரத்தில் கிறிஸ்து திரும்ப வருவார், ஒவ்வொன்றும் கடுமையான மாற்றம் பெறும் என்று வேதாகமம் போதிக்கின்றது. அப்படி அது நடைபெறும் போது நாம் எவ்வாறு அதற்காக ஆயத்தமாக முடியும்?

சில மாதங்களுக்குத் தேவையான மளிகை சாமான்களை சேகரித்து மலைகளுக்கு போவதற்கு ஆரம்பிக்கவேண்டுமா? ஒருவேளை பேரழிவு நேர்ந்தால் நிச்சயமாகவே சில ஞானமான ஆயத்தங்களை நீங்கள் செய்யலாம், ஆனால் இயேசுவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்பட பெரும் முக்கியமானவை எவை என தேவன் என்ன சொல்லுகிறார்?

ஒரு விஷயத்திற்காக, வரப்போகும் முடிவு கால சம்பவங்களிலிருந்து தப்பிப்பிழைக்க தேவனோடு கொண்டிருக்கும் நிலையான தொடர்பு முக்கியமானது. அவர் வரு முன்பதாக நடைபெறப்போகும் ஆபத்துகளுக்கு எப்படி தப்பிக்கலாம் என்பதைப்பற்றி கூறும்போது இயேசு சொன்னார், "ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷ குமாரனுக்கு முன்பாக நிற்கப்பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்" (லூக்கா 21:36).

வனப்பகுதி காப்பாளர்கள் தங்களுடைய கோடை காலத்தை காடுகள் சுற்றியிருக்கின்ற ஒரு கோபுரத்தில் செலவிடுவார்கள். தீப்பற்றும் காலத்தில், அஜாக்கிரதையான முகாமிட்டிருப்பார்களாலோ அல்லது மின்னல் தாக்குவதாலோ எங்கேயாகிலும் தீப்பிடிக்கும் என்றால் அதனை தொடர்ந்து கண்காணிப்பதே அவர்களுடைய வேலை. அவர்கள் வன அலுவலகத்தோடு இடைவிடா வானொலி தொடர்புடன் இருப்பார்கள். அதேபோல நாமும்கூட "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்" (கொலோசேயர் 4:2). ஏனென்றால், "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்" (1 பேதுரு 4:7).

கடைசி கால வஞ்சனைகளிலிருந்து தப்பிக்க மற்றும் இரண்டாம் வருகையில் இயேசுவோடு சந்தோஷமாக மறுபடியும் இணைக்கப்பட இடைவிடா ஜெப வாழ்க்கையும் கர்த்தரோடு தொடர் உறவு வைத்திருப்பதும் மிக முக்கியமான தேவைகளாகும்.


## முடிவு காலத்துக்கு முன்னேற்பாடுகள்

பேரழிவிலிருந்து தப்பிக்கச்செய்யவேண்டிய முக்கியமான அடிப்படை ஆயத்தம், உணவு, தண்ணீர் போன்ற தேவையான பொருட்கள் கிடைக்கும்படி செய்வது.

ஆனால் இயேசு இதையும் சொன்னார், "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" (மத்தேயு 4:4). பேரழிவுக்குப்பின் பேரழிவை சந்தித்த யோபு என்பவரின் சரித்திர கதையை பெற்றிருக்கும் யோபு புத்தகம் உறுதி படுத்துகிறது. "அவருடைய வாயின் வார்த்தைகளை எனக்கு வேண்டிய ஆகாரத்தைப் பார்க்கிலும் அதிகமாய்க் காத்துக்கொண்டேன்" (யோபு 23:12).

தேவனுடைய வார்த்தையில் வேரூன்றி இருப்பது என்பது கடைசிகாலத்தில் நீங்கள் வஞ்சிக்கப்படாதபடிக்கு உங்களை பாதுகாக்க உதவுகிறது மற்றும் அது கர்த்தரை கனம்பண்ணும் வாழ்க்கையை வாழ்வதற்கும் உதவுகிறது. கடைசி வஞ்சனை கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்குமளவுக்கு தூண்டக்கூடியதாயிருக்குமென இயேசு எச்சரித்தார் என்பதை நினைவுக்கூறுங்கள்! (மத்தேயு 24:24). புத்தியுள்ளவனும் புத்தியில்லாதவனும் பயங்கரமான சூறவளியை சந்திப்பார்கள் என இயேசு சொன்னார், ஆனால் அவருடைய வார்த்தைகளைக் கேட்டு அவைகளின்படி நடக்கிறவர்கள் மாத்திரமே கடைசி வரையில் தப்பித்துக்கொள்வார்கள் என சொன்னார் (மத்தேயு 7:24-27).






யோவான் 7:37, 38 – ல் இயேசு அறிவித்தார், “ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்....என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்”. கிறிஸ்துவின் ஜீவத்தண்ணீரையும் பெற்றுக்கொள்வது என்பது அவரை நீங்கள் விரும்புவற்காக அவர் உங்கள் இருதயத்தில் வருவதற்கு அனுமதிப்பதே ஆகும். “ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்” (யோவான் 3:5).

இயேசுவுக்காக காத்திருக்கும் வேளையில், நம்முடைய குனாதிசயங்களை வரப்போகிற நித்தியத்தில் வாழ்வதற்கு ஆயத்தப்படுத்த அவர் விரும்புகிறார். “உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்” (2 பேதுரு 1:5-7). இதைச் செய்வதற்கு உதவிசெய்ய இயேசு வாக்களித்திருக்கிறார், “என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்” (எபிரெயர் 8:10).

இயேசுவை உங்கள் வாழ்க்கையில் முன்னிலையில் வைத்திருக்க ஒருவழி அவரை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுதல். 1 திமோத்தேயு 4:16 சொல்கிறது, “உன்னைக்குறித்தும் உபதேசத்தைக்குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளுவாய்”. நம்முடைய விளக்கை தைரியமாக மலையின்மேல் வைத்து சுவிசேஷ வெளிச்சத்தை பிரகாசிக்க செய்யும் வேளை இதுதான்! (மத்தேயு 5:14-16 பார்க்கவும்). “ஏற்றவேளையிலே தன் வேலைக்காரருக்குப் போஜனங்கொடுத்து அவர்களை விசாரிக்கும்படி எஜமான் வைத்த உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரன் யாவன்? எஜமான் வரும்போது அப்படிச் செய்கிறவனாகக் காணப்படுகிற ஊழியக்காரனே பாக்கியவான். தன் ஆஸ்திகள் எல்லாவற்றின்மேலும் அவனை விசாரணைக்காரனாக வைப்பான்” (மத்தேயு 24:45-47).



## போதுமான எண்ணெய் வைத்திரு

இறுதியாக வேதாகமம் எச்சரிக்கிறது, “அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள்” (2 பேதுரு 3:4).

கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமில்லாமலிருப்பதற்கான ஒரு வழி, எதிரியை குறைத்து மதிப்பிட்டு கண் விழித்திருக்கும் உணர்வை இழப்பதே ஆகும். உண்மை, அநேக தீவிரவாதிகள் வானம் இடிந்து விழுகிறது என்று எப்பொழுதும் நம்மிடம் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். அலப்புவாயர்களை தள்ளி வைத்துவிட்டு நாம் வாழும் காலம் பற்றி கவலையற்றிருப்பது சுலபம்தான்.

பியர்ல் ஹார்பர் (Pearl Harbor) மீது நடைபெற்ற படையெடுப்புக்கு முன்பதாக அதிகம் அறியப்பட்ட கிளார்க் பீச் என்பவர் செப்டம்பர் 6, 1941 அன்று எழுதினார், “ஹவாய் மீது ஜப்பானியர்களின் தாக்குதல் உலகத்தில் நடைபெறக்கூடிய ஒன்று அல்ல, அதனுடைய வெற்றி பெறும் தருணம் மில்லியனில் ஒன்றாகத்தான் இருக்கும். அமெரிக்க கொடியின் கீழ் இருக்கிற எந்த நிலையைக்காட்டிலும், பெருமை பெற்ற

சக்திவாய்ந்த அதிக தற்காப்பு இருப்பதுடன் அது தொலை தூரத்தினால் பாதுகாக்கப்பட்டிருக்கிறது". எதிரியின் பலத்தை பீச் தவறாக எடைபோட்டுவிட்டார்!

பத்துக் கன்னிகைகள் உவமையில், கடைசி நாட்களில் சில கிறிஸ்தவர்கள் மணவாளனுக்காக காத்திருக்கும்போது நித்திரை மயக்கமடைந்து தூங்கிவிடுவார்கள் என கிறிஸ்து போதித்தார். அவர்கள் விசுவாசத்தையும் பொறுமையையும் இழந்துவிடுவார்கள். அவர்களுடைய எண்ணெய் முடிந்துபோயிருக்கும் - பரிசுத்த ஆவியானவருடைய வெளிச்சமே. இதனால்தான் அவருடைய வருகை குறித்து பேசும்போது, இயேசு சொன்னார் நாம் எப்பொழுதும்,

> *"எச்சரிக்கையாயிருங்கள், விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள். ஒரு மனுஷன் தன் வீட்டைவிட்டு, புறத்தேசத்துக்குப் பிரயாணம்போக எத்தனிக்கும்போது, தன் ஊழியக்காரருக்கு அதிகாரங்கொடுத்து, அவனவனுக்குத் தன் வேலையையும் நியமித்து, விழித்திருக்கும்படிக்குக் காவல்காக்கிறவனுக்குக் கற்பிப்பான். அப்படியே நீங்களும் விழித்திருங்கள், ஏனெனில், வீட்டெஜமான் சாயங்காலத்திலோ, நடுராத்திரியிலோ, சேவல்கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவான் என்று நீங்கள் அறியீர்கள். நீங்கள் நினையாதவேளையில் அவன் வந்து, உங்களைத் தூங்குகிறவர்களாகக் கண்டுபிடியாதபடிக்கு விழித்திருங்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறதை எல்லாருக்கும் சொல்லுகிறேன், விழித்திருங்கள்" (மாற்கு 13:33-37).*

கிறிஸ்துவின் வருகைக்காக ஆயத்தப்படுதல் என்பது நாங்கள் சரியான சபையின் உறுப்பினர்கள் அல்லது கையில் ஞானஸ்தான சான்றிதழை பெற்றிருக்கிறோம் என்பதைக்காட்டிலும் அதிகமானது. இயேசுவுக்காக ஆயத்தமாயிருக்கிறோம் என்பது வெறும் சன்மார்க்க அடையாள சின்னத்தை உங்கள் சட்டைப்பையில் வைத்துக்கொள்வது அல்ல. கிறிஸ்துவின் மகிமையை உங்கள் இருதயத்தில் வைத்திருப்பதும், நீங்கள் ஆயத்தமாயிருக்கும்படி ஆவியானவரின் இன்றியமையாத எண்ணெயைப் பெற தினமும் ஜெபிப்பதுமே அதன் அர்த்தம் ஆகும்.

அவர்களுடைய நண்பர்களிடமிருந்து தங்கள் விளக்குகளுக்காக எண்ணெயை கடன் வாங்க முயற்சித்த ஐந்து புத்தியில்லாத கன்னிகைகள் போல நீங்கள் இயேசுவோடு உறவு வைத்துக்கொள்ள கடன் வாங்கமுடியாது. அது தனிப்பட்ட ஒன்றாயிருக்கவேண்டும். நீங்கள் மணவாளனுடன் உண்மையான நட்பு வைத்திருக்கிறீர்களா?

கிறிஸ்துவின் சிலுவையண்டைக்கு வருவதற்கு ஒவ்வொரு நாளும் நேரம் எடுப்பதின் மூலம் இயேசுவின் சீக்கிர வருகைக்கு நீங்கள் ஆயத்தப்படலாம். அவர் உங்கள் இருதயத்தில் வரவும் உங்களுடைய எல்லா பாவங்களையும் கழுவவும் மன்றாடுங்கள். உண்மையாக ஆயத்தமாயிருப்போரை ஏற்றுக்கொள்ள நம்முடைய பரலோக மணவாளன் வரும் அந்த மாபெரும் நாளுக்காக நீங்கள் ஆயத்தப்பட உங்களுக்கு வல்லமை தரும்படி ஆவியானவரை அழையுங்கள் மற்றும் இப்படியொரு சத்தம் வெளிப்படும்போது, "இதோ மணவாளன் வருகிறார்!" நீங்கள் உங்கள் தீவட்டிகளை ஏந்திக்கொண்டு சந்தோஷத்துடன் பதிலளிக்கலாம், "இவரே எங்கள் மாபெரும் அன்பின் தேவன், நாம் சென்று அவரை சந்திப்போம்!"



# உங்கள் கேள்விகள் பதிலளிக்கப்படுகின்றன



## கேள்வி: ஆர்மகெதோன் யுத்தம் என்றால் என்ன?

பதில்: *"அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச் சேர்த்தான்" (வெளிப்படுத்தின விசேஷம் 16:16).*


அர்மகெதோன் என்கின்ற வார்த்தை மர்மமான ஒன்றாயிருந்து இந்த வசனத்தில் மட்டும் காணப்பட்டு கிரேக்க இலக்கியத்தில் எங்குமே காணப்படவில்லை. இஸ்ரவேலின் சரித்திரத்தில் அநேக யுத்தங்கள் 'மெகிதோ' என்கின்ற மலையைச் சுற்றி நடைபெற்றன என்பதையே இது காட்டுகிறது. எலியாவுக்கும் பாகால் தீர்க்கதரிசிகளுக்கும் இடையே நடைபெற்ற போட்டி நடந்த இடமாகிய கர்மேல் மலை இருந்த இடமும் இங்கேதான்.

அநேக மக்கள் போதிப்பதற்கு மாறாக, அர்மகெதோன் யுத்தம் இரண்டு அரசியல் வல்லமைக்குள்ளே நடப்பது அல்ல – ரஷ்யா, சீனா மற்றும் இஸ்ரவேல் போல. அதற்கு பதில், அது கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் இடையில் நடைபெறும் இறுதி யுத்தம்.

வெளிப்படுத்தின விசேஷம் 12:17 – ல் வலுசர்ப்பம் ஸ்திரீயின் மேல் யுத்தம் பண்ணுவதைக் குறிப்பிடும்போது முதல்கட்ட அர்மகெதோன் விவரித்துச் சொல்லப்படுகிறது: "வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுகிறிஸ்துவைக்குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம் பண்ணப்போயிற்று". ஆயிரம் வருஷ முடிவில் சாத்தான், தேவ மக்களின் எதிரிகளை அடையாளப்படுத்தும் "கோகையும் மாகோகையும்" கூட்டிச் சேர்த்து பரிசுத்த நகரத்தை தாக்க முற்படும்போது நடைபெறும் இறுதி முடிவான யுத்தத்தை இது குறிக்கிறது. (வெளிப்படுத்தின விசேஷம் 20:8).

அர்மகெதோனில் கடைசி முயற்சியாக, சாத்தான் சீக்கிரத்தில் ஒரு நாள் கிறிஸ்துவைப்போல வேடம் தரித்து, உலக மக்கள் மிருகத்தை வணங்கும்படிக்கு உற்சாகப்படுத்துவான். அர்மகெதோனுக்காக ஆயத்தப்படுதல், வஞ்சனைகள் வரும்போது உறுதியாக நிற்றல் போன்றவை இப்பொழுதே நம்முடைய இருதயங்களில் நடைபெற வேண்டியது அவசியம், கடைசிகால சம்பவங்கள் முழு அளவில் ஏற்கனவே வந்துவிட்ட பிறகு அல்ல.

இரட்சிக்கப்பட்டோர் அர்மகெதோன் என்பதைப்பற்றி பயப்பட வேண்டிய அவசியமில்லை. அதற்கு பதிலாக அது இரட்சகருடன் நமக்கு இருக்கும் உறவை வளர்க்கவேண்டும். பீரங்கி படைவண்டிகள், துப்பாக்கிகள் அல்லது உணவை சேர்த்து வைத்திருக்கின்ற மறைவிடம் ஒருவரையும் பாதுகாக்காது. அதற்கு பதில், நாம் இயேசுவின் நீதியின் கவசத்தினால் உடுத்துவிக்கப்படவேண்டும்.



## கேள்வி: வெளிப்படுத்தின விசேஷத்தில் இருக்கும் தீர்க்கதரிசன காலகட்டத்தில் நாம் எங்கே இருக்கிறோம்?

பதில்: *"தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும்" (வெளிப்படுத்தின விசேஷம் 14:12).*

வெளிப்படுத்தின விசேஷம் 13 மற்றும் 14 – ல் விளக்கப்பட்டிருக்கும் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த அதிகாரங்களில் இரண்டு பெரிய மிருகங்களைக் குறித்து கையாளுகிறது. ஆதிகாரம் 13 – ல் முதல் மிருகம் - சமுத்திரத்திலிருந்து எழும்பி வந்த மிருகம், அதற்கு ஏழு தலைகளும் பத்து கொம்புகளும் இருக்கின்றன - காயப்பட்டிருந்தது, ஆனால் அதனுடைய "சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது". இந்தப் பிரிவின் காலம் ஏற்கனவே முடிந்துவிட்டது. பிறகு இரண்டாம் மிருகம் - அமெரிக்க - அது ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்பகளையுடையதாயிருந்து, வலுசர்ப்பத்தைப்போல பேசினது. (வெளிப்படுத்தின விசேஷம் 13:11) – களத்துக்கு வருகிறது, முதல் மிருகத்துக்கு ஒரு சொரூபத்தை உண்டாக்க தயாராயிருக்கிறது. அது பூமியிலுள்ள ஒவ்வொருவரும் முதல் மிருகத்தை வணங்க கட்டாயப்படுத்த முயற்சிக்கிறது.

தீர்க்கதரிசனத்தில், ஒரு ஆட்டுக்குட்டி கிறிஸ்துவின் அடையாளமாயிருக்கிறது, ஒரு வலுசர்ப்பம் சாத்தானின் அடையாளமாயிருக்கிறது. அமெரிக்காவுக்குள் இருக்கும் அரசியல் மற்றும் மத அமைப்புகள் புரோட்டஸ்டன்ட், கத்தோலிக்க மற்றும் ஆர்தோடாக்ஸ் ஆகிய சபைகளை ஒன்றிணைத்து ஒரு உலகளாவிய சபையை உருவாக்க, ஒரு போலியான சமாதானத்துக்காக தேவனுடைய கட்டளையை துரதிஷ்டவசமாக குறைத்து மதிப்பிடுவதை நாம் பார்க்கப்போகிறோம். எப்படியும், தேவனுக்கு உண்மையாயிருக்கும் மக்கள் மீதமாயிருப்பார்கள். அவர்கள் மிருகத்தின் முத்திரையை ஏற்றுக்கொள்ள மறுப்பார்கள், இவர்களே "தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்கள்" (வெளிப்படுத்தின விசேஷம் 14:12).

தேவனுடைய பிள்ளைகள் தேவனுக்காக அல்லது தேவனுக்கெதிராக ஒரு முடிவு எடுக்கக் கட்டாயப்படுத்தும் உலக சக்திகளின் சரித்திர காலத்தின் விளிம்பில் நாம் இருக்கிறோம். இந்த முரண்பாடு தேவனை சிருஷ்டிகர் என்று காட்டும் நான்காம் கட்டளையாகிய கற்பனை கவர்ந்தீர்க்கச் செய்யும். இதனால்தான் முதல் தூதனின் தூது நம்மை எச்சரிக்கிறது, "வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுதுக்கொள்ளுங்கள்" (வெளிப்படுத்தின விசேஷம் 14:7). தேவனுடைய கற்பனையை தெரிந்தெடுப்பவர்கள் ஜெயம் கொள்ளுவார்கள். இயேசு உறுதியளிக்கிறார், "முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்" (மத்தேயு 10:22).




## கேள்வி: வெளிப்படுத்தின விசேஷத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1,44,000 பேர் யார்?

பதில்: *“ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக் கோலையுடைய வேறொரு தூதன் சூரியன் உதிக்குந்திசையிலிருந்து ஏறிவரக்கண்டேன், அவன், பூமியையும் சமுத்திரத்தையும் சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம் பெற்ற அந்த நான்கு தூதரையும் நோக்கி: நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான். முத்திரை போடப்பட்டவர்களின் தொகையைச் சொல்லக்கேட்டேன், இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரை போடப்பட்டவர்கள் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேர்” (வெளிப்படுத்தின விசேஷம் 7:2-4).*

இயேசுவின் முதல் வருகையின் காலத்தில், பன்னிரண்டு சீஷர்களும் ஒரு “விசேஷித்த படைகளின்” மாதிரியாக இருந்தார்கள். இயேசுவுடன் மூன்றரை வருட தீவிர பயிற்சிக்குப்பின் அவர்கள் தேவனுடைய ராஜ்யத்துக்காக பெரும் வெற்றிகளைப்பெற சீஷர்கள் தேவனால் பயன்படுத்தப்பட்டனர். அவர்கள் சாத்தானின் கோட்டையை உடைத்தெரிந்து புதிய எழுப்புதல் வரவும், கிறிஸ்தவ விசுவாசம் விருத்தியடையவும் முன்னின்றார்கள்.

ஆனால் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் வேறொரு விசேஷித்த படையின் பிரிவு ஆகிய ஒரு பெரிய படையாகிய 1,44,000 பற்றி சொல்லுகிறது. அவர்கள் ஆட்டுக்குட்டியானவருடன் ஒரு விசேஷித்த உறவு வைத்திருக்கிறார்கள், மற்றும் அவர்கள் ஒரு விசேஷித்த பெயருடன் முத்திரிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு விசேஷித்த பாடலையும் பாடுகிறார்கள். 1,44,000 பேர் ஏன் அவ்வளவு முக்கியமானவர்கள்? ஏனென்றால் அவர்கள் கடைசி நாட்களில் பெரும்பணி ஒன்றைச் செய்ய நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்: அது இயேசுவின் வருகைக்கு உலகத்தை ஆயத்தப்படுத்துவது.

ஆனாலும் அநேகர் இந்த குழுவினால் தடுமாறிப்போயிருக்கிறார்கள் - அவர்களைப்பற்றி நிறையகுழப்பம் இருந்து கொண்டிருக்கிறது. அப்படியானால் எதுதான் சரியான பரிசுத்த சேனை மற்றும் முடிவு காலத்துக்கு முன்பாக யார் இதனை நிரப்புவர்?

ஒவ்வொரு கோத்திரத்திலிரந்தும் 12,000 பேரைக் கொண்ட இந்த தனித்தன்மை வாய்ந்த கூட்டம் இஸ்ரவேல் சந்ததியாராகிய பன்னிரண்டு கோத்திரங்களை உள்ளடக்கியது என நாம் சொல்லப்படுகிறோம், அவர்கள், யூதா, ரூபன், காத், ஆசேர், நப்தலி, மனாசே, சிமியோன், லேவி, இசக்கார், செபுலோன், யோசேப்பு மற்றும் பென்யமீன் என்பவர்களே. இயேசுவின் பிறப்பிற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பதாக வடதேசத்து பத்து கோத்திரங்கள் அசீரியர்களால் வெற்றி கொள்ளப்பட்டு சிதறடிக்கப்பட்டக் காரணத்தினால், பழங்கால எபிரேய கோத்திரங்களின் 12,000 தலைவர்களை நேரடியாக வெளிப்படுத்தின விசேஷம் சொல்லுகிறது என்பது சாத்திமில்லாத ஒன்று. அடிக்கடி, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் உபயோகப்படுத்தப்படும் பெயர்கள் அடையாள பொருள் கொண்டவை. இதனால், 1,44,000 பேர் என்பது உலகம் முழுவதிலும் இருக்கின்ற கிறிஸ்தவ விசுவாசிகளை உள்ளடக்கியது.

## கேள்வி: இயேசு வருமுன்பதாக எருசலேமில் தேவாலயம் திரும்ப கட்டப்படுமா?

பதில்: *“தேவாலயத்திலும் பெரியவர் இங்கே இருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” (மத்தேயு 12:6).*

மத்திய கிழக்கு பகுதிகளில் நிலவிவரும் ஸ்திரத்தன்மையை பயமுறுத்தும் தொடர் கொந்தளிப்புகளுக்கு மத்தியில், அநேக வேதாகம உரையாசிரியர்கள் வருகின்ற வருடங்களில் யூத ஆலயம் கட்டப்படுமா என கணிக்கின்றனர். மொத்த கிறிஸ்தவ ஊழியங்களும் இயேசுவின் வருகையை துரிதப்படுத்துவதற்காக தேவாலயத்தை கட்டுவதற்கான உதவிகளை செய்ய முற்படுகின்றன. அநேகருக்கு, அப்படிப்பட்ட ஒரு சம்பவம் பூமியின் கடைசி சரித்திரத்தின் ஆரம்பத்தை காட்டுகிறதாக இருக்கிறது.

எப்படியும், ஆலயம் திரும்ப கட்டப்படுதலைக்குறித்த பெரும்பாலான பார்வை ஒரு ஒற்றை தெளிவற்ற அந்திக்கிறிஸ்துவைப்பற்றி 2 தெசலோனிக்கேயர் 2 – ல் சொல்லப்படுவதிலிருந்து எழும்புகிறது, “எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள், ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது. அவன் எதிர்த்துநிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்” (வசனங்கள் 3,4).

அந்திக்கிறிஸ்து ஆலயத்தில் உட்கார்வதற்கு அது மறுபடியும் கட்டப்பட வேண்டியிருக்கிறது என்று அநேகர் சொல்லகின்றனர். இந்த நம்பிக்கையை ஆதரிப்போர் “சீயோனிய கிறிஸ்தவர்கள்” என்று அழைக்கப்படுகின்றனர் மற்றும் அவர்களைச் சேர்ந்தவர்கள்தான் ஹால் லின்ட்சே (Hal Lindsey) டிம் லாயே (Tim LaHaye) மற்றும் ஜான் ஹாகி (John Hagee) போன்ற பிரசித்திப் பெற்ற எழுத்தாளர்கள், அவர்களுடைய வெளியிடப்பட்ட புத்தக விற்பனை 70 மில்லியன் பிரதிகளையும் மிஞ்சியது – பிரசித்திப்பெற்ற ‘பின்னால்விடப்பட்டோர்’ என்கின்ற தொடரையும் சேர்த்து, அவர்களுடைய நம்பிக்கைகள் இறையியல் கல்லூரிகள் சிலவற்றால் அங்கிகரிக்கப்படுகின்றன.

ஆனால் அவைகள் சரிதானா? ஆரம்பித்துவைக்க 1 நாளாகமம் 17:11,12 வசனங்களுக்குச் செல்வோம்: “....உன் நாட்கள் நிறைவேறும்போது, நான் உனக்குப்பின்பு உன் புத்திரரில் ஒருவனாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி, அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன். அவன் எனக்கு ஒரு ஆலயத்தைக் கட்டுவான்; அவன் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன்.” தாவீது ராஜாவுக்கு கொடுக்கப்பட்ட இந்த தீர்க்கதரிசனம் அவனுடைய மகன் ஆலயத்தைக் கட்டுவான் என சொல்லுகிறது.

இந்த வசனம், வேதாகமத்தில் காணப்படும் இரட்டை தீர்க்கதரிசனங்களின் தெளிவான எடுத்துகாட்டுகளில் ஒன்று. அவரது சபையான ஆவிக்குரிய ஆலயத்தைக் கட்டிய தாவீதின் குமாரனாகிய இயேசுவை முதன்மைப்படுத்தி பேசுகிறது. இதனால் தான் இயேசு மத தலைவர்களிடம் சொன்னர், “இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்றார்”. அப்பொழுது யூதர்கள் சொன்னது: “இந்த ஆலயத்தைக் கட்ட நாற்பத்தாறு வருஷம் சென்றதே, நீர் இதை மூன்று நாளைக்குள்ளே எழுப்புவீரோ என்றார்கள். அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக்குறித்துப் பேசினார்” (யோவான் 2:19-21).

மற்றும், உண்மையில், சபையானது கிறிஸ்துவின் சரீரம் என அழைக்கப்படுகிறது. அதனால், பவுல், அந்திக்கிறிஸ்து தேவனின் ஆலயத்தில் அமர்ந்திருப்பதைப் பற்றி 2 தெசலோனிக்கேயரில் பேசும்போது, மறுபடியும் கட்டப்பட்ட யூத ஆலயத்தைக்குறித்து பேசவில்லை, மாறாக தன்னைத்தானே கிறிஸ்தவ சபையின் தலைவராக பாவித்தக்கொள்ளும் அந்திக்கிறிஸ்துவின் வல்லமைப்பற்றி பேசுகிறார்!



## கேள்வி: பாழாக்குகிற அருவருப்பு என்றால் என்ன?

பதில்: *"மேலும், பாழாக்குகிற அருவருப்பைக்குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே.....நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது, யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்" (மத்தேயு 24:15,16).*

அவருடைய சீஷர்கள் கேட்ட கேள்விக்கு இங்கே இயேசு பதிலளித்தார், "இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?" (மத்தேயு 24:3). அப்பொழுது தான் கிறிஸ்து இந்த அருவருப்பு பற்றி சொன்னார், "ஏனெனில், உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்" (வசனம் 21).

சில அறிஞர்கள் இயேசுவின் இந்த குறிப்புகள் நிறைவேறிய தீர்க்கதரிசனம் என அடையாளம் காட்டுகின்றனர் – கி.மு.168 மற்றும் கி.மு.165 காலக்கட்டத்தில் ஆண்டியாக்கஸ் எபிப்பேனஸ் (Antiochus Epiphanes) ஆலய பலிகளை நிறுத்தியபோது இது நிறைவேறியதாக கூறுகின்றனர். அவர் பன்றியை பலியாக செலுத்தியபோது இந்த அருவருப்பு நடந்தது என அவர்கள் கூறுகின்றனர். ஆனால் இது சாத்திமில்லை ஏனென்றால் கிறிஸ்துவின் பிறப்புக்கு 100 வருடங்களுக்கு முன்பதாக இது நடைபெற்றது – ஆனால் இயேசு இந்த சம்பவத்தை இனி வரப்போவதான சம்பவம் என்கிறார். மற்றவர்கள், அந்திக்கிறிஸ்துவால் எருசலேம் ஆலயம் மேற்கொள்ளப்படுவதையே அருவருப்பு என பார்க்கிறார்கள்.

இதற்கான பதிலை இயேசு தானியேல் புத்தகத்தில் சுட்டிகாட்டுகிறார். இங்கே மூன்றுவிதமான அருவருப்புகளை நாம் பார்க்கிறோம். முதலாவது தானியேல் காலத்தின் ஆலய அழிவைச் சார்ந்திருக்கிறது. இரண்டாவது இயேசுவின் காலத்தின் பாழாக்குதல் பற்றி தொடர்புடையது (இரண்டாம் ஆலயம் சம்பந்தப்பட்டது). மற்றும் மூன்றாவது முடிவ காலத்தில் நடைபெறும் பாழாக்கும் அருவருப்பு சம்பந்தப்பட்டது (இது முழு சபையையும் சம்பந்தப்படுத்துகிறது).

முதல் அருவருப்பு மற்ற அருவருப்புகளின் "நிழலாகவே" இருக்கிறது. நேபுகாத்நேச்சார் தேவனுடைய ஆலயத்தின் பாத்திரங்களை தங்களுடைய ஒரு தவறான கடவுளின் ஆலயத்துக்கு எடுத்துச் சென்றபோது அது நடந்தது (தானியேல் 1:1,2). பிறகு சாலமோனின் ஆலயம் தீக்கிரையாக்கப்பட்டு, தரைமட்டமானது.

அடுத்த அருவருப்பு தேவனுடைய ஆலயத்தில் நடைபெறும் தீமைகளினால் அவருக்கு ஏற்பட்ட அதிருப்தியை இயேசு வெளிக்காட்டின அந்த நேரத்துக்கு சம்பந்தப்பட்டது.

முடிவாக இரண்டாம் ஆலயம் கி.பி.70 – ல் ரோமர்களால் அடிக்கப்பட இந்த நடவடிக்கை வழி நடத்தியது. இதனால்தான், கடைசியாக அந்த ஆலயத்தை விட்டு செல்லும்போது இயேசு தீர்க்கதரிசன கண்களோடு அதனுடைய வரப்போகும் அழிவினைப் பார்த்து சொன்னார், "இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" (மத்தேயு 23:38).

அடுத்த அதிகாரத்தில், ஆலயத்தின் அழிவு பற்றி இன்னமும் தெளிவுப்படுத்தி கூறினார், ரோமர்கள் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு இடித்துப் போடுவர் என்றார் (மத்தேயு 24:1,2). லூக்காவின் புத்தகத்தில் இயேசு இவ்விதமாய் வார்த்தைகளை சொன்னார் "எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும்போது, அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள். அப்பொழுது யூதேயாவிலிருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகவும், எருசலேமிலிருக்கிறவர்கள் வெளியே புறப்படவும், நாட்டுப்புறங்களிலிருக்கிறவர்கள் நகரத்தில் பிரவேசியாமலிருக்கவும் கடவர்கள்" (லூக்கா 21:20,21).

தேவனுடைய ஆவிக்குரிய ஆலயத்தில் - அவருடைய சபை முடிவுகாலத்தில் புறமதத்தையும் கிறிஸ்துவத்தையும் கலந்துவிட்டு தீட்டையும் அழிவையும் கொண்டு வரும் தவறான சன்மார்க்க வல்லமை அல்லது அந்திக்கிறிஸ்துவைப்பற்றி தானியேல் (8:13, 11:31, 12:11) பேசுகிறது.

ஆரம்பகால கிறிஸ்தவர்களுக்கு எருசலேமின் அழிவுக்கு முன்பதாக ஓடிப்போக தேவன் எச்சரிப்புக் கொடுத்ததுபோல, கடைசி காலத்தில், கெட்டுப்போன சபை உலக வல்லமைகளோடு ஒன்று சேரும்போது முடிவு காலம் சீக்கிரத்தில் வரப்போகிறது என்பதை நாம் அறிவோம் என அதுபோன்ற ஒரு எச்சரிப்பை கர்த்தர் கொடுக்கிறார். நாம் பாபிலோனை விட்டு விலகவேண்டும் அல்லது அவளுடைய வாதைகளைப் பெறவேண்டும். "பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்.....ஒரு நாழிகையிலே இவள் பாழாய்ப் போனாளே!" (வெளிப்படுத்தின விசேஷம் 18:4, 19).



## கேள்வி: சூரியன் உதிக்கும் திசையிலிருந்து வரும் ராஜாக்களுக்கு வழி ஆயத்தமாகும்படி ஐபிராத்து நதியின் தண்ணீர் வற்றிப் போயிற்று என்பதன் பொருள் என்ன?

பதில்: *"ஆறாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஐபிராத் என்னும் பெரிய நதியின் மேல் ஊற்றினான்; அப்பொழுது சூரியன் உதிக்குந் திசையிலிருந்துவரும் ராஜாக்களுக்கு வழி ஆயத்தமாகும்படி அந்த நதியின் தண்ணீர் வற்றிப்போயிற்று" (வெளிப்படுத்தின விசேஷம் 16:12).*

இறுதி அர்மகெதோன் யுத்தத்தில், கிழக்கத்திய ராஜாக்கள் வருவதற்காக ஐபிராத்து நதி வற்றிப்போகும் என வேதாகமம் சொல்லுகிறது. பாபிலோன் பெர்சிய ராஜாவாகிய கோரேஸ் என்பவனால் தோற்கடிக்கப்பட்டபோது, அவனுடைய படைகள் ஐபிராத்து நதியின் தண்ணீரை நகரத்துக்கு மத்தியில் தாராளமாய் ஓடுவதைத் தடுத்து திசை திருப்பி அவனுடைய இராணுவத்தினர் கடந்து செல்லுமளவு தண்ணீர் ஓட்டத்தைக் குறைத்து உள்ளே புகுவதற்கு வழிவகுத்து அதனுடைய பெரும் கோட்டைச் சுவருக்கு அடியில் ஊடுருவி பாபிலோனைக் கைப்பற்றிய செயல் ஒரு அடையாளமாக காட்டப்படுகிறது.

இந்த பகுதியில், வேதாகமத்தில் பொதுவாக காணப்படுவதுபோல, தண்ணீர் ஜனங்களைக் குறிக்கிறது (வெளிப்படுத்தின விசேஷம் 17:15). ஐபிராத்து நதியின் தண்ணீர் வற்றிப்போவது என்பது மிருகத்துக்கு (சாத்தானின் ராஜ்யம், பாபிலோன்) ஆதரவாயிருந்த ஜனங்கள் அதற்கான ஆதரவை விலக்கி கொள்ளுவார்கள் என்பதற்கு அடையாளமாயிருக்கிறது. அதனுடைய கூட்டாளிகளின் கூட்டணி (வெளிப்படுத்தின விசேஷம் 16:13,14) பிரிந்து போகும் (வெளிப்படுத்தின விசேஷம் 16:19). கிழக்கத்திய ராஜாக்கள் இயேசுவையும் அவருடைய இரண்டாம் வருகையையும் அதிகமாக குறிக்கிறது, இது அர்மகெதோன் யுத்தத்தை முடித்து வைத்து அவருடைய ஜனங்களை இரட்சிக்கும் (வெளிப்படுத்தின விசேஷம் 6:14-17, 16:18-21, 19:11-20).

# இந்தப் பத்திரிக்கையை நீங்கள் வாசித்து மகிழ்ந்தீர்களானால் நீங்கள் இவைகளையும் நேசிப்பீர்கள்....




## அற்புதமான ஆரோக்கிய உண்மைகள்!

இந்த முழு வண்ண பத்திரிகை எட்டு சக்திவாய்ந்த வேதாகம ஆரோக்கிய பாடங்களை முன் வைக்கிறது – உடற்பயிற்சி மற்றும் ஊட்டச்சத்திலிருந்து சூரிய ஒளி மற்றும் ஓய்வு வரை – எல்லாமே நேரடியாகவும் கவர்ச்சியூட்டும் வகையிலும்! சிருஷ்டிகரின் சுகமாக்கும் கரங்களின் அனுபவத்தை தேவைப்படும் யாராகிலும் ஒருவருடைய வாழ்க்கையை மாற்றுங்கள்!




## உங்கள் வாழ்க்கையின் ஓய்வு!

இந்த வகை பத்திரிகைகளில் ஒன்றாகிய இது ஏழாம் நாள் ஓய்வு பற்றி ஆச்சரியமான உண்மைகளை வெளிப்படுத்துகிறது! ஓய்வு நாளின் தோற்றம், எப்படி மத தலைவர்கள் அதனை சிதைத்தார்கள், எப்படி சபைக்குள் இருக்கின்றவர்களே அதனை மாற்ற முயற்சித்தார்கள் போன்றவற்றை நீங்கள் கண்டுபிடிப்பீர்கள். ஆனால் இதற்கும் மேலாக, எல்லா மனுகுலத்திற்கும் அது ஒரு நம்பமுடியாத நித்திய ஆசீர்வாதமாக இருக்கும் என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

## Bookstore.AFTV.in




## அண்டசராசர போராட்டம் - தீமையின் துவக்கம்

**தீமையின் துவக்கம் ஒரு ஆழமான, உலகளாவிய ஆய்வுப் பொருள்.**
**தீங்கு எங்கிருந்து வந்தது?**
**தேவன் ஏன் வேதனைகளை தொடர அனுமதித்திருக்கிறார்?**
**பாவமும் தீமையும் எப்பொழுதாவது அழிக்கப்படுமா – அழிக்கப்படும் என்றால் எப்படி?**

இந்த தகவல் அளிக்கும், உற்சாகப்படுத்தக்கூடிய ஆவணம் இந்த எல்லா மர்மத்திற்கும் பதிலளிக்கும் மற்றும் ஆவிக்குரிய திரையை விலக்கி பரலோகத்தில் என்ன நடந்தது என்றும், நாம் எப்படி அதனை மறுபடியும் காணமுடியும் என்பவைகளைப்பற்றி நீங்கள் அறிந்து கொள்ளவேண்டிய ஒவ்வொன்றையும் வெளிப்படுத்தும்.

இது உங்களை உற்சாகப்படுத்தி நம்பிக்கையை கொடுக்கப்போகிறது.

பதிவிறக்கம் செய்யவும் Cosmic.AFTV.in

பதிவு செய்ய, விருப்பப்பட, பகிர்ந்துகொள்ள ஒரு கணம் எடுங்கள்.
இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பரப்ப உதவி செய்யுங்கள்






# முடிவு கால சொல்லியல் அகராதி

**பாழாக்குகிற அருவருப்பு –** சத்தியத்துக்கு எதிராக இருப்பதினால் தேவனால் மோசமாக கருதப்படும் தொழுகையின் ஒரு மாற்று அமைப்பு. இந்த சொற்றொடர் மத்தேயு 24:15 – ல் காணப்படுகிறது மற்றும் தானியேல் புத்தகத்தில் வெவ்வேறு விதமாக காணப்படுகிறது. அதனுடைய நேரடிப் பொருள்: "ஒரு திகைக்க வைக்கும் வெறுக்கப்படக்கூடிய ஒன்று."

**விசுவாச துரோகம்** - அநேக நேரங்களில் வேதாகமத்தில் சுட்டிக்காட்டப்படும் கிளர்ச்சி செய்தல், விழுகை மற்றும் வேசித்தனம் போன்றவைகளில் வேண்டுமென்றே தேவனிடமிருந்து பின்வாங்கி போவது. அந்நிய தேவர்களின் கொள்கைகளையும் முறைமைகளையும் சபைக்குள் கொண்டு வந்த ரோம போப்பு மார்க்கத்தின் எழுச்சி பற்றி விவரிக்கும்போது "மாபெரும் விசுவாச துரோகம்" என்கின்ற பதம் பயன்படுத்தப்படுகிறது.

**அர்மகெதோன்** - வேதாகமத்தில் ஒருமுறைதான் காணப்படுகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 16:16) மற்றும் அது நேரடியாக இஸ்ரவேலின் சரித்திரத்தில் அநேக யுத்தங்கள் நடைபெற்ற ஒரு இடமான "மெகிதோ மலை" – யை பொருள்படுகிறது. கடைசிகால இரண்டு சக்திகளுக்கும் இடையில் நடைபெறும் ஒரு நேரடியான யுத்தத்தை குறிப்பதாக சிலர் நம்புகிறார்கள், ஆனால் இது கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் நடைபெறும் இறுதி போராட்டத்தை அடையாளப்படுத்துகிறது.

**இறையருள் ஆட்சிமுறை –** வேதாகமத்தை "எதிர்காலவாதிகள்" முறைமையில் விளக்குவது. தேவன் தம்முடைய வாக்குறுதிகளை நேரடியாக இஸ்ரவேல் நாட்டிற்கு இன்னமும் நிறைவேற்ற வேண்டி இருக்கிறது மற்றும் பெரும்பாலான வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் பகுதிகள் எதிர்காலத்துக்குரியவை என்று கூறுகிறது.

**நான்கு குதிரைகளின்மேல் ஏறியிருந்தவர்கள்** - இயேசுவின் மரணத்துக்குப்பின் நடந்த சம்பவங்களையும் அவருடைய இரண்டாம் வருகைக்குமுன் நடைபெறும் சம்பவங்களையும் வெளிப்படுத்தின விசேஷம் 6-ம் அதிகாரத்தில் நான்கு வெவ்வேறு நிறமுள்ள குதிரைகள் மூலம் விவரிக்கிறது.

**எதிர்கால இயல்** - நேரடியான போக்கில் உலகளவில் எதிர்கால சம்பவங்களை ஏற்றுக்கொள்ளும் வெளிப்படுத்தின விசேஷத்தின் ஒரு வியாக்கியானம் (அடையாள முறை அல்லது வரலாற்று முறைக்கு எதிரானது). இப்படிப்பட்ட நம்பிக்கைகள் ஆயிரம் வருஷ கால முன்பியலுக்கும் இறையருள் ஆட்சி முறைக்கும் தொடர்புடையவை மற்றும் பின்னால் விடப்பட்டோர் என்ற தொடரில் பார்ப்பது போல "இரகசிய எடுத்துக்கொள்ளப்படுதல்" கொள்கைக்கு அடித்தளமாக இது அமைகிறது.

**இரகசிய எடுத்துக்கொள்ளப்படுதல்** - இரட்சிக்கப்படாதோர் பூமியில் கொள்ளை நோய்களினால் துன்பப்பட விட்டுவிடப்படும் வேளையில் உபத்திரவ காலத்துக்கு முன் தன்னுடைய சபையை பிரித்துக்கொள்ள அல்லது எடுத்துக்கொள்ள இயேசு இரகசியமாக திரும்பி வருவார் என்கின்ற ஒரு பிரசித்தி பெற்ற ஆனால் கேள்விக்குரிய நம்பிக்கை.

**வரலாற்றுவாதம்** - வரலாற்று சம்பவங்களையும் ஜனங்களையும் வைத்து வேதாகமத்தை வியாக்கியானம் செய்யும் முறை. தீர்க்கதரிசனத்தின் தொடர் நிறைவேற்றத்தை முன் வைக்கிறது மற்றும் மார்ட்டின் லூத்தர், ஜான் கால்வின் போன்ற பெரும்பாலான புரோட்டஸ்டண்ட் சீர்த்திருத்தவாதிகளின் பார்வையாக இருக்கின்றது.

இலட்சியவாதம் - வேதாகம தீர்க்கதரிசனங்களை வியாக்கியானம் செய்ய "ஆவிக்குரிய" அல்லது "உருவகம்" சார்ந்த அணுகுமுறை என்றும் அறியப்படுகிறது, இதில் எல்லா உருவகங்களின் தொகுதியும் நேரிடையான சம்பவங்களாக அல்லாமல் அடையாளங்களாக பார்க்கப்படுகிறது.

**ஆட்டுக்குட்டியின் கலியாண விருந்து –** அவருடைய இரண்டாம் வருகைக்குப்பிறகு வெளிப்படுத்தின விசேஷம் 19:6-9 – ல் சொல்லப்படுவதுபோல கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் இணைக்கும் ஒரு சம்பவம். இயேசு மத்தேயு 22:1-14 – ல் சொன்ன ஒரு உவமையைக் கவனிக்கவைக்கிறது. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் நான்கு முறை சபையை கிறிஸ்துவின் மணவாட்டியாக பேசுகிறது.

**புதிய பூமி –** புதிய ஏற்பாட்டில் இரண்டு முறை பேசப்படும் இது ஆயிரம் வருட காலத்துக்குப்பிறகு பரலோகத்திலிருந்து வரும் அக்கினியினால் இந்த பூமி சுத்திகரிக்கப்பட்ட பின்பு புதிதாக சிருஷ்டிக்கப்படும் பூமியைக் குறிக்கிறது. அதனுடைய தலைநகரம் புதிய எருசலேமாயிருக்கும். வெளிப்படுத்தின விசேஷம் 21:1-4 யை பார்க்கவும்.

**புதிய எருசலேம்** - தம்முடைய மக்களுக்காக (யோவான் 14:1-3) கிறிஸ்துவால் பரலோகத்தில் ஆயத்தப்படுத்தும் நகரத்தின் பெயர். ஆயிரம் வருட கால முடிவில் இது பூமிக்கு இறங்கிவரும் புதிய தலைநகரம் (வெளிப்படுத்தின விசேஷம் 21:1,2)

**தேவனின் வெளிப்பாடு முடிந்து விட்டது எனும் கொள்கை –** வேதாகமத்தின் பெரும்பாலான தீர்க்கதரிசனங்கள் ஏற்கனவே நடைபெற்று விட்டன எனும் பார்வை. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் பேசப்பட்டிருக்கும் சம்பவங்கள் யாவும் முதல் நூற்றாண்டில் முடிவடைந்துவிட்டன என வியாக்கியானப்படுத்தப்படுகிறது.

**முன்னோடி –** ஒரு உயரிய நபர், பொருள் அல்லது சம்பவம் இவற்றை முன் நிழலிட்டுக் காட்டும் ஒரு வேதாகம நபர், பொருள் அல்லது சம்பவம். பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஸ்தலத்துக்கு கொண்டுவரப்பட்ட ஒரு பழுதில்லாத ஆட்டுக்குட்டி அவருடைய பலியை முன்நிழலிட்டுக் காட்டிய கிறிஸ்துவுக்கு முன்னோடியாக இருந்தது.



AMAZING FACTS
India
+91 916 916 4480

இந்த பத்திரிகையைப் படித்து மகிழ்ந்தீர்களா?
வேதாகம சத்தியத்தை அதிகமாக ஆராயுங்கள்

AFTV.in

# உங்களில் இருக்கும் வேதாகம அறிவை வெளிக்காட்டுங்கள்!

அமேசிங் ஃபேக்ட்சின் வேதாகம படிப்பிற்கான வழிகாட்டும் புத்தகங்கள் வாயிலாக முடிவு காலத்துக்கான அதிகமாக கவர்ந்தீர்க்கும் சத்தியத்தை கண்டு பிடியுங்கள்.




உங்கள் வேதாகம அறிவை அதிவேகமாக அதிகரியுங்கள் - 27 ஆழமான, உற்சாகமான வேதாகம பாடங்கள் வாயிலாக தேவனுடைய அன்பினால் ஊக்கம் பெறுங்கள்.

இன்றே www.AFTV.in வளைதளம் சென்று பதிவிடுங்கள்!

Suggested Donation Rs. 100